# டிசம்பர் பௌர்ணமி!

## ராஜேஷ்குமார்



## 1



அந்த டிசம்பர் வெள்ளிக்கிழமையின் அதி காலையில் பாலசூரியனின் ஆரஞ்சு வர்ணம் கொஞ்சம் அதிகமாய் ஒட்டியிருக்க, பொழுது ஸ்லோமோஷனில் விடிந்து கொண்டிருந்தது. பாலிதீன் பைக்குள் போட்டு வைத்த பண்டம் மாதிரி சென்னை பனி மூட்டத் துக்குள் வசமாய் சிக்கி யிருந்தது. விசுக்கென்று வீசிய காற்றில் இமயமலை சாரலின் குளிர்.

உல்லன் சால்வை யைப் போர்த்திக் கொண்டு பங்களாவின் மாடியறை ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி, பின்பக்கம்



காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினார். வாயில் பைப் புகைந்தது.

அவருடைய செக்ரட்டரி பரசுராம் நின்றிருந்தார்.

''குட்மார்னிங் சார்.''

பதிலுக்கு குட்மார்னிங் சொல்லாமல் வாயிலிருந்த பைப்பை எடுத்துவிட்டு கேட்டார்.

''ஏர்போர்ட்டுக்கு போன் பண்ணி கேட்டீங்களா?''

''கேட்டேன் ஸார்...''

''ஃப்ளைட் லேட்டா...''

''ரைட் டைம் ஸார். ஷெட்யூல் டைம்படி செவன் ஃபார்ட்டி ஃபைவ்க்கு ஃப்ளைட் லாண்ட் ஆயிடும் ஸார்...''

''இப்போ மணி என்ன?''

''ஃபைவ் ஃபார்ட்டி ஸார்...''

''இங்கிருந்து ஆறரை மணிக்கு ஏர்போர்ட் கிளம்பிப் போனா போதும் இல்லையா?''

''போதும் ஸார்...''

''பேண்ட் வாத்திய கோஷ்டி எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவாங்க?''

''ஏழு மணிக்கெல்லாம் வந்துடுவாங்க ஸார்...''

''பரசுராம்...''

''ஸார்...''

''என்னோட மகன் நித்தியன் ஒரு வருஷம் பூராவும் வெளிநாடுகள்ல தங்கியிருந்து ஃபைபர் ப்ராடக்ட் தொழில் நுணுக்கங்களை கத்துக்கிட்டு வெற்றிகரமாக ஊருக்குத் திரும்பறான். அவனுக்கு தரப்போகிற விளம்பரமும் வரவேற்பும் அமர்க்களமாக இருக்கணும்... என்னோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிள்லேயும் சரி... ரிலேடிவ் சர்க்கிள்லேயும் சரி, எல்லாரும் அசந்துபோற மாதிரி இருக்கணும்...''

பரசுராம் புன்னகைத்தார்.

"அதைப் பத்தி நீங்க கவலையே படவேண்டாம் ஸார். அது சம்பந்தமா எல்லா ஏற்பாடுகளையும் நான் பண்ணிட்டேன். முக்கியமான நாலு தமிழ் டெய்லி பேப்பர்லேயும் ரெண்டு இங்கிலீஷ் பேப்பர்லேயும் கலர் போட்டோவோடு முழுப்பக்க விளம்பரம் கொடுத்துட்டேன். ஆள் உயர ரோஜா மாலை சரியா ஏழு மணிக்கு ஏர் போர்ட்டுக்கே வந்துடும்."

பரசுராம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறையின் மூலை டீபாயில் இருந்த டெலிபோன் முணுமுணுத்துக் கூப்பிட்டது.

"போன்ல யார்ன்னு பாருங்க..."

பரசுராம் வேகவேகமாய் போய் ரிஸீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு ரிஸீவரின் மவுத் பீஸை இடது கை விரல்களால் பொத்திக் கொண்டு ருத்ரமூர்த்தியிடம் பவ்யமாய் சொன்னார்.

"ஸார்... உங்களுக்கு சம்பந்தியாகப் போகிற விஜயராகவன் லைன்ல இருக்கார். உங்ககிட்ட பேசணுமாம்..."

ருத்ரமூர்த்தி ரிஸீவரை வாங்கி காதுக்கு ஒட்ட வைத்து "ஹலோ விஜயராகவன், குட்மார்னிங்..." என்றார்.

"குட்மார்னிங்! என்ன மகன் ஃபாரினிலிருந்து வரப்போற சந்தோஷத்துல ராத்திரி பூராவும் தூங்கவேயில்லை போலிருக்கே?"

"எப்படி தூக்கம் வரும்? மகனைப் பார்த்து ஒரு வருஷம் ஆச்சே... நேத்து ராத்திரி பூராவும் ஒரு பொட்டு தூக்கமில்லை."

"உங்களுக்கு நேத்து ராத்திரி மட்டும்தான் தூக்கம் இல்ல. இங்கே என்னோட பொண்ணு விசாலிக்கு ரெண்டு வாரமா தூக்கம் கிடையாது. இருபத்தி நாலு மணி நேரமும் அவ கையில உங்க சன் நித்தியனோட போட்டோதான்."

"என் மருமக அவ்வளவு பாசமா இருக்காளா?"



"அதையேன் கேக்கறீங்க ருத்ரமூர்த்தி. சதா சர்வ காலமும் அவளுக்கு நித்தியனோட பேச்சுதான்."

"ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே இந்தக் கல்யாணம் முடிஞ்சிருக்க வேண்டியதுதான். எப்படியோ தள்ளிதள்ளிப் போயிட்டது..."

"இனியும் தள்ளிப் போடக்கூடாது ருத்ரமூர்த்தி. உங்க பையன் வந்ததுமே கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சு முகூர்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டியதுதான். நீங்க லேட் பண்ணினா மறுபடியும் உங்க பையன் வெளிநாட்டுக்கு கிளம்பிப் போயிடலாம்."

"இல்லை... இந்த தடவை கல்யாணம் தள்ளிப் போகாது. அடுத்த வாரத்துல ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயதார்த்தம் நடத்திடலாம். கல்யாணத்தை தை மாசம் வைச்சுக்கலாம். என்னோட மருமக விசாலி பக்கத்துல இருக்காளா?"

"ம்... இங்கதான் இருக்கா..."

"பேசச் சொல்லுங்க..."

"இதோ..."

அடுத்த பத்தாவது விநாடி விசாலியின் சாக்லேட் குரல் கேட்டது.

"குட்மார்னிங் மாமா..."

"என்னம்மா விசாலி, எப்படியிருக்கே?"

"உங்க சன் இந்த சென்னை மண்ணை மிதிக்கிற வரைக்கும் நான் சுகம் இல்லை மாமா."

ருத்ரமூர்த்தி சிரித்தார். "இன்னும் ரெண்டே மணி நேரம்தான் நித்தியன் உன் பக்கத்துல இருப்பான்"

"மாமா..."

"ம்..."

"எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன?"

''உங்க சன் வெளிநாட்டிலிருந்து வரும்போது இவதான் என் பொண்டாட்டின்னு யாரையாவது கூட்டிகிட்டு வந்துடமாட்டாரே?''

''சேச்சே! அவன் என்னோட புள்ளையம்மா...! அப்படியெல்லாம் விளையாட்டுக்குக்கூட கற்பனை பண்ணிப் பார்க்காதே... நித்தியன் உனக்குத்தான்னு ரெண்டு வருஷத்துக்கு முந்தியே நானும் உன்னோட அப்பாவும் பட்டா போட்டு வெச்சுட்டோம்''

''மாமா...''

''என்ன?''

''நானும் ஏர்போர்ட்டுக்கு வரலாமா?''

''இதுக்குப்போய் நீ என்கிட்ட பர்மிஷன் கேட்கணுமா என்ன? தாராளமா வரலாம்.''

''தேங்க்யூ மாமா... நானும் அப்பாவும் சரியா ஏழு மணிக்கு எங்க வீட்லயிருந்து கார்ல புறப்பட்டு ஏர்போர்ட்டுக்கு வந்துடறோம்.''

''வாங்க... நான் லௌஞ்சுல வெயிட் பண்ணிட்டிருக்கேன்.''

ரிஸீவர்கள் சாத்தப்பட்டன.

★★★

ஏர்போர்ட்.

காலை மணி 7.25

பொன்னை உருக்கி நெய்தது போன்ற நிறசில் ஒரு பட்டுச்சேலையைக் கட்டியிருந்த விசாலி கொஞ்சம் அதிகப்படியான மேக்கப்பில் அமர்க்களம் செய்தாள். அவளுக்குப் பக்கத்திலேயே அப்பா விஜயராகவனும் அம்மா புவனேசுவரியும் டை அடித்த தலைகளோடு பிடிவாதமாய் இளமையைக் காட்ட முயற்சி செய்திருந்தார்கள். ஒரு பெரிய ஆள் உயர ரோஜா மாலையை இரண்டு பேர் தாங்கிப் பிடித்தபடி தெரிய பக்கத்திலேயே ருத்ரமூர்த்தி நின்றிருந்தார். வீசிக் கொண்டிருந்த காற்றில் ரோஜாவின் இதழ்கள் இலவசமாய் மணத்தன.



விசாலி மெல்ல பக்கத்தில் வந்து நின்று ''மாமா'' என்றாள்.

''என்னம்மா?''

''இந்த மாலையை அவருக்கு போடப் போறது யாரு?''

''ஏம்மா, நான்தான்...''

''நான் போடறேனே...!''

''சரி... போடு... நான் போடறதைக் காட்டிலும் நீ போடறதுதான் நித்தியனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.''

''அப்புறம்... இன்னொரு ரிக்வெஸ்ட் மாமா.''

''என்ன?''

''வெளிநாட்டுக்கு போய் தொழில் நுணுக்கங் களைக் கத்துக்கிட்டு வெற்றிகரமாக திரும்பி யிருக்கிற உங்க சன்னுக்கு, ஹோட்டல் சோழாவில் ஒரு டின்னர் பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கு.''

''இதெல்லாம் எதுக்கும்மா...?''

''நோ... நோ... ஏற்பாடு பண்ணியாச்சு.''

''என்ன விஜயராகவன் இது...?''

அவர் சிரித்தார்.

''எனக்கே தெரியாது ருத்ரமூர்த்தி. ஹோட்ட லுக்குப்போய் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டு வந்து சொல்றா... கல்யாணத்துக்கு முன்னாடி அப்படியெல்லாம் பிஹேவ் பண்ணக்கூடாதுன்னு அவளுக்குத் தெரியலை. எல்லாத்தையும் ஜோவியலா எடுத்துக்கற மாதிரி இந்தக் கல்யாணத்தையும் அதே மாதிரி எடுத்துக்கிட்டா. உங்களுக்கு இதுல இஷ்டம் இல்லேன்னா கேன்ஸல் பண்ணிடலாம்.''

''என்னது கேன்ஸலா? நோ... நோ... நானும் நித்தியனும் டின்னர்ல கலந்துக்கறோம்... ஓகே...''

''தேங்க்யூ மாமா.''

செக்ரட்டரி பரசுராம் பக்கத்தில் வந்து நின்றார்.

''ஸார் ஃப்ளைட் இன்னும் பத்து நிமிஷத்துல லேண்ட் ஆயிடும்... ரிசப்ஷன்ல போய் கேட்டுட்டு வந்தேன்...''

காத்திருக்க ஆரம்பித்தார்கள். சரியாய் பத்தாவது நிமிஷம்.

கிழக்கு திசையின் ஒரு மூலையில் சின்னதாய் ஒரு வெள்ளிப்பறவை முளைத்து விநாடிக்கு விநாடி பெரிதாகி ரன்வேயின் கோடியில் தன் ராட்சஸ உலோக முகம் காட்டி இறங்கியது.

ரன்வேயின் ஒரு கிலோ மீட்டர் தூரத்தை விழுங்கி வேகம் குறைந்து நின்றது. விமானத்தின் இடுப்போடு படிகள் போய் ஒட்டிக் கொள்ள பயணிகள் இறங்க ஆரம்பித்தார்கள்.

ருத்ரமூர்த்தியின் பார்வை ஒவ்வொருவராய் தாவ பத்து பதினைந்து பயணிகளுக்குப் பிறகு நித்தியனின் முகம் தெரிந்தது.

கண்களில் பரவசம் காட்டி கைகளை அசைக்க.. நித்தியனும் அசைத்தான்.

விசாலி இமைக்காமல் நித்தியனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கேட்டாள்.

''மாமா... உங்க சன் போன வருஷம் பார்த்ததைக் காட்டிலும் இப்போ கொஞ்சம் இளைச்சிருக்கார்.''

''அவன் சாப்பிடற விஷயத்துல ரொம்பவும் மோசம். இனிமே நீதான் அவனைக் கவனிச்சுக்கணும்.''

''எனக்கு ஆறே ஆறு மாசம் டயம் கொடுங்க மாமா. உங்க சன்னை எஸ்.பி.பாலசுப்ரமணியம் மாதிரி உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்தறேன்.''

''இன்னியிலிருந்து அது உன்னோட பொறுப்பு...''

27 வயதுடன் அழகாய் இருந்த அந்த நித்தியன் கும்பலிலிருந்து பிரிந்து லௌஞ்சுக்கு வந்து ருத்ரமூர்த்தியின் காலைத் தொட்டுக் கும்பிட்டான்.



புன்னகையுடன் நிமிர்ந்தவனின் கழுத்தில் அந்த கனமான ரோஜா மாலை விழுந்தது. முகம் நிறாவும் சிரித்த விசாலியிடம் கேட்டான்.

''எப்படியிருக்கே விசாலி?''

''ஃபைன்... நீங்க...?''

''டபுள் பைன்...'' சொன்னவன் பக்கத்தில் நின்றிருந்த விஜயராகவனையும் புவனேசுவரியையும் பார்த்து கும்பிட்டான்.

''அங்கிள்! ஆன்ட்டி... நல்லாயிருக்கீங்களா?''

''எங்க சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல் நித்தியன். நானும் உங்க அத்தையும் இப்பத்தான் புதுசா கல்யாணம் பண்ணிக்கிட்ட ஜோடி மாதிரி சந்தோஷமாயிருக்கோம். ரெண்டாவது ஹனிமூனுக்கு காஷ்மீர் போலாமான்னு ஒரு வாரமா யோசனை...''

எல்லோரும் சிரிக்க புவனேசுவரி கணவனின் முதுகில் குத்தினாள்.

''உங்களுக்கு விவஸ்தையே கிடையாது.''

★★★

ஏர்போர்ட்டைவிட்டு வெளியே வந்தார்கள்.

விசாலி, விஜயராகவன், புவனேசுவரி அவர்களின் காரில் போய் திணித்துக் கொள்ள, ருத்ரமூர்த்தி நித்தியனோடு தன் மாருதிக்கு வந்தார்.

''காரை நீ டிரைவ் பண்றியா... நான் பண்ணட்டுமா?''

''நீங்களே பண்ணுங்கப்பா...''

நித்தியன் ஏறி உட்கார்ந்தான். ருத்ரமூர்த்தி காரை மெல்ல நகர்த்தினார். சாலையில் அது வேகம் பிடித்ததும் நித்தியன் ''அப்பா'' என்றான்.

''ம்...''

''எதுக்காக இந்த ஆர்ப்பாட்டமான வரவேற்பு? எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலை.''

''உனக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும் எனக்கு ஊரை நம்ப வைக்கணும். நீ வெளி நாட்டுக்குப் போயிட்டுத்தான் வந்துருக்கேன்னு எல்லாருமே நம்பணும். முக்கியமா உனக்கு பெண் கொடுக்கப் போகிற விஜயராகவன் குடும்பமும் நம்பணும்...''

''அப்பா... வந்து...''

''நீ எதுவும் பேசாதே... மும்பைல உன்னோ ஒரு வருஷ ஜெயில் வாழ்க்கை எப்படி இருந்த சொல்லு...?''

## 2

நித்தியன் உதட்டில் ஒரு புன்னகை ஒட்டவைத்துக் கொண்டு, ருத்ரமூர்த்தி ஏறிட்டான்.

''அப்பா! என்னோட ஒரு வருஷ மும்பை வாழ்க்கையில ஒரு நொடியைக்கூட கஷ்டம நினைச்சது இல்லை. ஏதோ உணவு விடுதியி தங்கிட்டு வந்த மாதிரியான உணர்வுதான் எனக்கு அந்த வாழ்க்கையை நான் கில்ட்டியாவே ஃபீ பண்ணலை.''

''உனக்கு அப்படி இருந்திருக்கலாம். ஆனால் ஜெயில்ல இருந்த ஒவ்வொரு நிமிஷமும் நா கூனிக்குறுகிப்போய் கிடந்தேன். நீ வெ நாட்டுக்குப் போயிருக்கிறதாக பொய் சொல் நண்பர்கள் வட்டாரத்தையும் சொந்தக்காரங் வட்டாரத்தையும் நம்ப வைக்கிறதுக்குள்ள நா பட்டபாடு இருக்கே... அது அந்த கடவுளுக்குத்தா தெரியும். எந்த நிமிஷத்துல யாருக்கு உண்ன தெரிஞ்சுடுமோன்னு வயித்துல நெருப்பை கட்டிக்கிட்டு உட்கார்ந்திருந்தேன்.''



''நீங்க உண்மையையே சொல்லியிருக்க லாம்ப்பா... நான் எதுக்காக ஜெயிலுக்குப் போனேன்னு உங்களுக்கே தெரியும்.''

''எப்படியிருந்தாலும் ஜெயில் ஜெயில்தானே? நீ என்ன காரணத்துக்காக ஜெயிலுக்குப் போனேங்கறது முக்கியமில்லை. ஜெயிலுக்குப்போய் ஒரு வருஷம் இருந்துட்டு வந்திருக்கே. அதுதான் முக்கியம். நீ வெளிநாட்டுக்குப் போயிருக்கிறதா பொய் சொல்லாம இருந்திருந்தா ஏர்போர்ட்டுக்கு விஜயராகவன் குடும்பம் வந்திருக்காது. அந்தப் பொண்ணு விசாலி உன் கழுத்துல மாலையைப் போட்டிருக்கவும் மாட்டா.''

''அப்பா! நான் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்து இருக்கிற விஷயம் என்னைக்காவது ஒரு நாள் விஜயராகவன் ஃபேமிலிக்குத் தெரியும்போது அது ஒரு பெரிய பிரச்னையா மாற வாய்ப்பு இருக்கு.''

ருத்ரமூர்த்தி சிரித்தார்.

''தெரிஞ்சாதானே?''

''அது ரிஸ்க். நாளைக்கு எனக்கும் விசாலிக்கும் கல்யாணமான பின்னாடி நான் ஜெயிலுக்குப் போயிருக்கிற விஷயம் தெரியவந்தா அந்த ஃபேமிலியோட கோபத்தை நம்மால தாங்கிக்க முடியாது. விஜயராகவன் ஒரு ப்ரஸ்டீஜியஸ் பேர்வழி. நம்ம மேல மானநஷ்ட வழக்கு போட்டு கோர்ட்டுக்கு போகவும் தயங்க மாட்டார்.''

''டேய் நித்தியன்! இது தேவையில்லாத பயம். உனக்கும் விசாலிக்கும் கல்யாணம் நடந்து முடிஞ்சதுக்கு அப்புறம் விஜயராகவனுக்கு நீ ஜெயிலுக்குப் போன விஷயம் தெரிஞ்சாலும் அதனால எந்தப் பிரச்னையும் வராது. அப்படி விஜயராகவன் பிரச்னை பண்ணினா பாதிக்கப்படப் போறது அவரோட பொண்ணு விசாலியோட வாழ்க்கைதான்.''

''இருந்தாலும்...''

''டோண்ட் ஆர்க்யூ வித் மீ....! நீ கொலைகாரனோ... கொள்ளைக்காரனோ... சமூக விரோதியோ... கிடையாது. ஏதோ சந்தர்ப்ப வசத்தால ஜெயிலுக்குப் போயிட்டு வந்திருக்கே. அதை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துட்டு ஒரு புதிய வாழ்க்கைக்கு நீ தயாராகணும். அந்தப் புதிய வாழ்க்கையும் தயாரா உனக்காக கைகட்டி காத்திருக்கு. எனக்கு நீ சந்தோஷத்தை தர விரும்பினா விசாலியை கல்யாணம் பண்ணிக்கணும். மாட்டேன்னு சொல்லி என்னைத் தலைகுனிய வெச்சுடாதே!''

''அப்பா! உடனடியா எனக்கு கல்யாணம் வேண்டாம்.''

''ஏன்?''

''இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்.''

''கொஞ்ச நாள்ன்னா எவ்வளவு நாள்?''

''ரெண்டு வருஷம்.''

''நீ ரெண்டு மாசம்னு சொல்லியிருந்தாக்கூட ஒத்துக்க மாட்டேன். உனக்கு இந்த மார்கழி முடிஞ்சதும் தை மாசத்துல கல்யாணம்... நான் எதைப் பண்ணினாலும் அது உன்னோட நன்மைக்காத்தான். வீடு வந்தாச்சு, முகத்தை சந்தோஷமா வெச்சுக்க... ஃப்ரெண்ட்ஸ் ரிலேட்டிவ்ஸ்னு ஒரு பெரிய பட்டாளமே உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்கு. எல்லார்க்கிட்டேயும் ரெண்டொரு வார்த்தை கலகலப்பா பேசு. எதையோ பறிகொடுத்த மாதிரி ஃபேஸ் எக்ஸ்பிரஷன்ஸ் இருக்கக் கூடாது.''

நித்தியன் இயந்திரமாய் தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே, பங்களா இருந்த தெருவுக்குள் கார் நுழைந்தது.

பேண்ட் வாத்தியக் கோஷ்டி உச்சஸ்தாயியில் ஒலிக்க நாதஸ்வர இசையும் கூடவே இழைந்தது.

விரியத் திறந்து கிடந்த காம்பௌண்ட் கேட்டுக்குள் கார் நுழைந்து போர்ட்டிகோவின்



மார்பின் பரப்பில்போய் சகல இயக்கத்தையும் நிறுத்திக் கொண்டு கார் மௌனமாயிற்று.

நித்தியன் இறங்கினான்.

செக்கச் செவேலென்று ஆரத்தி கரைத்துக் கொண்டு காத்திருந்த இரண்டு சொந்தக்காரப் பெண்கள் நித்தியனை நெருங்கி திருஷ்டி கழித்து பொட்டு வைத்தார்கள்.

போர்ட்டிகோ படிகளில் உயர்ந்தான் நித்தியன். ஹாலுக்குள் நிறைய பேர் காத்திருந்தார்கள். ஏறக்குறைய எல்லாருடைய கைகளிலும் பொக்கேக்கள்.

நித்தியன் ஒரு வலுக்கட்டாயப் புன்னகையை முகத்துக்கு கொடுத்தபடி எல்லாரையும் பார்த்து கும்பிட்டான். ஒவ்வொருவராய் வந்து அவனுடைய கைகளைப் பற்றி குலுக்கி பொக்கேயைத் திணித்து வாழ்த்துக்களை சொல்ல ஆரம்பித்தார்கள்.

''விஷ்... யூ... ஆல்... த... பெஸ்ட்''

''இன்னும் ஒரு மாதிரியான நிறைய வெளிநாட்டுப் பயணங்கள் அமையணும்.''

''கங்க்ராட்ஸ்...''

''அடுத்த வெளிநாட்டுப் பயணம் எப்போது மிஸ்டர் நித்தியன்?''

பொக்கேக்களைக் கொடுத்த அனைவருக்கும் புன்னகைகளைக் காட்டிக் களைத்துப் போனான் நித்தியன்.

## 3

**சா**ந்தாவுக்குப் பிடித்தமான சந்தன நிற சட்டை சிவப்பு பேண்டில் தன்னை திணித்துக் கொண்டு அறையினின்றும் வெளிப்பட்ட நித்தியனை மறித்த மாதிரி வந்து நின்றார் ருத்ரமூர்த்தி.

''எங்கியோ கிளம்பிட்டே போயிருக்கே...?''

''ஆமாப்பா... ஒரு ஃபிரெண்டை பார்க்கணும்.''

''சென்னை வந்து சேர்ந்த ரெண்டு மணி நேரத்துக்குள்ளே நீ பார்க்க கிளம்பிட்ட அந்த ஃபிரண்ட் யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''அந்த ஃபிரண்ட் யார்னு சொன்னாத்தான் நீங்க என்னை வெளியே போக அலவ் பண்ணுவீங்களா?''

''தப்பா நினைச்சுக்காதே நித்தி... நீ ஒரு வருஷ மும்பை ஜெயிலல இருந்துட்டு வந்த கசப்பான சம்பவம் யாருக்கும் தெரிஞ்சுடக்கூடாதேங்கிற பெரிய பயமும், உனக்கும் விசாலிக்கும் நல்லபடியா கல்யாணம் நடந்து முடியணுமேங்கிற கவலையும் தான் எனக்கு... நீ இப்போ வெளியே யாரைப் பார்க்கப் போறதாயிருந்தாலும் சரியா ஒரு மணி நேரத்துக்குள்ளே திரும்பி வந்துடணும்.''

''எதுக்காக?''

''விசாலியோட அப்பாவும் அம்மாவும் கல்யாணத்துக்கு நாள் குறிக்கிறது சம்பந்தமா பேசறதுக்கு வர்றாங்க... விசாலியும் வர்றா. அவங்க எல்லாரும் நம்ம வீட்டுக்கு வரும்போது நீ வீட்ல இல்லாமே இருந்தா நல்லாயிருக்காது...''

நித்தியன் மௌனமாய் நிற்க ருத்ரமூர்த்தி அவனுடைய தோளைத் தட்டினார். ''என்ன பதிலையே காணோம்?''

''அவங்க எத்தனை மணிக்கு வர்றாங்க?''

''சரியா பதினோரு மணிக்கு...''

''நான் கண்டிப்பா வீட்ல இருக்கணுமாப்பா?''

''இருந்தா... விசாலிக்கு சந்தோஷமா இருக்கும்.''

''சரி... வந்துடறேன்.''

''பதினோரு மணிக்கு?''

''ஞாபகம் இருக்கு...'' தலையாட்டிய நித்தியன் மாடிப்படிகளில் வேகவேகமாய் இறங்கி



போர்டிகோவுக்கு வந்தான். சாக்லேட் நிற மாருதி ஜென் விசுவாசமாய் காத்திருக்க உள்ளே போய் இக்னீஷியனை உசுப்பினான்.

காரை காற்றில் பறக்கவிட்டான்.

* * *

**ப**த்து நிமிஷ பயணத்தில் கன்னிமாரா ரெஸ்டாரெண்ட் வந்தது. மஞ்சளாய் பூத்துக் கொட்டிய மரத்துக்குக் கீழே ஒரு பூங்கொத்து மாதிரி நின்றிருந்தாள் சாந்தா.

கார் அவளுக்குப் பக்கத்தில் போய் நின்றது. காரின் கண்ணாடிக் கதவு மெதுவாய் கீழே இறங்க நித்தியனின் முகம் ஸ்லோமோஷனில் உற்பத்தியாயிற்று.

பரஸ்பரம் உதடுகள் புன்னகைத்துக் கொள்ள இரண்டு ஜோடி விழிகளிலும் லேசாய் கண்ணீர் கோட்டிங்.

காரின் கதவைத் திறந்து விட்டான் நித்தியன். சாந்தா காரைச் சுற்றிக் கொண்டு வந்து உள்ளே நுழைந்தாள். மல்லிகையின் மணம் காருக்குள் நிரம்பிக் கொண்டது. சாந்தா இமைக்காமல் நித்தியனையே பார்க்க அவன் புன்னகைத்தான்.

''என்ன அப்படி பார்க்கிறே சாந்தா...?''

''ரொம்பவும் இளைச்சுட்டீங்க.''

''நான் போனது ஜெயில். ரெஸ்ட் எடுக்கிறதுக்காக சிம்லாவோ காஷ்மீரோ போகலை. நீ மட்டும் என்னவாம்? முன்னைக்கு இருபது பர்செண்ட் லெஸ். முகத்துல இருந்த ஆப்பிள் மினுமினுப்பு மிஸ்ஸிங்...''

சாந்தா கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள உடைந்து போன குரலில் கேட்டாள்.

''அங்கே ரொம்பவும் கஷ்டமாயிருந்ததா?''

''ஜெயில்ன்னாலே கஷ்டம்தானே... ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருஷம் மாதிரி நகர்ந்த

அவஸ்தை இருக்கே அதை இப்ப நினைச்சாரு
மனசு ரணமாயிடும்..."

"அதை மறந்துடுங்க... வேற விஷ
பேசுவோம். இனிமே அந்த கறுப்பு நாட்களே
ஞாபகமே உங்களுக்கு வரக்கூடாது. வாங்க
ரெஸ்டா ரெண்ட்டுக்குள்ளே போயிருவோம்..."

இருவரும் இறங்கி நிசப்தமாய் இருந்த அ
கன்னிமாரா ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்தார்க
ஃபேமிலி ரூம் என்று ஒரு சிறிய போர்டு சொ
கேபினுக்குள் நுழைந்து பக்கம் பக்கம
உட்கார்ந்தார்கள்.

பேரர் உள்ளே எட்டிப் பார்க்க நித்தியன் "ரெ
காபி" என்றான். பேரர் தலை மறைந்தது.

சில வினாடிகள் மௌனத்திற்குப் பி
நித்தியன் மெல்ல பேச்சை ஆரம்பித்தான்.

"சாந்தா! இன்னும் ஒரு பத்து பதினை
நாளைக்குள்ளே நீயும் நானும் ஒரு கோயி
கல்யாணத்தை முடித்துக் கொள்ள வேண்
கட்டாயம் வரலாம்."

சாந்தா திடுக்கிட்ட மாதிரி பார்த்தாள்.

"ஏன்?"

"என்னோட அப்பா எனக்குக் கல்யாணத்
பண்ணி வைக்கிறதுக்கான முயற்சியில் தீவி
இறங்கிட்டார். பொண்ணு பேரு விசாலி. கோடீஸ்வ
குடும்பம்... நான் ஒரு ஜெயில் ரிட்டர்ன் என்
விஷயம் அந்தக் குடும்பத்துக்கு தெரியாது. நா
ஃபாரின் போய்ட்டு வந்திருக்கிறதா மத்தவங்க மா
அவங்களும் நினைச்சுட்டிருக்காங்க... விஷ
அவங்களுக்கு தெரியறதுக்கு முந்தி
கல்யாணத்தை முடிச்சுடணும்னு அப்பா கா
வெந்நீரைக் கொட்டிக்கிட்ட மாதிரி ப
துட்டிருக்கார்..."

சாந்தா மௌனமாய் தலைகுனிந்து கிரா
மேஜையின் ஓரத்தை தன் இடது கை விரல்களா



தடவ ஆரம்பிக்க நித்தியன் அவளுடைய மேவாயை தன் ஆள்காட்டி விரலால் நிமிர்த்தினான். கண்களில் நீர் தத்தளித்தது.

"ஏய்... என்னாச்சு...?"

"எ...எனக்கு... எனக்கு...."

"சொல்லு... உனக்கு....?"

"ப...ப...பயமாயிருக்குங்க..."

"எதுக்கு பயம்...?"

"நம்ம கல்யாணம் நடக்குமா?"

"நடக்கும்..."

"உங்க அப்பா...?"

"நம்ம கல்யாணத்துக்கு சரின்னு சம்மதம் கொடுத்து பச்சைக்கொடி காட்ற மாதிரி நான் ஏற்பாடு பண்றேன்."

"எப்படி?"

பேரர் காபியோடு வந்தான். டம்ளர்களை வைத்துவிட்டு போகும்வரை மௌனம் காத்த நித்தியன் பின் வாயைத் திறந்தான்.

"நான் ஒரு ஜெயில் ரிட்டர்ன் என்கிற விஷயம் விசாலிக்கோ விசாலியோட அப்பா அம்மாவுக்கோ தெரியாது. விஷயம் தெரிஞ்சா அந்த நிமிஷமே அவங்க பின்வாங்கிப் போயிடுவாங்க. ஸோ நான் ஜெயிலுக்குப்போன விஷயத்தை அவங்களுக்கு வெட்ட வெளிச்சமாக்கப் போறேன்."

"எப்போ?"

"இன்னிக்கே... இன்னிக்குக் காலையில பதினோரு மணிக்கு விசாலியும் அவளோட ஃபாதர் மதரும் கல்யாண நாளை ஃபிக்ஸ் பண்றதுக்காக என்னோட வீட்டுக்கு வரப்போறாங்க... அதுக்கு முந்தியே நான் அவங்க வீட்டுக்குப்போய் விஷயத்தை சொல்லிடப் போறேன்."

சாந்தா கவலையாய் கேட்டாள். "நீங்க போய் விஷயத்தை சொன்னதா உங்கப்பாவுக்கு தெரிய

வரும்போது அவருக்கு உங்க மேல கோபம் வருமே...?''

''விஷயத்தை சொன்னது நான்தான்னு அப்பாவுக்கு தெரிய வேண்டாம்னு விசாலியோட அப்பா அம்மாகிட்டே சொல்லிடுவேன்.''

''என்னிக்காவது உண்மை தெரிய வரும் போது...?''

''அதுக்குள்ளே நம்ம கல்யாணம் முடிஞ்சிருக்கும்.''

நித்தியன் சிரித்து சொல்லிக் கொண்டிருக்கும் போதே பேரர் தள்ளு கதவைத் திறந்து கொண்டு மறுபடியும் எட்டிப் பார்த்தான்.



## 4

கௌண்ட்டரில் பில்லுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு கார் பார்க்கிங்குக்கு வந்தார்கள்.

''சாந்தா...! உன்னை எங்கே டிராப் பண்ணட்டும்?''

''நீங்க கிளம்புங்க. நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போயிக்கிறேன்...''

''இன்னிக்கு உனக்கு எந்த ஏரியா டியூட்டி?''

''மேற்கு மாம்பலம்''

''ஈவினிங் பார்க்கலாமா?''

''ம்...''

''எங்கே...?''

''கபாலீஸ்வரர் கோயில்.''

''டயம்?''

''நீங்களே சொல்லுங்க...''

''ஆறு மணி...''



''சரி...''

சாந்தா தலையாட்டிக் கொண்டே காலியாய்ப் போன ஆட்டோ ஒன்றைக் கைகாட்டி நிறுத்தினாள்.

''வரட்டுமா?''

''ம்...''

''விசாலியோட அப்பாகிட்ட பார்த்து பேசுங்க. நம்ம காதல் விவகாரத்தை இப்போதைக்கே போட்டு உடைச்சுடாதீங்க. அதை பின்னாடி சொல்லிக்கலாம்.''

நித்தியன் தலையாட்ட ஆட்டோ கிளம்பியது.

* * *

''வாங்க மாப்ளே...!''

வீட்டு வாசலிலேயே நின்றிருந்த விசாலியின் அப்பா விஜயராகவனும் அம்மா புவனேசுவரியும் கடைவாய் வரைக்கும் சிரித்துக் கொண்டு வரவேற்றார்கள்.

''விசாலியோட பேச்சுக்கு இவ்வளவு மதிப்பு கொடுப்பீங்கன்னு நினைக்கலை. சொன்ன மாதிரியே பதினைஞ்சு நிமிஷத்துக்குள்ள வந்துட்டீங்க...''

நித்தியன் அவஸ்தையாய் புன்னகைத்துக் கொண்டே காரினின்றும் இறங்கி போர்டிகோ படிகள் ஏறினான். கண்கள் விசாலி எங்கே என்று தேடியது.

விஜயராகவன் கண் சிமிட்டினார். ''என்ன மாப்ளே எம் பொண்ணு விசாலியைத் தேடறீங்களா...? நீங்க வீட்டுக்கு வர்றீங்கன்னு தெரிஞ்சதும் டிரஸ் சேஞ்ச் பண்றதுக்காக அவ ரூமுக்குள்ள போனவ இன்னும் வெளியே வரலை...''

ஹாலுக்கு கூட்டிப்போய் சிவப்பு வெல்வெட் மொய்த்திருந்த சோபாவில் உட்கார வைத்தார்கள்.

''இங்கே வரச் சொன்னதினால உங்க ஷெட்யூல்ட் புரோக்ராம் எதுவும் ஸ்பாய்ல் ஆயிடலையே?''

''நோ... நோ...''

"ஹலோ..." பின்பக்கம் குரல் கேட்டு நித்தியன் திரும்பினான்.

ஒரு பெரிய ரோஜாப்பூ பூத்த மாதிரி ரோஸ் நிற பட்டுப் புடவையில் நின்றிருந்தாள் விசாலி. நெற்றியில் ஜிகினா ஸ்டிக்கர் பொட்டு ஒரு குட்டி நட்சத்திரமாய் மினுமினுத்தது.

நித்தியன் புன்னகைத்தான்.

விசாலி அவனுக்கு எதிரே இருந்த சோபாவுக்கு சாய்ந்தாள்.

"தேங்க்ஸ் எ லாட்."

"எதுக்கு?"

"என்னோட அழைப்பை அக்செப்ட் பண்ணிக்கிட்டு நீங்க வந்ததுக்கு."

"உங்க ஃபாதர் என்கிட்ட ஏதோ முக்கியமான விஷயம் பேச விரும்பறதா சொன்னியே...? அதுக்கு நான் மதிப்பு கொடுக்க வேண்டாமா?"

விஜயராகவன் குறுக்கிட்டார். "மாப்ளே! அது ஒண்ணும் அவ்வளவு பெரிய முக்கியமான விஷயமில்லை. எனக்கு சொந்தத்துல நாலைஞ்சு கம்பெனிகள் இருக்கிறது உங்களுக்குத் தெரியும். அதுல ரெண்டு கம்பெனிகளுக்கு உங்களையும் ஒரு போர்டு மெம்பரா போட்டுடலாம்னு இருக்கேன். கல்யாண இன்விடேஷனை பிரிண்ட் பண்ணும்போது உங்க பேர்க்கு கீழே அந்த க்வாலிபிகேஷனையும் போட்டா எங்களுக்கு பெருமையா இருக்கும்...."

நித்தியன் சிரித்தான்.

"என்ன மாப்ளே சிரிக்கறீங்க?"

"சிரிக்காம என்ன பண்றது அங்கிள். என்னோட இப்போதைய உண்மையான க்வாலிஃபிகேஷன் என்னான்னு உங்களுக்குத் தெரியுமா? அது தெரிஞ்சா நீங்க என்னை இப்படி உட்கார்த்தி வெச்சு பேசிட்டிருக்க மாட்டீங்க."



எல்லோரும் முகம் மாறினார்கள். விஜயராகவன் குழப்பமாய் கேட்டார்.

"என்ன மாப்ளே சொல்றீங்க?"

"அங்கிள்! இன்னிக்கு காலையில் நீங்க எல்லாரும் ஏர்போர்ட்டுக்கு ஃபாரினிலிருந்து ரிட்டர்னாகி வந்த என்னை ரிஸீவ் பண்ண வந்தீங்க... இல்லையா...?"

"ஆமா..."

"அதுல ஒரு சின்ன திருத்தம்"

"என்ன?"

"நான் உண்மையில் ஃபாரின் போகலை. ஒரு குற்றத்தை பண்ணிட்டு அதுக்கு தண்டனையா மும்பை ஜெயில்ல ஒரு வருஷம் இருந்துட்டு வர்றேன். இது வெளியுலகத்துக்கு தெரியக் கூடாதுன்னு என்னோட அப்பா நான் ஃபாரின் போயிருக்கிறதா சொல்லி..."

விசாலி குறுக்கிட்டு புன்னகைத்தாள்.

"அதுவும் எங்களுக்குத் தெரியும்."




நித்தியனின் ரத்த ஓட்டத்தில் சின்னதாய் ஒரு டிராஃபிக் ஜாம். நெற்றி அவசரமாய் ஒரு வியர்வை கோட்டிற்கு உட்பட்டு தொண்டையில் ஆதாம் ஆப்பிள் அவஸ்தையில் விம்மியது.

"நா... நான் ஜெயிலுக்குப் போ... போனது உங்களுக்கெல்லாம் தெ... தெரியுமா?"

"தெரியும்."

"எ... எப்படி?"

விஜயராகவன் புன்னகைத்தார். "மாப்ளே! பெண்ணைப் பெத்தவங்க அவ்வளவு சுலபத்துல

ஒருத்தர்கிட்ட தன்னோட பொண்ணை தாரை வார்த்துக் கொடுத்துட மாட்டாங்க. விசாலி எங்களுக்கு ஒரு ராஜகுமாரி மாதிரி. அவளை பொத்தி பொத்தி வளர்த்துட்டு வந்திருக்கோம். அவ எந்தப் பொருள் மேல ஆசைப்பட்டாலும் சரி, அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே அந்தப் பொருள் அவளுக்கு முன்னாடி இருக்கும். இப்படி அவளோட ஆசைகளை புரிஞ்சுக்கிட்டு செயல்படற நாங்க அவளுக்கு கணவரா வர்ற உங்களைப் பத்தி சரியான முறையில் விசாரிக்காம இருப்போமா?''

இப்போது விசாலி தொடர்ந்தாள்.

''ரெண்டு வருஷத்துக்கு முந்தி நீங்க மும்பை ஏர்போர்ட்ல சென்னை ஃபிளைட்டுக்காக காத்திருந்த போது அறிமுகம் இல்லாத பெண்ணொருத்தி தன்னோட சூட்கேசை உங்க பக்கத்துல வெச்சிட்டு பார்த்துக்கும்படி சொல்லி டாய்லெட் போனதும், அந்த நேரத்துல போலீஸ் வந்து பாசஞ்சர்ஸோட லக்கேஜையெல்லாம் சோதனை போட்டதால் அந்தப் பெண்ணோட சூட்கேஸ் கவருக்குள் போதை மருந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதும், அந்த பொண்ணு தப்பிச்சுக்கிட்டு போயிட்டதால நீங்க மாட்டிக் கிட்டதும் உங்களுக்கும் அவளுக்கும் தொடர்பு இருக்குன்னு போலீஸ் சந்தேகப்பட்டு கைது செய்து வழக்கு தொடர்ந்ததும், அதுல ப்ராஸிக்யூஷன் தரப்பு ஸ்ட்ராங்கா இருந்ததால் உங்களுக்கு ஒரு வருஷ சிறை தண்டனை தீர்ப்பானதும் இப்படி எல்லாமே எங்களுக்குத் தெரியும்.''

இப்போது விசாலியின் அம்மா புவனேஸ்வரி தன் பங்குக்கு வாயைத் திறந்தாள்.

''நீங்க ஜெயிலுக்குப் போயிருக்கிற விஷயம் எங்களுக்கெல்லாம் தெரியக் கூடாதுன்னு உங்கப்பா நினைச்சார். நீங்க பிஸினஸ் நுணுக்கங்களை கத்துக்கிட்டு வர்றதுக்காக ஃபாரின் போயிருக்கிறதாக எல்லார்கிட்டேயும் சொல்ற மாதிரியே எங்கக்கிட்டே யும் சொன்னார். நாங்களும் உண்மை தெரிஞ்சதா



காட்டிக்கலை. இப்ப நீங்களே வீட்டுக்கு வந்து வாய் திறந்து நான் ஜெயிலுக்குப் போயிருக்கேன்னு சொன்னதால நாங்களும் உண்மையை சொல்ல வேண்டியதாயிடுச்சு.''

நித்தியன் இயல்புக்கு வந்து ஒரு சின்னப் புன்னகையோடு விஜயராகவனை ஏறிட்டான்.

''அங்கிள்! அ'யம் ஹார்ம்லஸ். எந்தத் தப்பும் பண்ணலை. இருந்தாலும் ஜெயிலுக்குள்ளே ஒரு வருஷம் இருந்துட்டு வந்திருக்கேன். இது எனக்கு ஒரு பிளாக் மார்க்தானே?''

''நாங்க யாருமே அப்படி நினைக்கலை. முக்கியமா விசாலி ஒரு பர்செண்ட் கூட நினைக்கலை. விசாலி உங்க மேல வெச்சிருக்கிற அன்புக்கு ஒரு எல்லையே இல்லை. அவளோட ஃப்ரண்ட்ஸ் சர்க்கிளில் இப்போ அவள் விசாலி விஜயராகவன் கிடையாது. அவங்க கூப்பிடற தெல்லாம் விசாலி நித்தியன்தான்!''

நித்தியனுக்குள் இப்போது லேசாய் சுவாசத் திணறல் ஏற்பட்டது.

'இவர்கள் எல்லை மீறி போய்க் கொண்டிருக் கிறார்கள். இந்தக் கல்யாணம் நடக்காது என்று சொல்லி விடலாமா?'

'வேண்டாம். இங்கே வேண்டாம்.... வீட்டுக்குப் போய் அங்கேயிருந்து டெலிபோன் செய்து பட்டுத் துணியை சுத்தரிப்பது போல் விஷயத்தை சொல்லிவிட வேண்டியதுதான்.'

விஜயராகவன் நித்தியனின் தோளில் கை வைத்து கேட்டார்.

''என்ன மாப்ளே யோசனை?''

''ஒண்ணுமில்லே அங்கிள்.''

''கல்யாணப் பேச்சு பேசினா முகத்துல ஒரு தேஜஸ் வரவேண்டாமா?''

விசாலி சிரித்தாள்.

''அப்பா! அவருக்கு ஜெயிலுக்கு போயிட்டு வந்த அந்த கில்ட்டி கான்ஷியஸ் போகலை. அது சாயம் போக கொஞ்சம் நாளாகும். அதுவரைக்கும் இவரோட ஃபேஸ்ல இப்படியொரு உம்மணா மூஞ்சித்தனம் இருக்கத்தான் செய்யும்.''

''சரி! மாப்பிள்ளைக்கு ஏதாவது சாப்பிடக் கொண்டு வந்து குடும்மா.''

''எதுவும் வேண்டாம். இப்பத்தான் ரெஸ்டாரெண்ட்ல காபி சாப்பிட்டுட்டு வந்தேன்.''

''சரி, கூலா ஏதாவது சாப்பிடுங்க. விசாலியே ப்ரிப்பேர் பண்ணின ஐஸ்கிரீம் இருக்கு. பாதாம்கீர் இருக்கு.''

''ப்ளீஸ்! ஒண்ணும் வேண்டாம்... கண்டதை வயித்துக்குள் போட்டா மந்தியானம் லஞ்ச் ஸ்பாயிலாயிடும்.''

விசாலி தன் அழகான கண்களை விரித்து முறைத்தாள்.

''நான் ப்ரிப்பேர் பண்ணின ஐஸ்கிரீமும் பாதாம் கீரும் கண்டதா? எவ்வளவு தைரியம் இருந்தா அந்த வார்த்தையை யூஸ் பண்ணுவீங்க?''

''ஸாரி...''

விசாலி தன் பொய்க் கோபத்தைத் தொடர்ந்தாள்.

''ஐ டோண்ட் வாண்ட் யுவர் ஸாரி. நீங்க அப்படி பேசினதுக்கு தண்டனையா நான் ப்ரிப்பேர் பண்ணின பாதாம் கீரை நீங்க சாப்பிட்டே ஆகணும்! அப்பா...!''

''என்னம்மா?''

''அவர் எந்திரிச்சு ஓடாமப் பார்த்துக்குங்க. நான் போய் ஒரு பெரிய டம்ளர் நிறைய பாதாம்கீர் கொண்டு வர்றேன்.''

விசாலி எழுந்து உள்ளே இருந்த ஃப்ரிஜ்ஜை நோக்கிப் போக புவனேஸ்வரியும் விஜயராகவனும் சிரித்தார்கள்.



''தப்பா நினைச்சுக்காதீங்க மாப்ளே...! விசாலிக்கு கொஞ்சம் விளையாட்டுத்தனமும் துடுக்குத்தனமும் ஜாஸ்தி.''

நித்தியன் அவஸ்தையாய் சிரித்து வைத்தான். இரண்டே நிமிஷம். விசாலி ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் வழிய வழிய பாதாம் கீரோடு வந்தாள். டம்ளரின் உச்சியில் ஸ்ட்ரா தள்ளாடியது.

''ம்... குடிங்க.''

டம்ளரை கையில் எடுத்தான் நித்தியன்.

''ஒரு சொட்டு மீதம் வைக்காம குடிச்சு டம்ளரை கீழே வைக்கணும்.''

புவனேஸ்வரி மகளைக் கண்டித்தாள்.

''விசாலி! அவரை ரொம்பவும் படுத்தாதே! இன்னொரு டம்ளரைக் கொண்டு வந்து நீ பாதி வாங்கிக்க...''

''இப்ப சொன்னியே... இது கரெக்ட்... நான் ஃபிப்டி அவர் ஃபிப்டி.

சரியா பாதி ஊத்தணும்! அப்பா! நீங்கதான் ரெஃப்ரி. பாத்துக்குங்க.''

நித்தியன் வேண்டா வெறுப்பாய் பாதி பாதாம் கீரை டம்ளரில் ஊற்றிக் கொண்டிருக்கும்போதே ஹாலின் மூலையில் இருந்த டெலிபோன் முணுமுணுப்பாய்க் கூப்பிட்டது.

விஜயராகவன் போய் ரிஸீவரை எடுத்துக் காதுக்கு கொடுத்து முகம் பூராவும் மலர்ந்தார். மறுமுனையில் ருத்ரமூர்த்தி.

''வணக்கம் சம்பந்தி.''

''வணக்கம்! எங்க ஃபேமிலி ஜோசியர் வந்து வெயிட் பண்ணிட்டிருக்கார். நீங்களும் உங்க வொய்ஃபும் ஒரு அரை மணி நேரம் ஒதுக்கிட்டு வந்தா முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணிடலாம். வந்துட்டு போக முடியுமா?''

''என்ன சம்பந்தி... இப்படி கேட்டுட்டீங்க. இது நம்ம காரியம். உடனே புறப்பட்டு வர்றோம். அப்புறம் இன்னொரு விஷயம். உங்க மகனும் இப்போ நம்ம வீட்லதான் இருக்கார்.''

''என்னது! நித்தியன் அங்கே இருக்கானா, எதுக்காக வந்தான்?''

விஜயராகவன் பதில் சொல்வதற்குள் அவர் கையில் இருந்த ரிசீவர் பறிக்கப்பட்டது. நிமிர்ந்தார். விசாலி ரிசீவரை காதுக்குப் பொருத்தி உற்சாகக் குரல் கொடுத்தாள்.

''மாமா! நான் உங்க மருமக.''

''என்னம்மா? நித்தியன் அங்கே வந்திருக்கிறானாமே?''

''ஆமா மாமா! திருட்டுத்தனமா என்னைப் பார்த்து சைட் அடிக்கிறதுக்காக எங்க வீட்டுக்குப் பக்கம் வந்தார். மடக்கிட்டோம். என்னைப் பார்க்காமே ஒரு நிமிஷம் கூட அவரால இருக்க முடியாதாம். சீக்கிரமா முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணுங்க மாமா.''

ருத்ரமூர்த்தி சிரித்தார்.

''நீ இப்படி சொல்றேம்மா! அவன் இங்கே வீட்ல என்ன சொன்னான் தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''கல்யாணத்தக்கு இப்ப என்ன அவசரம். ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னான்.''

''என்னது! ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னாரா?''

''ஆமா.''

''நான் அவரைப் பேசிக்கிறேன். மாமா! நீங்க இந்த மாசத்துல எந்த தேதியில் முதல் முகூர்த்தம் வருதோ அந்த தேதியையே ஃபிக்ஸ் பண்ணிடுங்க. ரொம்பவும் தள்ளிக்கிட்டுப் போகவேண்டாம். ஜோசியர் உங்க வீட்ல வெயிட் பண்றாரா?''



''ஆமாம்மா.''

''எங்கப்பாவையும் அம்மாவையும் இப்பவே அனுப்பி வைக்கிறேன்.''

மனதில் அடக்கி வைத்திருக்கும் ஆசைகளை வார்த்தைகளுக்கு கொடுத்து டெலிபோனில் உரிமையோடு பேசிக் கொண்டிருந்த விசாலியை சோபாவில் உட்கார்ந்திருந்த நித்தியன் பயத்தோடு பார்த்தான்.

'சாந்தாவுக்கும் எனக்கும் உள்ள காதல் விஷயம் தெரியவரும்போது இந்த விசாலி அதை எப்படி ஏற்றுக்கொண்டு ஜீரணித்துக் கொள்ளப் போகிறாள்?' நித்தியனின் இருதய மையத்தில் ஒரு பூகம்பம் பதிவாயிற்று.

* * *

**மா**லை ஆறு மணி. கபாலீஸ்வரர் கோயிலின் உட்பிரகாரத்தில் ஒரு தூணின் மறைவுக்குப் பின்னே உட்கார்ந்திருந்தார்கள் நித்தியனும் சாந்தாவும்.

''நான் ஆரம்பத்திலேயே நினைச்சேன்?'' என்றாள் சாந்தா.

''என்ன நினைச்சே?''

''நீங்க ஜெயிலுக்குப் போயிட்டு வந்த விஷயம் விசாலியோட குடும்பத்துக்கு தெரிஞ்சிருந்தாலும் அதை ஒரு பொருட்டா எடுத்துக்க மாட்டாங்கன்னு.''

நித்தியன் பெருமூச்சுவிட்டான்.

''இப்ப என்ன செய்யறதுக்னு தெரியலை. இந்நேரம் வீட்ல முகூர்த்த தேதியை ஃபிக்ஸ் பண்ணியிருப்பாங்க.''

''இந்தப் பிரச்னை தீர ஒரே வழிதாங்க இருக்கு.''

''என்ன வழி சொல்லு?''

''எனக்கு டாட்டா சொல்லிட்டு விசாலி கழுத்துல தாலியைக் கட்டிட வேண்டியதுதான்.''

நித்தியன் முறைத்தான். கண்களில் சட்டென்று நீர் திரண்டு பளபளத்தது.

''அய்யய்யோ... என்னங்க இது! நான் சும்மா விளையாட்டுக்கு....''

''கோயில்ல வந்து உட்கார்ந்துக்கிட்டு விளையாட்டுக்குக்கூட அப்படி பேசாதே சாந்தா. நீ எனக்கு இல்லேன்னா இந்த உலகத்துல நானே இல்லைன்னுதான் அர்த்தம்.''

சாந்தா கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

''இனிமே அப்படி பேசமாட்டேன். இந்த சாந்தா உங்களுக்குத்தான். நீங்க எனக்குத்தான். போதுமா?''

''இன்னொருவாட்டி சொல்லு.''

''இந்த சாந்தா உங்களுக்குத்தான், நீங்க எனக்குத்தான்.''

''இன்னொருவாட்டி.''

''என்னங்க இது. இம்போஷிஷனா?''

''இம்போஷிஷன்தான்... ம்... சொல்லு. இன்னொருவாட்டி.''

சொன்னாள்.

''சாந்தா.''

''ம்...''


''இன்னிக்கு என்ன தேதி?''

''பதினேழு.''

''வர்ற இருபத்தி மூணாம் தேதி பௌர்ணமி அன்னிக்கு நாள் நல்லாயிருக்கு. வடபழனி கோயிலுக்குப்போய்...''

''போய்...?''

''கல்யாணம் பண்ணிக்கலாமா?''




சாந்தா திக்கென்று அதிர்ந்துபோய் நித்தியனைப் பார்த்தாள். அவளுடைய மை தீட்டிய பெரிய கண்களில் மெல்லிய பயப்படலாம்.



''எ...எ... என்ன சொ... சொ... சொன்னீங்க நித்தியன்?''

''நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''என்ன.. விளையாடறீங்களா?''

''கல்யாணத்துக்கப்புறம்தான் விளையாட்டு. இப்ப நான் சொல்லிக்கிட்டிருக்கிறது நிஜம். வர்ற இருபத்தி மூணாம் தேதி பௌர்ணமி அன்னிக்கு நாம கல்யாணம் பண்ணிக்கப் போறோம்.''

''உங்கப்பாவை கொஞ்சம் நினைச்சுப் பார்த்துட்டு சொல்லுங்க.''

''நினைச்சுப் பார்த்துட்டேன் சாந்தா. நம்ம காதல் விஷயம் அவருக்குத் தெரியறதுக்கு முந்தியே நம்ம கல்யாணம் நடக்கணும். மாலையும் கழுத்துமாபோய் அவர் கால்ல விழுந்துட்டா எல்லாமே சரியாப் போயிடும்.''

''விசாலி வீட்டு சைடை கொஞ்சம் நினைச்சுப் பார்த்தீங்களா?''

''விசாலிக்கும் அவளுடைய பேரன்ட்ஸுக்கும் பெரிய அதிர்ச்சியாத்தான் இருக்கும். அதுக்கு நாமென்ன பண்ண முடியும்?''

''எனக்கென்னவோ நெஞ்சுக்குள்ளே 'திக் திக்'ன்னு இருக்கு.''

''காது வெச்சு கேட்டுப் பார்க்கட்டுமா?''

''இந்த கல்யாணத்தை நீங்க சீரியஸாவே எடுத்துக்க மாட்டீங்களா?''

''சீரியஸா எடுத்துக்கிட்டா உன்னை மாதிரி நானும் பயந்துட்டே இருக்க வேண்டியதுதான். காதல் செய்யறவங்களுக்கு வேண்டிய முக்கியமான ஒண்ணு என்ன தெரியுமா? துணிச்சல். அந்த துணிச்சல் இல்லாதவங்க காதலிக்கவே கூடாது.''

''எதுக்கும் நாம கொஞ்சம் யோசனை பண்ணி...''

''யோசனை பண்ணி முடிக்கிறதுக்குள்ளே எங்கப்பா எனக்கும் விசாலிக்கும் கல்யாணத்தையே

முடிச்சு ஹனிமூனுக்கும் அனுப்பி வெச்சிடுவார். இப்படி ஒரு அதிரடி முடிவு எடுத்து நாம கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் உண்டு. இல்லேன்னா இல்லை."

சாந்தா மெல்ல தலையாட்டினாள்.

"சரிங்க..."

"என்ன சரி?"

"நீங்க சொல்றதுதான் சரி"

"அதைச் கொஞ்சம் சந்தோஷமா சொன்னா என்ன? இன்னிக்கு தேதி பதினேழு. இன்னும் சரியா ஆறுநாள்தான் இருக்கு. இருபத்தி மூணாம் தேதி காலை ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே கல்யாணத்தை முடிச்சுக்கிறோம். ஏதாவது ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடறோம். பத்து மணிக்கு மேலரிஜிஸ்டர் ஆபீஸுக்குப் போய் முறைப்படி கல்யாணத்தைப் பதிவு பண்ணிக்கிட்டு எங்க வீட்டுக்குப் போறோம். எங்கப்பா கால்ல விழறோம். அந்த நேரத்துல அவர் என்ன சொல்லப் போறார்னு இப்பவே என்னால கெஸ் பண்ண முடியலை. 'உள்ளே போங்க'ன்னும் சொல்லலாம். 'வெளியே போங்க'ன்னும் கையைக் காட்டலாம். எதையுமே ஃபேஸ் பண்ண நாம் தயாராயிருக்கணும்."

நித்தியன் சொல்லச் சொல்ல சாந்தாவின் அடிவயிற்றில் இனம் புரியாத ஒரு அவஸ்தை பிசைந்தது.

'இந்த கல்யாணம் சந்தோஷத்தில் போய் முடிகிற சாத்யமே இல்லை போலிருக்கிறது' என்று நினைத்தாள்.

"என்ன சாந்தா! மறுபடியும் மௌனமாயிட்டே?"

"ஒண்ணுமில்லீங்க."

"எனக்குத் தெரியும். உனக்கு பயம். இருபத்தி மூணாம் தேதி வரைக்கும்தான் பயம். கழுத்துல தாலி



ஏறிட்டா இந்த பயம் போயிடும். அதுக்கப்புறம் நீ எனக்கு தைரியம் சொல்லுவே."

"சரி... இப்ப நாம கிளம்பலாமா? கோயிலுக்கு வர்ற கூட்டம் ஜாஸ்தியாயிடுச்சு."

எழுந்தார்கள்.

கபாலீஸ்வரர் சன்னதியில் டூரிஸ்ட் கூட்டம் அலைமோதியது. விநாயகர் சன்னதியில் தேங்காய்கள் உடைபட்டுக் கொண்டிருந்தன. தூரத்தில் இரண்டு மாமிகள் வம்பளந்து கொண்டே நவக்கிரஹ பிரகாரத்தைச் சுற்றுவது தெரிந்தது.

நித்தியனும் சாந்தாவும் கோயிலுக்கு வெளியே வந்தார்கள். சாந்தா ஆட்டோவைத் தேட நித்தியன் அவளுடைய தோளைத் தொட்டான்.

"வா! கார்லயே போயிடலாம்.

"அய்யோ! வேண்டாங்க!"

"என்ன வேண்டாம்!"

"கல்யாணம் முடிக்கிற வரைக்கும் கொஞ்சம் விலகியே இருப்போம். எல்லாம் ஒரு காரணத்துக் காகத்தான்."

"சரி... நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு உன்னை ஃப்ரீ பண்ணிக்கிட்டு பனகல் பார்க்குக்கு வந்துடு."

"பனகல் பார்க்குக்கா?"

"ம்..."

"எதுக்கு?"

"கல்யாணப் பொண்ணுக்கு நல்லி சில்க்ஸ்ல பட்டுப்புடவை எடுக்கத்தான்."

சாந்தா திகைக்க - நித்தியன் சிரித்தான்.

"பட்டுப்புடவை உனக்குத்தான். புடவை மட்டுமல்ல. அப்படியே உம்மிடியார் கடைக்குப் போய் கொஞ்சம் ஜுவல்ஸும் வாங்கிக்கலாம்."

''அய்யய்யோ... அதெல்லாம் வேண்டாங்க.''

''என்ன நீ? எதுக்கெடுத்தாலும் 'அய்யய்யோ'ன்னு சொல்லிக்கிட்டு...? கல்யாணம் நடக்கிற வரை எல்லாம் என்னோட இஷ்டம்தான். அதுக்கப்புறம்தான் உன்னோட இஷ்டம். நாளைக்குக் காலையில சரியா பத்து மணிக்கெல்லாம் நீ பனகல் பார்க் பஸ் ஸ்டாப்புல நின்னுக்கிட்டிருக்கணும்.''

''ம்...''

''என்ன...ம்...?''

''சரிங்க...'' சாந்தா தலையாட்டிக் கொண்டே காலியாய்ப் போன ஆட்டோ ஒன்றை நிறுத்தினாள்.

* * *

காரை போர்டிக்கோவில் நிறுத்தி நித்தியன் இறங்கியபோது நேரம் ஏழு மணி.

போர்டிக்கோ வராந்தாவிலேயே கூரை நாற்காலியில் சாய்ந்திருந்தார் ருத்ரமூர்த்தி. நித்தியன் ஒன்றும் பேசாமல் அவரைக் கடந்து போக அவர் தொண்டையைச் செருமினார்.

''உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்.''

நித்தியன் நின்றான்.

''சொல்லுங்கப்பா.''

''நீ மொதல்ல உட்கார்'' எதிரில் இருந்த பாலிவினைல் நாற்காலியைக் காட்டினார்.

நித்தியன் வேண்டா வெறுப்பாய் நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்தான். ருத்ரமூர்த்தி சிறிது நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

''உனக்கும் விசாலிக்கும் நடக்கப்போற கல்யாணத்துக்கான தேதியை ஃபிக்ஸ் பண்ணிட்டோம்.''

''எ...எப்போ?''



''ஜனவரி இருபதாம்தேதி. தையில அதான் முதல் முகூர்த்தம்.''

''....''

''என்ன பேச்சையே காணோம்?''

''சரி...''

''என்ன சரி?''

''அதான் தேதியை ஃபிக்ஸ் பண்ணிட்டீங்களே... சந்தோஷம்.''

''நீ சந்தோஷம்னு வாயளவிலே சொன்னாலும் உன்னோட முகத்துல கொஞ்சம்கூட சந்தோஷமே இல்லையே?''

''சந்தோஷம்தாம்பா.''

''அப்படி தெரியலையே? கல்யாணப் பேச்சை எடுத்தாலே உன்னோட முகம் மாறிப் போயிடுது. ஏன் விசாலியை உனக்குப் பிடிக்கலையா?''

''பிடிச்சிருக்கு''

''பின்னே... என்ன?''

''கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னேன். நீங்க கேட்கலை. எனக்கு அந்த வருத்தம்தான்.''

''எதுக்காக ரெண்டு வருஷம் போகட்டும்னு சொல்றே?''

''நம்ம பிஸினஸை கொஞ்சம் நல்லபடியா டெவலப் பண்ணிக்கத்தான்.''

ருத்ரமூர்த்தி கசப்பாய் ஒரு புன்னகை பூத்தார்.

''நித்தியன்! நீ விஷயம் தெரியாம பேசிக்கிட்டிருக்கே...''

''என்னப்பா சொல்றீங்க?''

''கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு இந்த விஷயத்தை உன்கிட்டே சொல்லலாம்னு இருந்தேன். இப்பவே நீ சொல்லும்படியா வெச்சுட்டே.''

''அப்பா...!''

''வா... எம் பின்னாடி.''

எழுந்த நடக்க ஆரம்பித்துவிட்ட ருத்ரமூர்த்தியை குழப்பமான முகத்தோடு பின் தொடர்ந்தான் நித்தியன். மாடிப்படிகளை ஒட்டியிருந்த அவருடைய பர்சனல் அறை வந்தது. பீரோவைத் திறந்து நான்கைந்த ஃபைல்களை எடுத்துப் போட்டார்.

''நித்தியன்! இது எல்லாமே நம்ம கம்பெனியோட கடந்த ரெண்டு வருஷ பாலன்ஸ் ஷீட்ஸ். நீ மும்பை ஜெயிலில் இருந்த ஒரு வருஷத்துல கம்பெனிக்கு ஒரு பெரிய அடிவிழுந்தது. எக்ஸ்போர்ட் ஆர்டரஸ் எல்லாமே கவர்ன்மெண்ட் கொண்டு வந்த ஒரு திடீர் சட்டத்தால கேன்ஸலாகி ப்ரொடக்ஷன் சைடில் ஏகப்பட்ட பிரச்னைகள். கம்பெனியோட நிலைமை மேலே பார்க்கிறதுக்கு ஆரோக்கியமா இருக்கிற மாதிரி தெரிந்தாலும் உள்ளுக்குள்ளே புற்றுநோய் மாதிரி ஃபைனான்சியல் ப்ராப்ளம். பேங்க்ல நாம் ஓடியா வாங்கியிருந்த ரெண்டு கோடி ரூபாயை ரெண்டு மாசத்துக்குள்ள கட்டச் சொல்லி பாங்க் மேனேஜர் தினமும் போன் பண்ணிக்கிட்டிருக்கார். நமக்கு வெளியே இருந்துவர வேண்டிய தொகை கொஞ்சம்தான். ஆனா கடன் அதைவிட நாலு மடங்கு அதிகம்.''

நித்தியன் முகத்தில் இப்போது கலவரம் தெரிந்தது.

''அப்பா... நீங்க என்ன சொல்றீங்க?''

''நான் சொல்லலை. இந்த ஃபைல்களைப் புரட்டிப்பாரு. ஆடிட்டர்ஸ் ரிப்போர்ட்டைப் படிச்சுப் பாரு. உனக்கே எல்லாம் புரியும்.''

நித்தியன் அங்கிருந்த ஒரு நாற்காலியில் தளர்ந்து போய் உட்கார்ந்து ஃபைல்களை புரட்டிப் பார்க்க ஆரம்பித்தான்.



நெற்றியில் வியர்வை. அரும்புகட்டி மினு மினுத்தது. பதினைந்து நிமிட ஃபைல் புரட்டலுக்குப் பின்கலக்கமாய் நிமிர்ந்தான் நித்தியன்.

''அப்பா! நம்ம கம்பெனிக்கா இப்படியொரு சரிவு?''

''நீ ஜெயில்ல இருந்த அந்த வருஷம் என்னால பிசினஸ்லே கான்சன்ட்ரேஷன் பண்ண முடியலை. எடுத்த முடிவுகள் எல்லாமே தப்பா போயிருச்சு.''

''நம்ம கம்பெனி இப்படியொரு நிலைமையில் இருக்கிற விஷயம் விசாலியோட அப்பாவுக்குத் தெரியுமா?''

''தெரியும்! அவர் கொடுத்த தைரியத்துலதான் நான் இன்னமும் உயிரோடு இருக்கேன். 'நித்தியன் - விசாலி கல்யாணம் முடியட்டும். உங்க கம்பெனியை பழைய நிலைமைக்கு கொண்டு வரலாம்'னு என்கிட்ட உறுதி கொடுத்திருக்கார். தேவையான பண உதவியையும் செய்யறேன்னு சொல்லியிருக்கார்.''

நித்தியன் பிரமை பிடித்துப்போய் நின்றிருக்க ருத்ரமூர்த்தி அவனுடைய கையைப் பற்றினார்.

''இப்ப சொல்லு நித்தியா...! கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும்னு நீ சொன்னப்ப நான் மறுத்தது சரிதானே?''

''அ... அப்பா...''

''உனக்கு இன்னொரு விஷயத்தையும் இப்பவே சொல்லிடறேன். ஒருவேளை நீ விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு பிடிவாதமா சொல்லியிருந்தா நான் என்னோட வாழ்க்கையை முடிச்சுக்கிறதுக்காக அதைக்கூட தயாரா லோட் பண்ணி வெச்சிருக்கேன்.''

பீரோவுக்குள் கையை நுழைத்து அந்த பிஸ்டலை எடுத்துக்காட்டினார் ருத்ரமூர்த்தி.




நித்தியன் தன் அப்பாவின் கையில் இருந்த பிஸ்டலையே பயத்தோடு பார்த்தான்.

ருத்ரமூர்த்தி பிஸ்டலின் முனையால்தான் இடதுபக்க கன்னப் பரப்பை சொறிந்து கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

''நித்தியா! இப்படியொரு மோசமான நிலைமை நம்ம கம்பெனிக்கு எப்பவுமே வந்தது இல்லை. விசாலியோட அப்பா விஜயராகவன் மட்டும் எனக்கு நம்பிக்கை தர்ற மாதிரி பேசாம இருந்திருந்தா என்னோட கதை என்னைக்கோ முடிஞ்சிருக்கும்.''

''அப்பா''

''உனக்கு இந்த நியூஸ் அதிர்ச்சியா இருக்கும்னு எனக்குத் தெரியும். இதை உன்கிட்ட சொல்லாமலேயே சமாளிச்சுடலாம்னு நினைச்சுட்டிருந்தேன். ஆனா விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்தில் நீ ஆர்வம் இல்லாம இருக்கிறதைப் பார்த்து என் மனசுக்குள்ளே ஒரு பயம். நீ எங்கே விசாலியை வேண்டாம்னு சொல்லிடுவியோங்கற தவிப்பு என்னை தகிக்க ஆரம்பிச்சது. நீ நிலைமையை புரிஞ்சுக்கிட்டு நடக்கணும்ங் கறதுக்காக என் மனசுல இருக்கிற அவஸ்தையை வெளியே கொட்டிட்டேன்.''

நித்தியன் ஏதோ சொல்ல முயன்ற விநாடி ருத்ரமூர்த்தியின் பாக்கெட்டில் இருந்த செல்போன் கூப்பிட்டது. எடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

''எ ..''

மறுமு ையில் விஜயராகவன் பேசினார்.

''என்ன ்பந்தி... மணி இப்போ ஏழேகால். ஹோட்டல் சோழாவில் நாங்க எல்லோரும் வெயிட்



பண்ணிக்கிட்டிருக்கோம். பார்ட்டி இருக்கிறதையே மறந்துட்டீங்களா?''

''மறக்கலை... இதோ நானும் நித்தியனும் புறப்பட்டுக்கிட்டே இருக்கோம்.''

''ஏழரை மணிக்குள்ளே வந்துருவீங்களா?''

''கண்டிப்பா...''

''நீங்க லேட் பண்ற ஒவ்வொரு நிமிஷமும் உங்க மருமகளோட கோபம் அதிகமாயிட்டே போகுது.''

''இதோ புறப்பட்டுட்டோம்.''

செல்போனை அணைத்துவிட்டு மகனை ஏறிட்டார் ருத்ரமூர்த்தி.

''விசாலியோட அப்பா போன் பண்ணினார். சோழாவில் பார்ட்டி. நாம புறப்படுவோம்.''

''இப்ப எதுக்காக இந்த பார்ட்டியெல்லாம்?''

''விசாலி பிரியப்பட்டா.''

''நான் ஜெயிலுக்குப்போய்ட்டு வந்ததுக்கா பார்ட்டி?''

''நீ ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததை அவங்க ஒரு பொருட்டாவே எடுத்துக்கலை. நான் அந்த விஷயத்தை மறைச்சதைக்கூட அவங்க தப்பா எடுத்துக்கலை. உனக்கும் விசாலிக்கும் கல்யாண சந்தோஷத்துக்காத்தான் இந்த பார்ட்டி.''

''அப்பா! வந்து...!''

''நீ எதையும் சொல்லிட்டிருக்காதே! டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கிட்டு கிளம்பு! கார்ல போகும்போது எல்லாத்தையும் பேசிக்கலாம்.''

ருத்ரமூர்த்தி ஒரு இராணுவ கட்டளை மாதிரி வார்த்தைகளை உதிர்த்துவிட்டுப் போக நித்தியன் அனல் பெருமூச்சொன்றை விட்டபடி அவர் முதுகையே வெறித்தான்.

★★★

ஹோட்டல் சோழா.

இரண்டாவது மாடியில் இருந்த அந்த சிறிய ஹாலில் ஜீரோவாட்ஸ் வெளிச்சம் பாவியிருக்க ஏறக்குறைய ஐம்பது அறுபது பேர் ஸஃபாரி சூட்களிலும் பட்டுப் புடவைகளிலம் தெரிந்தார்கள். விஜயராகவனும் புவனேஸ்வரியும் ஹாலுக்குள் வருகிறவர்களை வரவேற்று கொண்டிருக்க, விசாலி ஹாலின் மூலையில் நித்தியனோடு பேசியபடி தெரிந்தாள்.

''என்ன பார்ட்டி இருக்கிறதையே மறந்துட்டீங்க போலிருக்கு?''

''இல்லையே... ஞாபகம் இருந்தது. ஹோட்டலுக்குப் புறப்பட்டு வர்ற நேரத்துலதான் உங்கப்பா போன் பண்ணினார்.''

''இந்த பார்ட்டியை ஏற்பாடு பண்ணினதே உங்களுக்காகத்தான். இன்னும் கொஞ்சம் ரிச்சா நீங்க டிரஸ் பண்ணிக்கிட்டு வந்திருக்கலாம். இந்த ஸஃபாரி டிரஸ் உங்களுக்கு எடுப்பாவே இல்லை. 'டிரஸ் சென்ஸ்'ல நீங்க ரொம்பவும் புவர்னு நினைக்கிறேன்.''

நித்யன் புன்னகைத்தான்.

''என்னோட அம்மா உயிரோடு இருந்த வரைக்கும் அவங்கதான் எனக்கு டிரஸ் எடுப்பாங்க. அவங்க போன பிறகு எனக்கு டிரஸ் செலக்ட் பண்றது ஒரு கஷ்டமான காரியமாயிடுச்சு.''

''இனிமே உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். உங்க டிரஸ் டிபார்ட்மெண்ட்டை நான் பார்த்துக்கிறேன்.

''...''

''ஒரு தேங்க்ஸ்கூட சொல்லமாட்டீங்களா?

''தே....தேங்க்ஸ்''

''ஹம்மாடி! ஒவ்வொரு வார்த்தையையும் உங்க வாயிலிருந்து இழுக்க வேண்டியிருக்கு. நீங்க ஏன் ஃப்ரீயாவே இருக்கமாட்டேங்கறீங்க? மனசுக்குள்ள



எதையோ போட்டு திணிச்சுக்கிட்டு பேசத் திணர்ற மாதிரி இருக்கு.''

''அப்படியெல்லாம் எதுவும் இல்லை.'

''ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததைப் பத்தியே நினைச்சு நினைச்சு மறுகிட்டிருக்கீங்களா?''

''ம்... அந்த குற்ற உணர்ச்சி எனக்கு இருக்காதா என்ன?''

''நீங்க எந்தத் தப்பும் பண்ணலையே!''

''தப்பு பண்ணலைதான். இருந்தாலும், அந்த ஜெயிலுக்குள் இருந்த கறுப்பு நாட்கள் மனதை ரணம் பண்ணாமே இல்லை.''

''சரி... இந்த சந்தோஷமான நேரத்துல அதைப்பத்தி என் பேசணும்? வேற ஏதாவது டாபிக் பேசுவோம். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்?''

''ஒயிட்....''

''மை குட்னஸ்.''

''என்ன?''

''உங்களுக்கு நேர் எதிர் நான். எனக்குப் பிடிச்ச நிறம் கறுப்பு. சரி மியூஸிக்ல எது மாதிரியான மியூஸிக் பிடிக்கும்?''

''கர்நாடிக்''

''போச்சுடா!''

''உனக்கு?''

''எனக்கு பாப் மியூசிக். ரெண்டு பதில்களிலேயும் டிஃபர் ஆயிட்டோம். இப்போ மூணாவது கேள்வி. உங்களுக்குப் பிடிச்ச பூ?''

''வேண்டாமே...''

''நோ.. நோ... சொல்லியே ஆகணும்.''

''இந்தக் கேள்விக்கும் என்னோட பதில் உன்னோட பதிலுக்கும் மாறுபட்டுத்தான் இருக்கும். நீ நினைச்சிருக்கிற பூவை கண்டிப்பா நான் சொல்லமாட்டேன்.''

''சொல்லுங்களேன் பார்க்கலாம்.''

''கனகாம்பரம்''

''வாவ்!''

''என்ன?''

''எனக்கும் அதே கனகாம்பரம்தான்...'

''பொய் சொல்றே!''

''அட... நிஜமாத்தான்.''

''சரி... உனக்கு ஏன் கனகாம்பரம் பிடிக்கும்?''

''அது ரெண்டு நாளானாலும் வாடாது. வாடினாலும் நிறம் மாறாது. வேற எந்தப் பூவை தலையில வச்சுகிட்டாலும் அதுக்கு ஆயுசு சில மணி நேரம்தான்! உங்களுக்கு கனகாம்பரம் பூ பிடிச்சதுக்கு என்ன காரணம்?''

''அது வந்து...'' நித்தியன் சொல்ல முயற்சித்த வினாடி மேடையின் மீது ஏறி நின்றிருந்த விஜயராகவனின் குரல் மைக்கில் கணீரென்று கேட்டது.

''லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்! எங்களுடைய அழைப்பை ஏற்று இந்த 'கேண்டில் லைட்' டின்னருக்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. இது திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட பார்ட்டி என்றாலும் இதில் முக்கியமான ஒரு விஷயத்தை உங்களோடு இப்போது பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.''

கும்பல் ஆர்வமாய் விஜயராகவனையே பார்க்க அவர் விசாலியையும் நித்தியனையும் ஒரு தடவை பார்வையால் நனைத்துவிட்டு மறுபடியும் மைக்குக்கு உதட்டைக் கொடுத்தார்.

''என் மகள் விசாலிக்கும், என் நீண்ட நாள் நண்பர் ருத்ரமூர்த்தியின் மகன் நித்தியனுக்கும் இன்று காலைலதான் திருமணம் பேசி முடித்தோம். அந்த சந்தோஷத்தைக் கொண்டாடும் வகையில் இன்றைக்கு இந்த பார்ட்டி அமைந்துவிட்டது.''



எல்லோரும் கைகளைத் தட்டினார்கள். அரை நிமிட நேரத்துக்கு நீடித்த அந்தக் கைதட்டல் ஓய்ந்ததும் ருத்ரமூர்த்தி மேடையேறி விஜய ராகவனின் கையில் இருந்த மைக்கை வாங்கிப் பேசினார்.

''வியாபாரத்துறையில் நண்பர்களாய் இருந்த நாங்கள் இப்போது பெண்ணைக் கொடுத்து பெறுவதில் சம்பந்திகளாக மாறிவிட்டோம். வருகிற ஜனவரி இருபதாம் தேதி கல்யாணம். இது உங்களுக் கான அட்வான்ஸ் அழைப்பு. முறைப்படியான அழைப்பு உங்களுக்கு விரைவிலேயே வந்து சேரும்.''

மறுபடியும் கைதட்டல் எழுந்து அடங்க விசாலி நித்தியனை புன்னகையோடு பார்த்தாள்.

''கல்யாணத்துக்கு இன்னும் முப்பத்தி மூணு நாள் இருக்கு. நம்ம கல்யாண தேதி நெருங்கறதுக்குள்ளே நீங்க ஒரு டியூஷன் எடுத்துக்க வேண்டியது அவசியம்.''

''டியூஷனா? எதுக்கு?''

''சிரிப்புன்னா என்ன? மனைவிகிட்ட சிரிக்க சிரிக்க பேசறது எப்படி? கடி ஜோக்ஸ், விட்ஸ் கலெக்ட் பண்ணி அதை டைம்லி பிரசன்ட் பண்றது எப்படி? இதுகெல்லாம் நீங்க ஒரு டியூஷன் எடுத்து உங்களை தயார் பண்ணிகிட்டாத்தான் நல்லது. இல்லேன்னா, மிஸ்டர் உம்மனா மூஞ்சிங்கற பட்டம் - நீங்க கேட்காமலேயே உங்ககிட்ட வந்து ஒட்டிக்கும்.''

நித்தியன் அவஸ்தையாய் புன்னகைத்தான்.

விசாலி சிரித்தாள். ''இப்படி ஸ்மைல் பண்றதைவிட நீங்க சும்மாவே இருக்கலாம்.''

டின்னர் ஆரம்பமாகிவிட்டதற்கு அடையாளமாய் எல்லோரும் நாற்காலிகளை ஆக்ரமித்துக் கொண்டிருக்க ஹாலின் மேற்கூரையில் மறைவாய் பொருத்தப்பட்டிருந்த ஸ்பீக்கர்களிலிருந்து மியூஸிக்

சிதறியது. ஊதுவத்தி புகை மாதிரி வயலின் இழைந்தது.

''வாங்க சாப்பிடப் போலாம்'' விசாலி நித்தியனை அழைத்த விநாடி ''ஹாய் விசாலி'' என்ற பெண் குரல் பின்பக்கம் இருந்து கேட்டது.

திரும்பிய விசாலி மலர்ந்தாள்.

''ஏய்... ரூபா...! இவ்வளவு லேட்டா வந்திருக்கே?''

''ஆட்டோவுல வந்தேன். டிராஃபிக் ஜாம். ஒரு மணி நேரம் பாழ். நான் என்ன செய்யட்டும்?''

''என்னங்க! இது ரூபா. காலேஜ்ல ரெண்டு பேரும் ஒண்ணா படிச்சோம்.''

விசாலி சொல்ல அந்த ரூபா குறுக்கிட்டுச் சொன்னாள்.

''ஒண்ணாவே பெயிலானோம்.''

''ஏய்... குப்பையைக் கிளறாதே...''

''சரி...சரி... மிஸ்டர் நித்தியன்கிட்ட உன்னைப் பத்தி ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிடறேன்.''

''என்ன சொல்லப் போறே?''

அந்த ரூபா நித்தியனை ஏறிட்டாள். ''மிஸ்டர் நித்தியன்! விசாலி ரொம்பவும் எமோஷனல். கேட்டது கிடைக்கணும். நினைத்தது நடக்கணும். இல்லேன்னா அப்செட் ஆயிடுவா... நீங்க அவளுக்கு நல்ல கணவராகவும் அவ உங்களுக்கு நல்ல மனைவியாகவும், இருக்க என்னுடைய வாழ்த்துக்கள்.''

''வாழ்த்தியது போதும் பாட்டி! வாங்க சாப்பிடலாம்'' விசாலி ரூபாவைப் பிடித்துத் தள்ள அவள் கேட்டாள்.

''நித்தியன்.''

''அவரும் வர்றார். அதோ! ரிசர்வ் பண்ணியிருக்கிற அந்த டேபிள்தான். ஆமா... உன்னோட ஹஸ்பெண்ட் வரலையா?''



''அவர் வராமே இருப்பாரா? உங்கப்பாகிட்ட ஷேர் மார்க்கெட்டை பத்தி பேசிட்டிருக்கார்.''

இரண்டு பேரும் டின்னர் டேபிளை நோக்கி நடக்க நித்தியன் சொன்னான்.

''நீங்க போங்க! நான் வாஷ் பேசின்ல கைஅலம்பிட்டு வாறேன்.''

''சீக்கிரமா வாங்க! பசி வயித்தைக் கிள்ளுது...''

நித்தியன் ஹாலின் மூலையில் இருந்த வாஷ்பேசினை நோக்கிப் போனான்.

குழாயைத் திருகி வெதுவெதுப்பான வெந்நீரில் கைகழுவிக் கொண்டிருந்தபோது வலது பக்கமாய் அந்தக் குரல் கேட்டது.

''ஹலோ...''

நித்தியன் திரும்பினான்.

அந்த இளைஞன் ஒரு புன்னகையோடு நின்றிருந்தான். லேசாய் சிலும்பிய தலைக்கேசம். கண்களில் மெலிதான குளிர் கண்ணாடி.

''நான் ஜெக்தீஷ். ரூபாவோட ஹஸ்பெண்ட்.''

''ஓ... ப்ளீஸ் டு மீட் யூ.''

''விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க... அட்வான்ஸ் கங்க்ராட்ஸ் மிஸ்டர் நித்தியன்.''

''தேங்க்யூ.''

''இப்போ உங்ககிட்ட ஒரு தர்மசங்கடமான கேள்வி!''

''என்ன?''

''சாந்தாவை என்ன பண்ணப் போறீங்க?''

## 8

நித்தியன் சில விநாடிகளுக்கு உறைந்து போய் பின் மீண்டும் அந்த ஜெகதீஷைப் பார்த்தான்.

''சா... சாந்தா...?''

ஜெக்தீஷ் புன்னகைத்தான். ''இது கொஞ்சம் தர்மசங்கடமான கேள்விதான். இருந்தாலும் இந்த நேரத்தில் உங்ககிட்ட கேட்கவேண்டிய கேள்வி. விசாலியை கல்யாணம் பண்ண நீக ஓ.கே. சொல்லிட்ட இந்த நிலைமையில் சாந்தாவை எப்படித் தவிர்க்கப் போறீங்க?''

நித்தியனுக்கு இப்போது நெற்றி வியர்த்துப் போயிருக்க அதைக் கர்ச்சீஃபால் ஒற்றிக் கொண்டே கேட்டான்.

''சா... சாந்தாவை உங்களுக்கு எ...எப்படித் தெரியும்?''

ஜெக்தீஷ் தன் உதட்டில் நிறுத்தியிருந்த புன்னகையை சற்றே பெரிதாக்கினான்.

''அவசியம் தெரிஞ்சுக்கணுமா?''

''ம்...''

''சாந்தா இப்போ தங்கியிருக்கிற ஒர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்ட்டலுக்கு வேண்டிய ஃபர்னிச்சர்கள் சப்ளை செய்த வகையில் எனக்கும் அந்த ஹாஸ்ட்டல் மானேஜர் அம்மாவுக்கும் நல்ல பழக்கம் உண்டு. மாசத்துக்கு ரெண்டு தடவையாவது அந்த ஹாஸ்ட்டலுக்கு ஃபார்மல் விசிட் போவேன் - அப்படி போன சில சமயங்களில் ஹாஸ்ட்டல் விசிட்டர்ஸ் ஹாலில் உங்களை அந்த சாந்தாவோடு பார்த்திருக்கிறேன். அந்தப் பெண்ணோட பேர் சாந்தான்னு எனக்கு முதல்ல தெரியாது. மானேஜர் அம்மாகிட்ட கேட்டுத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்.''

நித்தியனின் முகத்தில் இப்போது கணிசமான வியர்வை. உலர்ந்துபோன உதடுகளோடு கேட்டான்.

''இந்த சாந்தா விஷயம் உங்க மனைவி ரூபாவுக்கு தெரியுமா?''

''தெரியாது. போன நிமிஷம் வரைக்கும் சொல்லலை. இனிமேலும் சொல்லப் போறதா உத்தேசம் இல்லை. ஏன்னா, பெண்கள் கிட்ட



இதுமாதிரியான விஷயங்கள் போனா பிரச்னை எவ்வளவு பெரிசா விஸ்வரூபம் எடுக்கும்னு எனக்குத் தெரியும். சாந்தாவுக்கும் உங்களுக்கும் இருக்கிற காதலைப் பத்தி எனக்குத் தெரியும்னு உங்ககிட்ட நான் காட்டினதுக்கு காரணம் சாந்தாவை இந்த விஷயத்துல எப்படித் தவிர்க்கப் போறீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்.''

நித்தியன் ஒரு பெரிய அனல் மூச்சோடு ஜெக்தீஷை ஏறிட்டான்.

''எனக்கும் இந்த விஷயத்துல நிறைய குழப்பம் இருக்கு. அப்பாவோட கட்டாயத்துக்காக இந்த கல்யாணத்துக்கு தலையாட்ட வேண்டிய நிலைமை. அதேசமயத்துல சாந்தாவை எப்படி கன்வின்ஸ் பண்றதுன்னும் தெரியலை.''

''உங்கப்பாவுக்கு நீங்க சாந்தாவை காதலிக்கிற விஷயம் தெரியுமா?''

''தெரியாது.''

''நீங்க தெரியப்படுத்தியிருக்கலாமே?''

''தெரியப்படுத்தினாலும் அதனால பிரயோஜனமில்லை என்கிற எல்லையைக் கடந்துவிட்டது இந்த விவகாரம்.''

''நீங்க என்ன சொல்றீங்க... நித்தியன்?''

நித்தியன் பதில் சொல்வதற்குள் ரூபாவின் குரல் கேட்டது.

''வாஷ்பேஷின்ல ரெண்டு பேரும் கை கழுவிட்டிருக்கீங்களா? இல்லை குளிச்சிட்டிருக்கீங்களா?''

இருவரும் மேஜைக்குத் திரும்பினார்கள். பீங்கான் கோப்பையில் இருந்த தக்காளி சூப்பில் பெப்பரையும் சால்ட்டையும் தூவிக் கொண்டே விசாலி கேட்டாள்.

''வாஷ் பேசின்கிட்ட ரெண்டு பேரும் அப்படியென்ன அரட்டை?''

"பிஸினஸ் பத்திதான்."

"இது டின்னர் நேரம். நோ பிசினஸ் ஹியர்."

நித்தியன் விசாலிக்குப் பக்கத்தில் நாலுக்கால் சிறிது இடம்விட்டு உட்கார்ந்தான்.

ரூபா சிரித்தாள். "நோ அப்ஜெக்ஷன் மிஸ்டர் நித்தியன். நீங்க இன்னும் கொஞ்சம் சேர்ந்தே உட்காரலாம். கல்யாண டேட்டைக்கூட ஃபிக்ஸ் பண்ணியாச்சு. அப்புறமும் எதுக்கு இந்த இருபத்து சென்டி மீட்டர் இடைவெளி! நல்லா சேர்ந்து உட்காருங்க."

நித்தியன், ரூபா சொன்னதைக் கேட்டு அவஸ்தையாய் புன்னகை பூக்க விசாலி தன் நாற்காலியை சற்றே இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார விசாலியின் தோள்பட்டை ஒரு பூச்செண்டாய் மோதியது.

நித்தியன் முகத்தில் எந்த ஒரு சலனத்தையும் காட்டாமல் சூப் கிண்ணத்தை நகர்த்தி வைத்துக் கொண்டு ஸ்பூனைப்போட்டுக் கலக்க ரூபா விசாலியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தாள்.

"விசாலி! கல்யாணத்துக்குப் பிறகு நீ இவருக்கு நிறைய டிரெய்னிங் கொடுக்க வேண்டியிருக்கும். அந்த விஷயத்துல உன்னோட 'வுட்பி'க்கு வோல்டேஜ் கம்மின்னு நினைக்கிறேன்."

விசாலி அந்த ரூபாவின் தலையைத் தட்டினாள்.

"ஏய்... சும்மா கிண்டலடிக்காதே... பேசாம நீ சூப்பை சாப்பிடு. அவருக்கு எப்படி டிரெயனிங் தர்றதுன்னு எனக்குத் தெரியும். இதுக்காக நீ ஒண்ணும் பெரிசா கவலைப்பட்டுக்க வேண்டாம்."

பக்கத்து மேஜையில் இருந்தவர்களும் இதைக் கேட்டுச் சிரிக்க நித்தியன் வேண்டா வெறுப்பாய் உதட்டில் ஒரு புன்னகையை நிறுத்தினான்.

ரத்த ஓட்டமும் இருதயத் துடிப்பும் நொண்டியது.

* * *



மறுநாள் காலை ஒன்பது மணி.

சாந்தா கருநீல காட்டன் சில்க் புடவையொன்றை உடம்புக்குக் கொடுத்து டிரஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் நின்று, அணிந்திருந்த ஜாக்கெட்டோடு பொருந்துகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தபோது ஹாஸ்டல் ஆயா அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"சாந்தாம்மா..."

"என்ன ஆயா?"

"உனக்கு போன் வந்திருக்கு."

"போன்ல யாரு?"

"தெரியல்லேம்மா."

அறைக்கதவை வெறுமனே சாத்திவிட்டு வராந்தாவில் வேகநடை போட்டு டெலிபோன் இருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

ஒருக்களித்து காத்திருந்தது டெலிபோன். ரிசீவரை எடுத்து காது மடலுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் ஒரு ஆண் குரல் கேட்டது.

"பேசறது யார்...? சாந்தாவா?"

"ஆமா! நீங்க யாரு?"

"நான் யார்ன்னு உனக்கு இப்போ தெரிய வேண்டியது முக்கியமில்லை. சொல்லப் போகிற விஷயம்தான் முக்கியம்."

"என்ன விஷயம்?"

"நித்தியனை நீ காதலிக்கிறது உண்மைதானே?"

"..."

"என்ன பேச்சையே காணோம்?"

"நீங்க யார்ன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"வேண்டியதில்லை. உனக்கு நான் உதவி பண்ணத்தான் இந்த போன்கால். உபத்திரவம் தர்றதுக்காக இல்லை. உனக்கு என்கூட பேசப் பிரியம்

இருந்தா பேச்சை கன்டினியூ பண்ணலாம், இல்லேன்னா ரிசீவரை வெச்சுடலாம். என்கூட நீ பேசித்தான் தீரணுங்கிற கட்டாயம் இல்லை, பேசறியா? ரிசீவரை வெச்சுடறியா?''

''பேசறேன்.''

''அப்படீன்னா பதில் சொல்லு! நீ நித்தியனை காதலிக்கிறது உண்மையா?''

''உண்மைதான்.''

''நித்தியன் உன்னை, நீ விரும்பற அளவுக்கு விரும்பறாரா?''

''ம்... விரும்பறார்.''

''அப்படீன்னு நீ நினைச்சுக்கிட்டிருக்கே!''

''என்ன சொல்றீங்க?''

''உண்மையைச் சொல்றேம்மா... நித்தியன் உன்னை மனப்பூர்வமா காதலிக்கிறது உண்மையாயிருந்தா விஜயராகவனோட பொண்ணு விசாலியைக் கல்யாணம் பண்ணிக்க அவர் சம்மதம் கொடுத்து தலையை ஆட்டியிருப்பாரா?''

''அது... அது... வந்து....''

''சொல்லு.''

''விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல அவருக்கு விருப்பம் இல்லை. அது அவரோட அப்பா எடுத்த முடிவு. அதுக்கு அவர் கட்டுப்படமாட்டார்.''

ரிசீவரில் குரல் சிரித்தது.

''அப்படின்னு நீ நினைச்சுட்டிருக்கே! ஆனா நேத்து ராத்திரி ஹோட்டல் சோழாவில் நித்தியன் - விசாலி ரெண்டு பேருக்கும் ஏறக்குறைய நிச்சயதார்த்தமே ஆயிடுச்சு.''

''நோ...''

''என்ன நோ?''

''அவர் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறார்.''



''கனவு காணாதே! நித்தியனைப்பத்தி எனக்குத் தெரியும். ஆள் நல்ல டைப் கிடையாது. மும்பை ஜெயில்ல ஒரு வருஷம் உள்ளே இருந்துட்டு வந்ததுக்கான உண்மையான காரணம் என்னன்னு உனக்குத் தெரியுமா?''

''உண்மையான காரணம் என்ன?''

''மும்பை ஏர்போர்ட்ல ஒரு பொண்ணுகிட்ட அவர் தப்பா நடந்துக்கப் பார்த்தார். கற்பழிப்பு முயற்சி.''

சாந்தா உறைந்துபோன குரலில் குறுக்கிட்டாள்.

''நோ... நான் நம்பமாட்டேன்.''

''நீ நம்பாததைப் பத்தி எனக்கு கொஞ்சம்கூட கவலையில்லை. நித்தியனை நம்பி உன்னோட வாழ்க்கையை நாசம் பண்ணிக்க வேண்டாம்ன்னு எச்சரிக்கை பண்ணத்தான் இந்த போன். எனக்குத் தெரிஞ்சதை சொல்லிட்டேன். அப்புறம் உன்னோட இஷ்டம்.''

• மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்டுவிட சாந்தாவும் ரிசீவரை சாத்திவிட்டு அறையை நோக்கி மௌனமாய் நடந்தாள்.

இருதயத்துக்குள் இப்போது ஒரு புயல் மையம் கொண்டுவிட்ட உணர்ச்சி.

'போனில் பேசிய நபர் சொன்னதெல்லாம் உண்மையா?'

'நிச்சயமாய் இருக்காது.'

'என் நித்தியன் அப்படிப்பட்டவர் இல்லை.'

'இந்த போன்காலைப் பத்தி அவரிடம் பேசியாக வேண்டும்.'

மணிக்கட்டில் நேரம் பார்த்தாள் சாந்தா.

மணி 9.15.

'சரியாய் பத்து மணிக்கெல்லாம் பனகல் பார்க் பஸ் ஸ்டாப்புக்கு நித்தியன் வரச் சொல்லியிருக்கிறார். பட்டுப்புடவையும் நகையும் வாங்குவதாய் ஏற்பாடு.'

'போய்ப் பார்க்கலாம்.'

அறைக்குள் நுழைந்த சாந்தா வெளியே புறப் பட்டு செல்வதற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டாள்.

* * *

பனகல் பார்க் பஸ் நிறுத்தம்.

சரியாய் பத்து மணி.

எதிர் வெய்யில் முகத்தை தீய்ப்பதையும் பொருட்படுத்தாமல் கும்பலோடு கும்பலாய் நின்றிருந்தாள் சாந்தா. பஸ்கள் வருவதும் பயணிகளை உதிர்ப்பதும் ஏற்றிக் கொள்வதுமாய் நிமிஷங்கள் கரைந்து கொண்டிருந்தன.

நேரம் 10.15.

நித்தியனைக் காணோம். சாந்தாவின் பார்வை சாலையில் ஊர்ந்து வரும் மாருதி கார்களை ஆவலாய்ப் பார்த்துவிட்டு இருண்டது.

'என்றைக்கும் இப்படி லேட் செய்யமாட்டாரே.'

நேரம் 10.25. வெய்யில் அப்போது முன் மண்டையை பிளந்தது. அடித்த காற்றில் அனல் சாந்தாவுக்கு கால்கள் இற்றுப் போகிறமாதிரி கெஞ்ச பஸ் ஷெல்டருக்கு கீழே இருந்த திட்டு ஒன்றில் அசௌகர்யமாய் உட்கார்ந்து கொண்டாள்.

நேரம் உள்ளங்கையில் வைத்த பனிக்கட்டியாய் கரைய - நித்தியனைக் காணோம்.

10.30, 10.40, 10.45, 10.55 சாந்தா பொறுமை யிழந்து எழுந்தாள். நேரம் இப்போது சரியாய் பதினோரு மணி.

'அவருடைய கம்பெனிக்கு போன் செய்தாவது பார்க்கலாமா?'

யோசித்த விநாடி அந்த இளைஞன் தயக்கமாய் பக்கத்தில் வந்து நின்றான். மெல்லிய குரலில் கேட்டான்.

''நீங்கதானே சாந்தா?''

''....''



# 9

''நீங்கதானே சாந்தா'' என்று கேட்ட அந்த இளைஞனை தன் பிறை நெற்றி சுருங்க ஏறிட்டுப் பார்த்தாள் சாந்தா.

''ஆமா...''

''நித்தியனுக்காக நீங்க இப்போ வெயிட் பண்ணிட்டிருக்கீங்க இல்லையா?''

''ஆமா...''

''நித்தியன் இப்போ இங்கே வரமாட்டார்.''

''ஏன்?''

''இப்போ அவர் என் வீட்டுலதான் இருக்கார். வர்றீங்களா... போகலாம்.''

''நீங்க யாரு? அவர் ஏன் வரலை?''

அந்த இளைஞன் புன்னகைத்தான். ''என் பேர் முகுந்தன். நித்தியனும் நானும் காலேஜ் படிக்கும்போது கிளாஸ்மேட்ஸ்.''

அவனை நம்பாத பார்வை பார்த்தாள். அந்த இளைஞன் தன் புன்னகையின் பரப்பை பெரிதாக்கினான்.

''என்ன நீங்க நம்பலைன்னு உங்க பார்வையே சொல்லுது.... நோ... ப்ராப்ளம்... இந்தாங்க என்னோட செல்போன்.'' சொன்னவன் தன் சட்டைப் பைக்குள் வைத்திருந்த செல்போன் எடுத்து சாந்தாவிடம் நீட்டினான்.

''இது எதுக்கு?''

''நான் சொல்ற நம்பரை அதுல டயல் பண்ணுங்க. உங்க கூட நித்தின் பேசுவார்.''

சாந்தா தயக்கமாய் செல்போன் வாங்கிக் கொள்ள, அந்த முகுந்தன் எண்களை ச சொன்னான்.

சாந்தா டயல் செய்துவிட்டு செல்போனை காதுக்குக் கொடுக்க சில விநாடிகளுக்குப் பிறகு மறுமுனையில் நித்தியனின் குரல் கேட்டது.

"ஹலோ"

"என்னங்க... நான் சாந்தா."

"சாந்தா! நீ உடனே என் ஃப்ரண்ட் முகுந்தனோடு புறப்பட்டுவா."

"எதுக்காக இப்படி? ஏதாவது பிரச்னையா?"

"நேர்ல வா... சொல்றேன்."

"என்னங்க... எனக்கு பயமாயிருக்கு."

"பயப்படாமே வா... சாந்தா, நான் எதுக்கு இருக்கேன்?" நித்தியன் போனை அணைத்துவிட, சாந்தா, தன் கையிலிருந்த செல்போனை மௌனமாய் முகுந்தனிடம் நீட்டினாள்.

அவன் கேட்டான்.

"இப்ப என் மேல் நம்பிக்கை வந்ததா?"

"ம்..."

"போலாமா?"

"ம்..."

"வாங்க! காரை பக்கத்து ரோட்ல பார்க் பண்ணியிருக்கேன்."

முகுந்தன் நடக்க ஆரம்பித்துவிட, சாந்தா குழப்பம் மண்டிய முகத்தோடு அவனைப் பின் தொடர்ந்தாள்.

* * *

**கா**ர் பெசண்ட் நகருக்குள் நுழைந்து கல க்ஷேத்ரா காலனியின் எல்லையைத் தொட்டு போகன் வில்லா பூக்கள் பூத்துக் கொட்டிய ஒரு பங்களாவுக்குள் பிரவேசித்தது. போர்டிக்கோவுக்குள் நின்றது.

முகுந்தனும் சாந்தாவும் காரைவிட்டு இறங்கினார்க



"வாங்க... சாந்தா..."

உள்ளே கூட்டிப் போனான்.

பங்களா நிசப்தமாக இருந்தது. ஹால் பெரிதாய் விரிந்து இரண்டு பக்கமும் வளைந்து செல்லும் மாடிப்படிகளைக் காட்டியது.

ஹாலுக்குள் நுழையும்போதே பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான் நித்தியன்.

"வா... சாந்தா..."

"என்னங்க இதெல்லாம்..." முகம் முழுக்க வியர்த்து பொடிந்து இருக்க சாந்தா அழுகைக் குரலோடு கேட்டாள். முகுந்தன் நகர்ந்து போய்விட புன்னகை செய்தான் நித்தியன்.

"டோன்ட் கெட் டென்ஷன்! மொதல்ல இப்படி வந்து உட்கார்." சோபாவைக் காட்டினான்.

சாந்தா உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடியே நித்தியன் கேட்டான்.

"இன்னிக்குக் காலையில் ஒன்பது மணிக்கு உனக்கு ஒரு போன் வந்திருக்குமே?"

"ஆமா..."

"போன்ல பேசினவர் என்னைப் பத்தி மோசமா பேசியிருப்பாரோ?"

"ஆமா! உங்களுக்கும் விசாலிக்கும் நேத்து ராத்திரி சோழா ஹோட்டலில் நிச்சயதார்த்தம் ஆயிட்டதா சொன்னார்."

"அப்புறம்?"

"நீங்க ஜெயிலுக்குப் போகக் காரணம் மும்பை ஏர்போர்ட்ல ஒரு பெண்ணை கற்பழிக்கப் பார்த்தீங்களாம்."

"அவ்வளவுதானா?" நித்தியன் சோபாவுக்கு சாய்ந்து கொண்டு சிரிக்க சாந்தா கவலையாய் கேட்டாள்.

"போன்ல பேசினது யாருங்க?"

"சொன்னா உனக்கு ஆச்சரியமாயிருக்கும்."

''யாரு?''

''உன்னோட வருங்கால மாமனார்.''

''உங்க அப்பாவா?''

''அவரேதான்! நான் குளியலறையில இருக்கிறதா நெனச்சுக்கிட்டு அவர் கார்ட்லஸ் டெலிபோனை மொட்டை மாடிக்குக் கொண்டுபோய் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன்.''

''நம்ம காதல் விஷயம் உங்கப்பாவுக்குத் தெரியாதுன்னு சொன்னீங்க?''

''நானும் அப்படித்தான் நினைச்சுட்டிருந்தேன். பட் அவருக்கு எப்படியோ தெரிஞ்சிருக்கு.''

''எப்படி?''

''தெரியலை! அதைப் பத்தி நாம இப்போ கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. அந்த ஜெக்தீஷ் மூலமா விஷயம் தெரிஞ்சிருக்கலாம்.''

''ஜெக்தீஷா... யாரது?''

''விசாலிக்கு 'ரூபா'ன்னு ஒரு பிரண்ட். அந்த ரூபாவோட ஹஸ்பெண்ட் பேர் ஜெக்தீஷ். அவனுக்கு நம்ம காதல் விஷயம் தெரிஞ்சிருக்கு! நேத்து ஹோட்டல்ல பார்ட்டியிலேயே வெச்சு என்கிட்ட தனியா கேட்டான்.''

''ஜெக்தீஷுக்கு விஷயம் தெரிஞ்சிருந்தா அது ரூபாவுக்கும் ரூபாகிட்டேயிருந்து விசாலிக்கும் தெரிஞ்ச மாதிரிதானே?'

''இந்த சந்தேகத்தை ஜெக்தீஷ்கிட்டே நானும் கேட்டேன். அவன் இந்த விஷயம் வேற யாருக்கும் தெரியாதுன்னு சொன்னான்.''

''ஜெக்தீஷ் பொய் சொல்றார்னு நினைக்கிறேன்.''

''நோ... நோ... விசாலிக்கு நம்ம காதல் விவகாரம் தெரிஞ்சிருந்தா இத்தனை சந்தோஷமா இருக்கமாட்டா.''

''ஜெக்தீஷ் அவ்வளவு ஸ்ட்ரிக்டா இருக்கிற பட்சத்தில் உங்க அப்பாகிட்டேயும் சொல்லியிருக்க



மாட்டார். உங்கப்பாவுக்கு முன்னாடியே நம்ம காதல் தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.''

''அப்படியும் இருக்கலாம். இல்லேன்னா, என்னோட கல்யாண விஷயத்துல இவ்வளவு ஆர்வம் காட்ட மாட்டார். ஒரு பொய் நாடகத்தையும் என்கிட்டே ஆடிக் காட்டியிருக்க மாட்டார்.''

''பொய் நாடகமா?''

''ம்... நாடகம்தான் போட்டார். ஒரங்க நாடகம். கம்பெனி நஷ்டத்துல ஓடிக்கிட்டு இருக்காம். ஏகப்பட்ட நஷ்டமாம். அந்த நஷ்டத்தையெல்லாம் சரி செய்ய விசாலியோட அப்பா ஒத்துக்கிட்டாராம். அந்த நன்றிக்காக நான் விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கணுமாம். நான் கல்யாணம் பண்ணிக்க மறுத்தா அவர் துப்பாக்கியால் சுட்டுக்கிட்டு தற்கொலை பண்ணிக்குவாராம்.''

''அய்யய்யோ...''

''என்ன அய்யய்யோ.''

''உங்கப்பா சொன்னது உண்மையா இருந்துடப் போகுதுங்க.''

''அது உண்மையில்லைன்னு நேத்து ராத்திரி ஹோட்டல்ல பார்ட்டி நடக்கும்போதே தெரிஞ்சுக் கிட்டேன்.''

''எப்படி?''

''என்னோட அப்பாவை பார்ட்டி முடிஞ்சதும் வழியனுப்பறதுக்காக விசாலியோட அப்பா காருக்குப் பக்கத்துல வந்தார். விசாலி கொஞ்சம் தள்ளி என்கிட்டே 'தொணதொண'ன்னு ஏதேதோ பேசிக் கிட்டிருந்தா. அவ பேசறதை நான் காது கொடுத்து கேட்காமே எங்கப்பா என்ன பேசிட்டிருக்கார்ங்கிறதை உன்னிப்பா கவனிச்சேன். அதுல அவர் பேசின ஒரு வாக்கியம் எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்துருச்சு.''

சாந்தா நிமிர்ந்தாள்.

''அவர் என்ன சொன்னார்?''

''நான் போட்ட பிஸ்டல் நாடகம் நல்லாவே ஒர்க் பண்ணியிருக்குன்னு சொன்னார். அந்த நிமிஷத்திலிருந்தே நான் ஜாக்கிரதையாயிட்டேன். அவரோட நடவடிக்கைகளை கண்காணிக்க ஆரம்பிச்சேன். இன்னிக்கு காலைல எட்டு மணியிலிருந்தே என்னை குளிக்கப் போகலையா... குளிக்கப் போகலையான்னு கேட்டுக்கிட்டு இருந்தார். நான் குளிக்கப் போகிற நேரத்தில் இவர் என்னதான் பண்ணப் போகிறார்னு தெரிஞ்சிக்கிறதுக்காக பாத்ரூமுக்குள்ளே நுழைஞ்சு ஷவரை திருப்பிட்டு வெளியே வந்து அவரை வாட்ச் பண்ணினேன். அவர் கார்ட்லெஸ் டெலிபோனோட மாடிக்குப் போனார். நானும் ஃபாலோ பண்ணிப் போய் அவரை அப்ஸர்வ் செய்தேன். அவர் உனக்கு போன் பண்ணி மிரட்டினதையும் கேட்டேன். எனக்கு ஒரே ஷாக்.''

சாந்தா குறுக்கிட்டுக் கேட்டாள்.

''சரி... நீங்க சொன்னபடி பத்துமணிக்கு பனகல் பார்க் பஸ் ஸ்டாப்புக்கு ஏன் வரலை?''

''அவர் என்னோட காரை ஃபாலோ... பண்ண டிரைவரை ஏற்பாடு பண்ணியிருக்கிற விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்டேன். ஆனா எதையுமே காட்டிக்காம குளிச்சு சாப்பிட்டுட்டு காரை எடுத்தேன். டிரைவரும் இன்னொரு கார்ல ஃபாலோ பண்ணினான். நான் அவனை ஏமாத்தறதுக்காக சிட்டியை ரெண்டு தரம் ரவுண்ட் பண்ணிட்டு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டிட பார்க்கிங்கில் காரை நிறுத்திட்டு காம்ப்ளக்ஸுக்கு உள்ளே போய் அந்தக் கட்டிட பின்பக்க வழியா வந்து பனகல் பார்க் வர்றதுக்காக ஒரு ஆட்டோ தேடிட்டு இருந்தேன். அந்த சமயத்துல என் ஃப்ரண்ட் முகுந்தன் அந்த வழியா கார்ல வந்தான். ''நித்தியன் மேற்கொண்டு பேச்சைத் தொடர் வதற்குள் கூல்ட்ரிங்க்ஸ் பாட்டில்களோடு முகுந்தன் உள்ளறையிலிருந்து வந்தான்.

''விஷயம் என்னான்னு கேட்டேன். சொன்னான். சரி... நீ என் வீட்ல இரு. நான் போய் பஸ் ஸ்டாண்டில்



காத்துக்கிட்டிருக்கிற உன்னோட சாந்தாவை கூட்டிட்டு வர்றேன்னு சொல்லி நித்தியனை இந்த வீட்ல டிராப் பண்ணிட்டு உங்ககிட்டே வந்தேன்.''

சாந்தாவின் முகம் இப்போது அதிகமான வியர்வையில் இருக்க குரலில் கலவரம். நித்தியனை ஏறிட்டாள்.

''என்னங்க!''

''ம்..''

''இவ்வளவு பிரச்சைகளுக்கு நடுவில் நாம கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணுமா?''

''கண்டிப்பா இன்னும் ரெண்டு நாள்ல வரப்போற பௌர்ணமியில் நம்ம கல்யாணம்.''

## 10

சாந்தாவின் கண்களில் ஒரு பயம் உறைந்து போயிருக்க நித்தியனைக் கலவரமாய் பார்த்தாள்.

''என் பேச்சைக் கொஞ்சம் கேக்கறீங்களா?''

''என்ன?''

''விசாலிகிட்ட உண்மையைச் சொல்லிடுங்க.''

''எந்த உண்மையை?''

''நீங்களும் நானும் காதலிக்கிற விஷயத்தைத் தான்.''

''சொல்லிட்டா அவள் உடனே நல்ல நாள் பார்த்து உனக்கும் எனக்கும் கல்யாணத்தை பண்ணி வெச்சிடுவாளா என்ன?''

''அவளை கன்வின்ஸ் பண்ணிப் பாருங்களேன்.''

''சாந்தா! விசாலியோட கேரக்டரைப்பத்தி புரிஞ்சுக்காமே நீ பேசிட்டிருக்கே... விசாலி எம்மேல ரொம்ப கிரேஸியா இருக்கா. நான் உன்னை விரும்ப றேன்னு தெரிஞ்சா அவ மனசு ஒரு போர்க்களம் மாதிரி

ஆயிடும். நாம கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாடி யாரையும் ஃபேஸ் பண்ணலாம். பட் கல்யாணத்துக்கு முன்னாடி இந்த விஷயம் விசாலிக்கு தெரியக் கூடாது.''

முகுந்தன் இப்போது குறுக்கிட்டான்.

''நித்தியன் சொல்றது கரெக்ட் சாந்தா. உங்க கழுத்துல தாலி ஏறிட்டா... அதுக்கப்புறம் யாருமே உங்களை அப்போஸ் பண்ணிப் பேச முடியாது.''

''நீங்களும் நித்தியனும் எவ்வளவுதான் எனக்கு தைரியம் கொடுத்துப் பேசினாலும் என் நெஞ்சுக்குள்ளே பயம் உதைச்சிக்கிட்டே இருக்கு.''

''சாந்தா! நான் முடிவு பண்ணிட்டேன். வர்ற பௌர்ணமியன்னிக்குக் காலையில் ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே வடபழனி கோயில்ல உனக்கும் எனக்கும் கல்யாணம். இனிமே இதுல எந்த மாற்றமும் கிடையாது.'' சொல்லிக்கொண்டே நித்தியன் எழுந்தான்.

''கிளம்பு''

''எங்கே?''

''பட்டுப்புடவை எடுக்க நல்லிக்கும், நகை எடுக்க உம்மிடியார்ஸ்க்கும் போறோம்.'

''நாளைக்குப் போகலாமா?''

''எதையும் தள்ளிப்போட அவகாசமில்லை சாந்தா. இனிமே வரப்போற ஒவ்வொரு நிமிஷத்தையும் யூஸ் பண்ணியாகணும். யோசனை பண்ணிட்டிருக்காமே கிளம்பு.''

சாந்தா தயக்கமாய் எழுந்தாள்.




ரோட்டின் எதிர் பக்கத்தில் காரை நிறுத்திக் கொண்டு டிரைவர் சீட்டிலிருந்து எட்டிப் பார்க்கும்



விசாலியை பார்வையால் வாங்கினதும், நித்தியனின் இருதயம் ஜிம்னாஸ்டிக் பேர்வழியைப் போல் ஒரு குட்டிக்கரணம் போட்டது.

கிசுகிசுப்பாய் முகுந்தனைக் கூப்பிட்டான்.

''முகுந்தன்.''

''ம்...''

''ரோட்டுக்கு எதிர் சைட்ல விசாலி கார்ல உட்கார்ந்துக்கிட்டு என்னைக் கூப்பிடறா!''

''அவ எப்படி இங்கே?''

''தெரியலை. போய் பேசிட்டு வர்றேன்.''

''நித்தியன்! சாந்தா யாருன்னு கேட்டா நீ என்ன பதில் சொல்லுவே?''

''உண்மையைச் சொல்லலாம்னு இருக்கேன். எப்படியிருந்தாலும் ரெண்டு நாள் கழிச்சு உண்மை தெரியத்தானே போகுது. அதை இன்னிக்கே இப்பவே சொல்லிட்டா என்ன?''

''வேண்டாம் நித்தியா! கல்யாணம் முடியற வரைக்கும் விசாலிக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது.''

''சரி, சாந்தா யாருன்னு கேட்டா என்ன பதில் சொல்றது?''

''என்னோட ஃபிரண்ட் முகுந்தனோட சிஸ்டர்னு இப்போதைக்கு சொல்லிவை போதும்.''

அரை மனதோடு தலையசைத்து விட்டு நித்தியன் ரோட்டைக் கடந்து எதிர்ப்பக்கம் போனான்.

விசாலி இப்போது கீழே இறங்கி நின்றிருந்தாள். மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு தலையை ஒரு பக்கமாய் சாய்த்தபடி கேட்டாள்.

''என்ன... நல்ல சில்க்ஸ் பர்ச்சேஸ் போலிருக்கே?''

''ஆமா... ஆமா... என் ஃப்ரெண்டோட சிஸ்டருக்கு வர்ற வாரம் கல்யாணம்.''

''அதை ஏன் இவ்வளவு கவலையோடு சொல்றீங்க?'' விசாலி சிரித்துவிட்டுக் கேட்டாள்.

''பர்ச்சேஸ் முடிஞ்சுதா?''

''ம்...''

''உங்க ஃப்ரண்டோட சிஸ்டரை கார்ல ஏறும்போது பார்த்தேன். ரொம்ப அழகாயிருக்காங்க... பேர் என்ன?''

''சாந்தா''

''உங்களுக்கு பட்டுச் சேலைகளைக் கூட செலக்ட் பண்ணத் தெரியுமா?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. ஃப்ரெண்ட் கூப்பிட்டான். சும்மா ஒரு கம்பெனிக்காக வந்தேன்... ஆமா நீ எங்கே இந்தப் பக்கம்?''

''பக்கத்து ரோட்லதான் எங்க லேடீஸ் கிளப். வீட்ல போர் அடிச்சா இந்தப் பக்கமா வர்றது உண்டு. ரைட்ல கட் பண்றதுக்காக முயற்சி செஞ்சபோதுதான் உங்களை நல்லி சில்க்ஸ் வாசல்ல பார்த்தேன்.

''எதிர்பாராத சந்திப்பு.''

''இதுக்காக சந்தோஷப்படறீங்களா? கவலைப்படறீங்களா?''

''சந்தோஷம்தான்.''

''உங்க முகத்தைப் பார்த்தா, அப்படித் தெரியலையே.''

''நோ... நோ... இட்ஸ் ஏ ப்ளஷர்.''

''சரி... உங்க ஃப்ரண்டையும் அவரோட சிஸ்டரையும் எனக்கு அறிமுகப்படுத்த வைக்க மாட்டீங்களா?''

''மோஸ்ட் வெல்கம்! வாயேன்!''

நித்தியன் சொல்லிவிட்டு ரோட்டைக் கடக்க விசாலி பின் தொடர்ந்தாள்.





## 12

காருக்கு வந்தார்கள்.

டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்த முகுந்தன் ஒரு புரியாத பார்வை பார்த்துக் கொண்டு கீழே இறங்கி நிற்க. நித்தியன் அவனை ஏறிட்டான்.

''முகுந்தன்! ஷீ ஈஸ் விசாலி!''

''என்னங்க... இப்படியா மொட்டையா இன்ட்ராடியூஸ் பண்றது?''

''பின்னே எப்படி பண்றது?''

''ஷீ ஈஸ் விசாலி... மை 'வுட்பி'ன்னு சொல்லணும்.

முகுந்தன் செயற்கையாய் புன்னகைத்தான். ''கிளாட் டு மீட் யூ.''

''உங்க சிஸ்டருக்கு மேரேஜ்ன்னு சொன்னார்.''

''ஆமா.''

''என்னிக்கு மேரேஜ்.''

''அ... அது... அது... வர்ற வாரம் புதன் கிழமை.'' முகுந்தன் திணறலாய் பேசிக் கொண்டிருக்கும்போதே சாந்தா காரின் பின் சீட்டிலிருந்து தயக்கமாய் கீழே இறங்கினாள்.

விசாலி அவளை நெருங்கி புன்னகைத்து தோள் மேல் கைவைத்தாள்.

''நான் விசாலி... அடுத்த மாசம் இருபதாம் தேதிக்கு மேல் அந்த விசாலியோட பேருக்குப் பின்னாடி நித்தியன் என்கிற இவரோட பேர் ஒட்டிக்கிட்டு இருக்கும்... உங்களுக்கு அடுத்த வாரம் கல்யாணமாம்... ஹார்ட்டி கங்கிராட்ஸ்... உங்க பேர் சாந்தாவா?''

''ம்...''

விசாலி சிரித்தாள். "பேருக்கு எத்த மாதிரியே சாந்தமா அழகா இருக்கீங்க. பட்டுப்புடவை எடுக்க வந்ததா இவர் சொன்னார். புடவை எடுத்தாச்சா?"

சாந்தா நித்தியனை ஒரு கலவரப் பார்வை பார்த்துக் கொண்டு தலையசைத்தாள். "ம்..."

"என்ன புடவை எடுத்திருக்கீங்கன்னு நான் பார்க்கலாமா?"

சாந்தா சில விநாடிகள் தயங்கிவிட்டு தயக்கமாய் பட்டுப்புடவை இருந்த அட்டைப் பெட்டியை எடுத்துப் பிரித்துச் சேலையைக் காட்டினாள்.

வாங்கிப் பார்த்த விசாலி "வாவ்" என்று உதட்டைக் குவித்துவிட் "சூப்பர் செலக்ஷன்! இந்தப் புடவையை யார் செலக்ட் பண்ணியது?" என்று கேட்டாள்.

"நான்தான்" நித்தியன் குறுக்கிட்டுச் சொல்ல விசாலி தன் புருவங்களை அரைமில்லி மீட்டர் உயரத்திற்கு உயர்த்தினாள்.

"உங்களுக்கு புடவைகளை செலக்ட் பண்ற இந்த சென்ஸ்கூட இருக்கா? பரவாயில்லையே. நமக்குக் கல்யாணமான பிறகு, எனக்கு இந்த புடவை செலக்ஷனைப் பத்தின கவலையே இருக்காது."

விசாலி சொல்லிவிட்டுச் சிரிக்க, பதிலுக்கு மூன்று பேரும் அவஸ்தையாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"என்ன சாந்தா... அடுத்த வாரம் உங்களுக்கு கல்யாணம். உங்க முகத்துல அந்த சந்தோஷத்துக் கான ஒரு எக்ஸ்ட்ரா மினுமினுப்பைக்கூட பார்க்க முடியலையே!"

விசாலி கேட்ட கேள்விக்கு சாந்தா எந்த பதிலும் சொல்லாமல் சிரித்து வைத்தாள்.

"நீங்க எந்தக் காலேஜ்?"

"நான் படிச்சதெல்லாம் வெளியூர் காலேஜ்."

"என்ன கோர்ஸ்?"

"பி.எஸ்.ஸி."



"ஏதாவது ஜாப் போறீங்களா?"

"இல்லை"

"உங்களுக்கு கணவரா வரப்போகிறவர் என்ன பண்ணிட்டிருக்கார். பிஸினஸா... ஜாப்பா?"

சாந்தா புறங்கழுத்தில் வியர்வையை சேலைத்தலைப்பால ஒற்றிக் கொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

"பி... பிசினஸ்..."

"விஷ் யூ எ ஹேப்பி மேரிட் லைஃப்..."

"தேங்க்யூ."

"வெறும் தேங்க்ஸ் மட்டும்தானா? என்னைக் கல்யாணத்துக்குக் கூப்பிடமாட்டீங்களா?"

சாந்தா நித்தியனைப் பார்க்க, நித்தியன் முகுந்தனைப் பார்த்தான்.

முகுந்தன் புன்னகைத்தான். "கையோடு இன்விடேஷனைக் கொண்டு வந்திருந்தா இப்பவே குடுத்து இருப்பேன். சாயந்தரத்துக்குள்ள நித்தியன் மூலமா உங்களுக்கு இன்விடேஷன் கிடைக்கும் படியா செய்யறேன்."

"வேண்டாம்... எனக்கெதுக்கு தனியா இன்னொரு இன்விடேஷன்? இவர் கூடவே நானும் கல்யாணத்துக்கு வந்துடறேன்." சொன்ன விசாலி நித்தியனை ஏறிட்டாள்.

"என்னங்க... கல்யாணத்துக்கு என்னையும் கூட்டிட்டு போவீங்களா?"

"ம்..."

"அதைக் கொஞ்சம் சந்தோஷமா சொல்றது?"

"ம்... கூட்டிட்டுப் போறேன்... அவங்களுக்கு இன்னும் கொஞ்சம் பர்சேஸ் இருக்கு. உம்மிடியார்ஸ் போகணும்."

விசாலி சிரித்தாள். "என்னைக் கிளம்புன்னு சொல்றீங்க! இட்ஸ் ஓ.கே.! நான் கிளம்பறேன்.

சாயந்தரம் ஆறு மணிக்கு உங்களுக்கு போன் பண்றேன், போனுக்குப் பக்கத்திலேயே இருங்க.''

''எதுக்கு போன்?''

''சும்மா கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கத்தான், நீங்க போனுக்குப் பக்கத்துல இல்லேன்னா நான் நேரா வீட்டுக்கு வந்துடுவேன். ரெண்டுல எது பெட்டர்னு நீங்களே யோசனை பண்ணிக்குங்க.''

விசாலி சாந்தாவுக்கு மறுபடியும் 'கங்கிராட்ஸ்' சொல்லி, கன்னத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு முகுந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு எதிர்ப்பக்கமாய் இருந்த காருக்குப் போனாள்.

## 13

மறுநாள் காலை ஒன்பது மணி.

சாந்தா குளித்து முடித்து சேலை மாற்றிக் கொண்டிருந்தபோது கதவைத் தட்டும் சத்தம் கேட்டு பக்கவாட்டு ஜன்னலை எட்டிப் பார்த்தாள். ஆயா தெரிந்தாள்.

''என்ன ஆயா...?''

''உங்களைப் பார்த்து பேசறதுக்காக ஒருத்தர் வந்து காத்திட்டிருக்கார்.''

''யார்ன்னு கேட்டியா?''

''கேட்டேன்மா... உங்களுக்கு சொந்தம்ன்னு சொன்னார்.''

''எனக்கு சொந்தமா? பேர் என்ன சொன்னார்?''

''பேரை அவர் சொல்லலை. ஆள் மீசை வெச்சுக்கிட்டு வாட்ட சாட்டமா இருக்கார்.''

''வர்றேன் போ...'' சொன்ன சாந்தா சேலையை துரிதகதியில் மாற்றிக் கொண்டு நெற்றிக்கு ஒரு ஸ்டிக்கர் பொட்டை ஒட்ட வைத்தபடி அறை



யினின்றும் வெளிப்பட்டு விசிட்டர்ஸ் அறையை நோக்கிப் போனாள்.

வெள்ளை பேண்ட் வெள்ளை சர்ட் அணிந்து புஷ்டியாய் மீசை வளர்த்து உயரமாய் தெரிந்த அந்த மனிதர் சாந்தாவைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

சாந்தா கேட்டாள்.

''நீங்க?''

''சொல்றேன் உட்கார்!''

சாந்தா தயங்கிக் கொண்டே உட்கார்ந்தாள். அவர் ஒரு விநாடி மௌனித்துவிட்டு கேட்டார்.

''நீ டெலிபோன் கிளீனிங் கேர்ள்தானே?''

''ஆமா''

''உன்கிட்ட ஒரு என்கொயரி''

''என்கொயரியா...? வாட்... அபௌட்?''

''நான் போலீஸ் டிபார்ட்மெண்ட்டிலிருந்து வர்றேன். ஸீ.., மீ ஐ.டி. கார்ட்...'' சொன்னவர் தன் சட்டையின் மேல் பாக்கெட்டில் சொருகி வைத்திருந்த ஐடெண்டிஃபிகேஷன் கார்டை எடுத்து சாந்தாவின் முகத்துக்கு நேரே பிடித்தார்.

படித்தாள்.

**ராஜ கணேஷ், இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்.**

''இட்ஸ்... ஓ.கே...! என்ன என்கொயரி?'' சாந்தா கலக்கத்தை மறைத்துக் கொண்டு இயல்பாய் கேட்டாள்.

''நேத்து உனக்கு எந்த ஏரியா ட்யூட்டி?''

''நேத்து நான் ட்யூட்டிக்கே போகலை... லீவு எடுத்துகிட்டேன்.''

''சரி... நேத்திக்கு முந்தா நாள் எங்கே ட்யூட்டி?''

''மகாராணிநகர்''

''பகல் பூராவும் இந்த டெலிபோன் க்ளீனிங் வேலை பார்த்துட்டு நைட்லேயும் வேற வேலை ஏதேனும் பார்க்கறயாமே... உண்மையா...?''

சாந்தா எரிச்சலாய் நிமிர்ந்தாள்.

''அப்படியெல்லாம் எதுவும் இல்லை.''

''கேள்விப்பட்டேனே...?''

''என்ன கேள்விப்பட்டீங்க...?''

''சாயந்தரம் ஏழு மணிக்கு மேல பார்ட்டைமா பலான வேலை பார்க்கிறதா?''

''இன்ஸ்பெக்டர்! லிமிட் யுவர் டங்க்'' - சாந்தாதன் இடக்கையின் சுட்டு விரலை கோபமாய் உயர்த்தினாள்.

''ஏம்மா இவ்வளவு கோபப்படறே?''

''இன்ஸ்பெக்டர்... நீங்க நினைக்கிற மாதிரி நான் அப்பேர்ப்பட்ட பெண் இல்லை.''

''எனக்கு புகார் வந்திருக்கேம்மா.''

''என்ன புகார்?''

''நீ உடல் வியாபாரம் செய்யறதா!''

''புகார் குடுத்தது யாரு?''

''அதை உனக்கு சொல்ல வேண்டியது இல்லை. நீ அது மாதிரியான பொண்ணா... இல்லையான்னு விசாரிக்க வேண்டியதுதான் என்னோட ட்யூட்டி.''

''நான் அதுமாதியான பொண்ணு கிடையாது.''

''சரி... போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி கையெழுத்த போட்டுட்டு போ.''

''ஸ்டேட்மெண்ட்டா? எதுக்கு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுக்கணும்?''

''நான் அப்பேர்ப்பட்ட பொண்ணு கிடையாதுன்னு ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி கையெழுத்து போட்டாத்தான் அதை ஒரு ரிக்கார்டா எடுத்துக்குவோம்.''

''இன்ஸ்பெக்டர்! திஸ் ஈஸ் டூ மச்!''

''உனக்கு டூ மச்சா படலாம். பட், போலீஸ்க்குன்னு சில ஃபார்மாலிடீஸ் இருக்கு. வாய்மொழி



ஸ்டேட்மெண்ட் எதுவும் போலீஸ் என்கொயரியில இருக்கக் கூடாது. நீ சிரமம் பார்க்காமே ஒரு நடை போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் எழுதிக் குடுத்திட்டு போயிடு.''

''நோ''

''நோ'ன்னா?''

''என்னால ஸ்டேஷனுக்கு வர முடியாது. ஸ்டேட்மெண்ட்டும் எழுதிக் கொடுக்க முடியாதுன்னு அர்த்தம்.''

ராஜகணேஷ் புன்னகைத்தர.

''இதோ பாரம்மா... காக்கி யூனிஃபார்மை போட்டுக்கிட்டு வந்து உன்னை நான் விசாரிக்காததுக்குக் காரணம் உன்னைப் பற்றி இந்த ஹாஸ்டல்ல இருக்கிற மத்தவங்க தப்பா நினைச்சுடக் கூடாதேங்கிற எண்ணம்தான் எனக்கு. நீ ஸ்டேஷனுக்கு வந்து இன்னும் ஒரு மணி நேரத்துல ஸ்டேட்மெண்ட் எழுதித்தாணும். இல்லேன்னா நான் யூனிஃபார்மை மாட்டிக்கிட்டு மறுபடியும் உன்னை ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு போக, வரவேண்டியிருக்கும். நீ இன்னும் ஒரு மணி நேரத்துல ஸ்டேஷனுக்கு வரப் போறியா? இல்லை... நான் மறுபடியும் யூனிஃபார்மோடு வரட்டுமா?''

சாந்தா இன்ஸ்பெக்டரையே வெறித்துக் கொண்டிருக்க அவர் எழுந்தார்.

''பி - ஃபைவ் போலீஸ் ஸ்டேஷன். சரியா ஒரு மணி நேர அவகாசம்... ஸ்டேஷனுக்கு வந்துடு'' சொல்லிவிட்டு ராஜகணேஷ் வாசலை நோக்கிப் போக சாந்தா ஆணியடித்த மாதிரி நின்றாள்.

'இது என்ன புதுப் பிரச்சனை?'

'முதலில் நித்தியனுக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்ல வேண்டும்!' வேகவேகமாய் டெலிபோனை நோக்கிப் போனாள்.

டயலில் எண்ணைத் தட்டியதும் ரிங் போயிற்று. ரிசீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ" வேலைக்காரப் பெண்ணின் பாமரக் குரல்.

"நித்தியன் இருக்காரா?"

"இல்லையே... கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் கம்பெனிக்கு கிளம்பிப் போனார்."

சாந்தா இணைப்பைத் துண்டித்துவிட்டு கம்பெனியின் டெலிபோன் எண்ணை டெலிபோன் கோர் பட்டன்களில் ஒற்றி எடுத்தாள்.

ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டது. கம்பெனியின் டெலிபோன் ஆபரேட்டர் குரல்.

"எஸ்... ருத்ரா கம்பெனி..."

"மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்."

"அவர் இன்னமும் கம்பெனிக்கு வரலையே?"

"வீட்டுக்கு போன் பண்ணி கேட்டேன். கம்பெனிக்கு புறப்பட்டு போயிட்டதா சொன்னாங்க..."

"மே..பி...ஆன்...த...வே...நீங்க யார் பேசறது? வந்ததும் அவர்கிட்ட சொல்றேன்."

"வேண்டாம்... ஒரு அரை மணி நேரம் கழிச்சு நானே போன் பண்றேன்."

சாந்தா ரிசீவரை வைத்துவிட்டு மோவாயைத் தாங்கியபடி பக்கத்தில் இருந்த பி.வி.சி.வர்ண நாற்காலிக்கு சாய்ந்தாள்.

நேர் எதிர் சுவரில் மாதக் காலண்டர் டிசம்பர் மாதத்தைக் காட்ட நாளைய தேதிக்கு மறுநாள் பௌர்ணமி என்ற வாசகம் தெரிந்தது.

'நாளைக்கு மறுநாள் திட்டமிட்டபடி கல்யாணம் நடக்குமா?'

'இல்லை... தட்டிப்போகுமா?'

யோசனையில் விநாடிகள் கரைந்து நிமிஷங்கள் உற்பத்தியாகி அரைமணி நேரத்தைக் கரைத்திருந்த போது சாந்தா தயக்கமாய் டெலிபோனைத் தொட்டாள்.



'இந்நேரம் நித்தியன் கம்பெனிக்கு வந்திருக்கலாம்' டயல் செய்தாள். ரிசீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ... ருத்ரா கம்பெனிஹியர்..."

"மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்..."

"இன்னும் வரலையே... உங்க பேரையும் டெலிபோன நம்பரையும் சொல்லுங்க... அவர் வந்ததும் உங்களுக்கு போன் பண்ணச் சொல்றேன்."

"வேண்டாம்... மறுபடியும் நானே ட்ரை பண்றேன்."

ரிசீவரை வைத்துவிட்டு நெற்றியைப் பிடித்துக் கொண்டாள் சாந்தா.

இன்ஸ்பெக்டர் ராஜகணேஷ் கொடுத்துவிட்டுப் போன ஒரு மணி நேர கெடு வேகவேகமாய் காலாவதியாகிக் கொண்டிருந்தது.




விசாலி அழைப்பிதழின் முகப்பில் அச்சாகியிருந்த தன் போட்டோவையும் நித்தியனின் போட்டோவையும் இமை கொட்டாமல் பார்த்தாள். ருத்ரமூர்த்தி பக்கத்தில் வந்து நின்று கண் சிமிட்டினார்.

"போட்டோ எப்படிம்மா இருக்கு?"

"ஃபெண்டாஸ்டிக் மாமா...! இந்த அழைப்பிதழை பார்த்துட்டு உங்க மகன் என்ன சொன்னார் மாமா?"

ருத்ரமூர்த்தி சிரித்தார்.

"ப்ரிண்டர்ஸிலிருந்து பத்திரிகைகளை வாங்கிகிட்டு நேரா இங்கேதாம்மா வர்றேன். இனிமேதான் நித்தியனுக்குக் கொண்டு போய் காட்டணும்."

"மாமா..."

''என்னம்மா?''

''இந்த போட்டோவோட பிலிம் எனக்கு வேணும். நான் என்னோட ஃப்ரண்ட்ஸ்களுக்காக தனியா காப்பி பிரிண்ட் பண்ணப் போறேன்.''

''போட்டோ பிலிம்தானே - நாளைக்கு இந்தப் பக்கமா வரும்போது நானே கொண்டு வந்து தர்றேன்.''

''நீங்க அதுக்காக சிரமப்பட்டு வராதீங்க மாமா. நாளைக்குக் காலையில நான் லைபரரிக்கு போகும்போது வீட்டுக்கு வந்து கலெக்ட் பண்ணிக்கிறேன். போட்டோவோட பிலிம் கலெக்ட் பண்ற சாக்கில் உங்க மகனையும் பார்த்த மாதிரி இருக்கும்.''

ருத்ரமூர்த்தி பலமாய் சிரித்தார்.

''அது இனிமே உன்னோட வீடம்மா. நீ எப்ப வேணும்னாலும் வரலாம்.''

''உங்க மகன் இப்போ வீட்ல இருக்காரா... இல்லை வெளியே கிளம்பிட்டாரா மாமா?''

''காலையில ஒன்பது மணிக்கு கம்பெனிக்கு போறேன்னு கிளம்பிப் போனான்.''

''அப்படின்னா இப்போ கம்பெனியில்தான் இருப்பார்.''

''ஆமா.''

''போன் பண்ணி பார்க்கட்டுமா மாமா?''

''தாராளமா பண்ணும்மா.''

விசாலி ஒரு குதி நடை போட்டுக்கொண்டு டெலிபோனை நோக்கிப் போக விஜயராகவன் ருத்ரமூர்த்தியை ஏறிட்டார். ''உங்களுக்கு எவ்வளவு இன்விடேஷன் தேவைப்படும் சம்பந்தி?''

''ரெண்டாயிரம்.''

''பிசினஸ் சர்க்கிளுக்கும் சேர்த்து ரெண்டாயிரம் போதுமா?''

''போதும்! நான் அதிகமா யாரையும் இன்வைட் பண்ணப் போறதில்லை. உங்களுக்கு எவ்வளவு இன்விடேஷன் வேண்டியிருக்கும்?''



''ஐயாயிரம்.''

விஜயராகவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே விசாலி வந்தாள். இடுப்பில இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு ருத்ரமூர்த்திக்கு முன்பாய் வந்து நின்றாள்.

''அங்கிள்.''

அவர் ஏறிட்டார்.

''என்னம்மா?''

''உங்க மகன் ஆபீஸுக்கு போகலை போலிருக்கே அங்கிள்.''

''ஆபீஸுக்கு போறதுக்கு முந்தி ஆடிட்டரை பார்க்கணும்னு சொல்லிட்டிருந்தான். ஒருவேளை ஆடிட்டர் ஆபிஸுக்கு போயிருக்கலாம்.''

''அங்கிள்... உங்க சன் ஆபீஸுக்கு போகாமே ஓ.பி. அடிச்சுட்டு வெளியே சுத்திட்டிருக்கிறதை நானே பார்த்தேன். அவர் ஃப்ரண்டோட சிஸ்டர்க்கு கல்யாணமாம். பட்டுப்புடவை எடுக்கிறதுக்காக வந்திருந்தார்.''

ருத்ராமூர்த்தி லேசாய் முகம் மாறினார். ''ஃப்ரண்டோட சிஸ்டர்க்கு கல்யாணம்மனா சொன்னான்?''

''ஆமா''

''ஃப்ரண்டோட பேரு...?''

''என்னமோ ஒரு பேரைச் சொன்னார். முரளியோ முகுந்தனோ... சரியா ஞாபகமில்லை. பட்டுப்புடவை எடுக்கிறதுக்காக அந்தக் கல்யாணப் பொண்ணும் வந்திருந்தா... ஒரு ஃப்ரண்டோட சிஸ்டர் கல்யாணத்துக்கு அவ்வளவு சிரத்தை எடுத்துக்கிட்டு பட்டுப் புடவை கடை வரைக்கும் வந்திருக்காரேன்னு ரொம்பவும் சந்தோஷமாயிருந்தது அங்கிள்.''

விசாலி பேசிக்கொண்டே போக...

ருத்ரமூர்த்தியின் இதய மையத்தில் ஒரு புயல் மையமிட்டு உட்கார்ந்து கொண்டது.

★ ★ ★

அழைப்பு மணியின் சத்தம் கேட்டு கதவைப் போய்த் திறந்த முகுந்தன் அந்த மத்தியான நேரத்தில் வியப்புக்குப் போனான்.

வாசற்படியில் சாந்தா.

''வாங்க... சிஸ்டர்... என்ன இந்த நேரத்துல?''

வெய்யிலில் வியர்த்துப் போயிருந்த தன் உள்ளங்கையில் தேக்கி வைத்திருந்த சிறிய பூப்போட்ட கர்ச்சீஃபால் முகத்தை ஒற்றிக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

''முகுந்தன், நீங்க இன்னிக்கு நித்தியனை பார்த்தீங்களா?''

''இல்லையே... சாயந்திரம் அஞ்சு மணிக்கு மேல இங்கே வர்றதா சொல்லியிருந்தான்... ஏன் என்ன விஷயம்?''

''நான் உடனடியா அவரைப் பார்க்கணும். விஷயம் ரொம்பவும் முக்கியம்.''

''ஆபீஸுக்கு போன் பண்ணிப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன்... அவர் அங்கே இல்லை. அதான் உங்ககிட்ட வந்தேன்.''

''ரொம்பவும் டென்ஷனா இருக்கீங்க. மொதல்ல உட்காருங்க சிஸ்டர்.''

சாந்தா புதிதாய் வியர்த்துக் கொண்டே உட்கார்ந்தாள். முகுந்தன் அவளுக்கு எதிரே உட்கார்ந்தபடி கேட்டான்.

''என்ன விஷயம் சொல்லுங்க?''

''இன்னிக்குக் காலையில ஒரு இன்ஸ்பெக்டர் வந்து என்னை மிரட்டிட்டு போனார்.''

முகுந்தன் நெற்றிப்பரப்பு சுருங்கியது. ''இன்ஸ்பெக்டர் வந்து மிரட்டிட்டுப் போனாரா... எதுக்கு...?''

சாந்தா விஷயத்தை சொல்ல முகுந்தனின் முகம் கோபச் சிவப்புக்குப் போயிற்று.

''இன்ஸ்பெக்டர் பேர் என்ன சொன்னீங்க.''



''ராஜ கணேஷ்''

''எந்த போலீஸ் ஸ்டேஷன்.''

''பி - ஃபைவ். ஒரு மணி நேரத்துக்குள்ளே ஸ்டேஷனுக்கு வந்து ஸ்டேட்மெண்ட் தரணும்னு சொல்லிட்டுப் போயிட்டார். நான் நித்தியன் போன்ல கிடைப்பாரான்னு ட்ரை பண்ணிப் பார்த்தேன். கிடைக்கல. ஹாஸ்டல்ல இருக்க பயமாயிருந்தது. வெளியே வந்து கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போய் ரெண்டு மணி நேரம் உட்கார்ந்து பொழுதைப் போக்கிட்டு இங்கே வர்றேன்.''

''நித்தியனை நீங்க மறுபடியும் காண்டாக்ட் பண்ணீங்களா?''

''வழியில் ஒரு டெலிபோன் பூத்திலிருந்து அவருடைய ஆபீஸுக்கு ட்ரை பண்ணினேன். என்கேஜ்ட் டோன் கேட்டுக்கிட்டே இருந்தது.''

முகுந்தன எழுந்தான். ''இங்கே இருந்து ட்ரை பண்ணிப் பார்க்கலாம்.''

பக்கத்து சுவரோர மேஜை மேல் இருந்த டெலிபோனைத் தொட்டு ரிசீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களை தட்டினான்.

ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ! ருத்ரா கம்பெனி ஹியர்.''

''மிஸ்டர் நித்தியன் ப்ளீஸ்...''

சில விநாடிகளுக்குப் பிறகு நித்தியனின் குரல் ரிசீவரில் கேட்டது. முகுந்தன் வெடித்தான்.

''காலையிலிருந்து எங்கேடா போனே...?''

நித்தியன் மறுமுனையில் சிரித்தான். ''அமிஞ்சிக்கரையில் ஒரு ப்ளாட் வாடகைக்கு வந்தது. அதைப் பார்த்து பேசி அட்வான்ஸ் குடுக்க போயிருந்தேன்.''

''ப்ளாட்டா...? எதுக்குடா ப்ளாட்?''

''நாளை மறுநாள் கல்யாணம் முடிஞ்சதும் சாந்தாவைக் கூட்டிக்கிட்டு என்னோட வீட்டுக்குள்

போக முடியும்? ப்ரோக்கர்கிட்ட ஒரு ப்ளாட் வேணும்னு சொல்லியிருந்தேன். காலையில ஆபீஸுக்கு போகும்போது வழியில ப்ரோக்கரைப் பார்த்தேன். அமிஞ்சிக்கரையில் ப்ளாட் ஒண்ணு வாடகைக்கு வருது... பார்க்கறீங்களான்னு கேட்டார், சரின்னு அவரையும் கார்ல ஏத்திக்கிட்டு கிளம்பிட்டேன். ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் ஆபீஸுக்கு வந்தேன்.''

முகுந்தன் படபடத்தான்.

''இங்கே விஷயம் விபரீதமா போயிட்டிருக்கு... நீ என்னடான்னா குடித்தனம் நடத்த ப்ளாட் பார்க்க போயிட்டியா?''

''நீ என்னடா சொல்றே?''

''இப்ப... நீ ஃப்ரீயா?''

''ஃப்ரீதான். ஏன்?''

''நீயும் நானும் இப்போ பி-ஃபைவ் போலீஸ் ஸ்டேஷனுக்கு போக வேண்டியிருக்கு...''

''எதுக்கு?''

''நேர்ல வந்து சொல்றேன். ரெடியா இரு'' முகுந்தன் ரிசீவரை வைத்துவிட்டு சாந்தாவிடம் திரும்ப அவள் கவலையாய் கன்னத்தில் கை வைத்திருந்தாள்.

''சிஸ்டர்.''

நிமிர்ந்தாள்.

''நீங்க வீட்லயே இருங்க... நித்தியனும் நானும் போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போய் அந்த இன்ஸ்பெக்டர்கிட்டே பேசிட்டு வந்துடறோம்.''

''வேண்டாங்க முகுந்தன்.... விவகாரம் பெரிசாயிடும்.''

''நீங்க பயப்படாதீங்க சிஸ்டர்... எனக்குத் தெரிஞ்ச ஒரு வெல்-நோட்டட் லாயரையும் கூட்டிக்கிட்டுத்தான் ஸ்டேஷனுக்கு போறோம். போலீஸ் எப்பவுமே சட்டம் தெரியாதவங்களைத்தான்



மிரட்டிப் பார்க்கும். அந்த இன்ஸ்பெக்டர், ராஜகணேசை உங்ககிட்டே மன்னிப்பு கேட்க வைக்கிறோம்... போதுமா?''

சாந்தா கண்களில் நீர் கோர்த்தாள்.

''முகுந்தன்''

''சொல்லுங்க சிஸ்டர்.''

''நாளைக்கு மறுநாள் எனக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்குமா?''

''உங்களுக்கு ஏன் இந்த அவநம்பிக்கை?''

''நடக்கிற நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்த்தா எனக்கு சந்தேகமாயிருக்கு.''

''ஒரு சந்தேகமும் வேண்டியது இல்லை. நாளைக்கு நல்ல நாள். பௌர்ணமிதான். அந்த நாள் உங்களுக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கப் போறது நிச்சயம்... இப்ப நான் நித்தியனைப் பார்க்கத்தான் கிளம்பிட்டிருக்கேன். மொதல்ல இந்த போலீஸ் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கணும்... ஒரு மணி நேரத்துல நானும் நித்தியனும் இங்கே வர்றோம். ஆமா நீங்க லஞ்ச் சாப்பிட்டீங்களா?''

''இல்லை! எனக்கு வேண்டவும் வேண்டாம். பசியில்லை...''

''சரி. ஃப்ரிஜ்ல ஃப்ரூட்ஸ் இருக்கு... எடுத்துக்குங்க... கதவை உள்பக்கமா லாக் பண்ணிக்குங்க...''

முகுந்தன் பக்கத்து அறைக்குப்போய் துரித கதியில் டிரஸ் மாற்றிக் கொண்டு கிளம்பினான்.

* * *

முகுந்தன் சொன்னதைக் கேட்டு கொதித்துப் போன நித்தியன் பி.ஃபைவ் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி காரை வேகமாய் விரட்டிக் கொண்டிருந்தான். பொருமினான்.

''முகுந்தன்! இதெல்லாம் என் அப்பாவோட கைங்கர்யமாத்தான் இருக்கும்னு நினைக்கிறேன்.''

''உன்னோட அப்பா இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து போவாரா என்ன?'''

''அவர் பணத்துக்காக எதையும் பண்ணக் கூடியவர். மனசுல ஒண்ணை நினைச்சா எப்பாடு பட்டாவது சாதிக்கக்கூடிய ஜாதி.''

''சாந்தா அரண்டு போயிட்டா.''

''அந்த இன்ஸ்பெக்டர் பேர் என்ன.'''

''ராஜகணேஷ்.''

''ஒரு பொண்ணை பொட்டத்தனமா வந்து மிரட்டிட்டு போலாம்ன்னு எந்த சட்டம் சொல்லுதுன்னு கேட்கலாம்.''

கார் பிஃபைவ் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் செலுத்தப்பட்ட ஒரு அம்பைப் போல் பறந்தது.

## 15

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போனார்கள் நித்தியனும் முகுந்தனும்.

எதிர்ப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவரிடம் நித்தியன் கேட்டான்.

''இன்ஸ்பெக்டர் ராஜகணேஷைப் பார்க்கணும்.''

''அவர் ரிக்கார்ட்ஸ் ரூம்ல இருக்கார். ஒரு பத்து நிமிஷத்துல வந்துடுவார்... உட்காருங்க சார்...''

சுவரோரமாய் போட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்தார்கள்.

பதினைந்து நிமிஷம் கரைந்து காணாமல் போயிருந்தபோது இன்ஸ்பெக்டர் ராஜகணேஷ் நாலைந்து ஃபைல்களோடு தன் மேஜைக்கு வந்தார்.

நித்தியன் - முகுந்தன் மேல் பார்வையைப் போட்டபடி புருவங்களை மேலே உயர்த்தினார்.



''யாரு?''

நித்தியன் எழுந்து பக்கத்தில் வந்தான்.

''சார்... இங்கே இன்ஸ்பெக்டர் ராஜகணேஷ்?''

''நான்தான்''

''என் பேர் நித்தியன். உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''உட்காருங்க''

உட்கார்ந்ததும் கேட்டார்.

''என்ன விஷயம்.'' நித்தியன் சற்றே வேகமாய் பேச்சை ஆரம்பித்தான்.

''சார்... சாந்தாங்கிற பொண்ணை அவ இருக்கிற ஹாஸ்டலுக்குப்போய் கீழ்த்தரமான முறையில் மிரட்டிட்டு வந்திருக்கீங்களே... இது எந்த விதத்துல நியாயம் சார்?''

ராஜகணேஷ் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் குரலில் அலட்சியத்தைக் கலந்து கொண்டு கேட்டார்.

''அந்த சாந்தாவுக்கு நீங்க என்ன வேணும்.''

''நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறவன்.''

''அப்படீன்னா இப்போ லவ்வர்ஸ்?''

''ஆமா.''

''சரி... இப்போ உங்க புகார் என்ன?''

''சாந்தா ஒரு குடும்பப் பொண்ணு. ஷீ ஈஸ் நாட் எ ப்ராஸ்ட்டியூட்... அவளை ஒரு மோசமான பொண்ணு மாதிரி நினைச்சுட்டு அவ தங்கியிருக்கிற ஹாஸ்ட்டலுக்கே போய் இன்டீஸண்ட்டா என்கொயரி பண்றது எந்த விதத்துல நியாயம் சார்?''

ராஜகணேஷ் லேசாய் முகம் சிவந்தார்.

''நியாய அநியாயத்தைப் பத்தி ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரான எனக்கு நீங்க சொல்லித்தர வேண்டியது இல்லை. ஒரு புகார் அடிப்படையிலதான்

அந்தப் பொண்ணை நான் விசாரிக்க வேண்ட வந்தது.''

''என்ன புகார்?''

''டெலிபோன் க்ளீனிங் வேலையில் ஈடு பட்டிருக்கிற சில பெண்கள் பணக்கார வீட்டு பையன்களோடு ஜாலியா இருந்துட்டு அதுக்கப்புறம் வயித்துல குழந்தை உண்டாயிட்டதா சொல்லி ப்ளாக் மெயில் பண்ணி பணம் பறிக்கற வேலையைச் செய்யறதா புகார்.''

''புகார் யார் கொடுத்தது?''

''அதையெல்லாம் உங்ககிட்ட சொல்லிக் கிட்டிருக்க வேண்டியது இல்லை. எங்களுக்கு வந்த புகார் உண்மையா, பொய்யான்னு விசாரிக்கறதுக்காக டெலிபோன் க்ளீனிங் துறையில் வேலை செய்யும் பல பெண்களை இது சம்பந்தமா என்கொயரி பண்ணினேன். அந்தப் பெண்களில் உங்க சாந்தாவும் ஒண்ணு. எஸ்... எ...போலீஸ் ஆபீஸர் ஒரு புகார் சம்பந்தமா யாரையும் விசாரிக்க எனக்கு உரிமை இருக்கு.''

''நீங்க சாந்தாவை விசாரிக்கலை. மிரட்டி யிருக்கீங்க. அவளை மோசமான வார்த்தைகளால் திட்டி கேவலப்படுத்தியிருக்கீங்க. எல்லாத்துக்கும் மேலா ஸ்டேஷனுக்கு வரச்சொல்லி ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுக்கச் சொல்லி நிர்பந்தம் பண்ணி யிருக்கீங்க. ஒருமணி நேரத்துக்குள்ள ஸ்டேஷனுக்கு வரலைன்னா யூனிஃபார்மோடு ஜீப்ல வந்து இழுத்துட்டு போவேன்னு சொ யியிருக்கீங்க.''

''ஆமா... சொன்னேன்.''

''ஒரு ஃபேமிலி லேடிகிட்ட இப்படித்தான் அநாகரீகமா என்கொயரி பண்றதா?''

''போலீஸ் என்கொயரி எப்பவுமே கொஞ்சம் ஹார்ஷாத்தான் இருக்கும். விசாரணையில் கொஞ்சி பேசிட்டிருக்க முடியாது. உண்மையை வரவழைக் கிறதுக்காக சிலசமயம் கொஞ்சம் வரம்பு மீறியும் பே வேண்டி வரலாம்.''



''அப்படி நீங்க பேச வேண்டியது ஒரு கிரிமினல் கிட்டே— ஒரு அப்பாவி பொண்ணுகிட்ட இல்லை.''

ராஜகணேஷ் தன் சுட்டு விரலை உயர்த்தினார்.

''லுக் மிஸ்டர் நித்தியன்! யாரை எப்படி என்கொயர் பண்ணணும்னு எங்களுக்குத் தெரியும். நீங்க ஒண்ணும் எங்களுக்கு கத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.''

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... குற்றவாளிகளை தண்டிக்கவும் நல்லவங்களுக்கு பாதுகாப்பாக இருக்கவும்தான் போலீஸ் டிபார்ட்மெண்ட் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்காங்க என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக அதை நீங்க துஷ்பிரயோகம் பண்றது சரியில்லை.''

நித்தியன் அழுத்தம் திருத்தமாய் சொல்லிவிட்டு எழுந்தான்.

அதுவரைக்கும் பேசாமல் இருந்த முகுந்தன் இப்போது வாயைத் திறந்தான்.

''இன்ஸ்பெக்டர்... வீ ஆர் எஜுகேடட் அண்ட் கல்ச்சர்ட் பீப்பிள். ஒரு பெண்ணை யார் டீஸ் பண்ணினாலும் அது குற்றம்தான். இனியொரு தடவை நீங்க அந்தத் தப்பை பண்ணினா நாங்க உங்கமேல 'டீ பேமேஷன் சூட்' போட வேண்டி யிருக்கும். உங்க யூனிஃபார்முக்கு எவ்வளவு அதிகாரத்தை அந்த சட்டம் கொடுத்திருக்கோ அதை மட்டும் எடுத்துக்குங்க போதும்...''

ராஜகணேஷ் திகைத்துப்போய் உட்கார்ந்து விட நித்தியனும் முகுந்தனும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

ஸ்டேஷன் படியிறங்கும்போது நித்தியன் சட்டென்று பிரேக் போட்ட மாதிரி நின்றான்.

முகுந்தன் வியப்பாய் பார்த்தான்.

''என்ன நித்தியன் நின்னுட்டே?''

''அங்கே பாரு...''

பார்த்தான்.

விசாலி கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டருக்கு சாய்ந்து நின்று மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டி நின்றிருந்தாள்.

''என்ன நித்தியன்? இவ வந்து இப்படி நிக்கறா?''

''எங்கே போனாலும் துரத்திட்டு வந்துட றாளே?''

''இப்ப என்ன பண்றது?''

''வா, பேசிப் பார்ப்போம்.''

ரோட்டைக் கடந்து விசாலியை நெருங்கி னார்கள். நித்தியன் ஒரு அவஸ்தை சிரிப்போடு கேட்டான்.

''என்ன விசாலி இந்தப் பக்கம்?''

விசாலியின் முகத்தில் இப்போது ஒரு இறுக்கம் பரவியிருக்க, கண்களில் வழக்கமாகக் காணப்படும் குறுகுறுப்பு மிஸ்ஸிங்.

விசாலி நித்தியனையே சில விநாடிகள் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்ல உதடுகளை அசைத்தாள்.

''இனிமேலாவது நாம உண்மை பேசலாமா?''

''உண்மையா? என்ன உண்மை?''

''தெரு முனையில ஒரு ரெஸ்டாரெண்ட் இருக்கு. சத்யா ரெஸ்டாரெண்ட். அங்கே வாங்க பேசிக்கலாம்.''

கைனடிக் ஹோண்டாவின் செல்ஃப் ஸ்டார்ட் டரின் மேல் தன் வலது கை கட்டை விரலை வைத்து அழுத்தினாள் விசாலி.

★★★

சத்யா ரெஸ்டாரெண்ட்.

கூட்டம் அதிகம் இல்லை. ஒரு மூலையோர மேஜையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். ஆர்டருக்காக வந்து நின்ற பேரரிடம் ''மூணுரோஸ் மில்க்'' என்று சொல்லிவிட்டு நித்தியனை ஏறிட்டாள் விசாலி.



''உங்களைப் பார்த்து பேசறதுக்காக உங்க கம்பெனிக்கு வந்தேன். நீங்க வெளியே கிளம்பிட்டீங்க. ஃபாலோ பண்ணினேன். போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிட்டீங்க. என்ன விஷயம்? எதுக்காக இந்த கண்ணாமூச்சி ஆட்டம்?''

''விசாலி... வந்து... வந்து...''

''கற்பனைக் கதை எதுவும் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது அக்மார்க் உண்மை. எதுக்காக போலீஸ் ஸ்டேஷன் வரை வந்திருக்கீங்க.''

நித்தியன் முகுந்தனைப் பார்க்க அவன் தன் நெற்றியைக் கீறிக்கொண்டு ''இனிமே எதையும் மறைக்க வேண்டாம். சொல்லிடு...'' என்றான்.

''என்னால முடியாது. நீயே சொல்லிடு.''

''இட்ஸ் ஓ.கே.'' தோள்களை குலுக்கிக் கொண்ட முகுந்தன் விசாலியை நேர்பார்வை பார்த்துக் கொண்டு சொன்னான்.

''மிஸ் விசாலி! நித்தியன் சாந்தா கல்யாணம் நாளைக்கு மறுநாள் காலையில் கோயில்ல வெச்சு நடக்கப் போகுது. ரெண்டு பேருமே ரொம்ப நாளா லவ்வர்ஸ். நித்தியனோட அப்பாவுக்கு இந்த காதல் விவகாரம் பிடிக்கலை. சினிமாவில் வர்ற வில்லன் மாதிரி ஏதேதோ தொந்தரவு கொடுத்துட்டிருக்கார். அதனோட உச்சகட்டம்தான் நாங்க போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போனது.''

முகுந்தன் சொல்லி முடிக்க நித்தியன் விசாலியின் முகத்தை பயமாய் பார்த்தான்.

அவள் உதட்டில் ஒரு புன்னகை ஒட்டி யிருந்தது.

''நித்தியன்... என்னை நீங்க கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்தில் அவ்வளவு தீவிரம் காட்டாத போதே எம் மனசுல ஒரு சந்தேகம் வந்தது. பட் - ஜெயிலுக்கு போய்ட்டு வந்த கில்டிக் கான்ஸியஸ் காரணமா ஒரு வேளை தயக்கம்

காட்டறீங்களோன்னு நினைச்சேன். இப்பத்தான் உண்மையான காரணம் வருது.''

''ஸாரி... விசாலி... நான்... வந்து...''

''எதுக்காக சாரி!''

''என்னோட இந்த முடிவு உனக்கு அதிர்ச்சியையும் மனவருத்தத்தையும் தரலையா?''

''அதிர்ச்சிதான். மனவருத்தம்தான். அதுக்காக சினிமா கதாநாயகி மாதிரி ஸோலோ ஸாங் பாடச் சொல்றீங்களா? நெவர். எதையுமே நான் ஸ்போட்டிவாத்தான் எடுத்துக்குவேன். ஆசைப்படற பொருள் கைக்கு கிடைக்கலையேங்கிறதுக்காக அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி மத்தவங்க சந்தோஷத்தை பாழ் பண்றதுல எனக்கு கொஞ்சம் கூட விருப்பம் கிடையாது. உங்களுக்கு இப்படியொரு காதல் விவகாரம் இருக்கிறதை லேசா 'ஹிண்ட்' பண்ணியிருந்தாக்கூட போதும்... ஒரு பொக்கேயை கொடுத்து வாழ்த்து சொல்லிட்டு நான் பாட்டுக்கு போயிட்டிருப்பேன்.

''விசாலி''

''ரோஸ் மில்க் வந்தாச்சு... சாப்பிடுங்க. சாப்பிட்டதும் நாம மூணு பேரும் சாந்தாவைப் பார்க்கப் போறோம். நாளைக்கு நடக்கப் போகிற கல்யாணத்துக்கு யார் தலைமை தெரியுமா?''

நித்தியனும் முகுந்தனும் விழிக்க விசாலி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''நான்தான்.''

''விசாலி! என்னோட காதல் விஷயத்தை இவ்வளவு ஈஸியா எடுத்துக்குவேன்னு நான் கொஞ்சம்கூட நினைச்சே பாக்கலை.''

''நான் மொதல்ல சாந்தாவைப் பார்க்கணும். பேசணும். சாந்தா இப்போ எங்கேயிருக்கா?''

முகுந்தன் சொன்னான்.

''என்னோட வீட்லதான்.''



''உங்க போன் நம்பர் என்ன? சாந்தாவுக்கு அட்வான்ஸா போனிலேயே வாழ்த்துக்களைச் சொல்லிடலாம்.''

விசாலி கேட்டுக்கொண்டே தன் வானிடி பேக்கில் இருந்த செல்போனை எடுத்துக் கொண்டாள். முகுந்தன் தன் வீட்டு டெலிபோன் எண்ணைச் சொல்ல விசாலி எண்களைத் தட்டினாள்.

மறுமுனையில் ரிங் போயிற்று.

போயிற்று. போயிற்று.

போய்க் கொண்டேயிருந்தது.

மறுமுனையில் ரிசீவர் எடுக்கப்படவில்லை.

ஒரு நிமிஷம்... இரண்டு நிமிஷம்... மூன்று நிமிஷம்... ரிசீவர் எடுக்கப்படவில்லை.




விசாலி தன் கையில் இருந்த செல்போனை அணைத்துவிட்டு முகுந்தனை ஏறிட்டாள்.

''ரிங் போயிட்டே இருக்கு. ரிசீவரை யாரும் எடுக்கலையே?''

''சாந்தா வீட்ல இருக்கணுமே? போனை கொண்டாங்க... நான் ட்ரை பண்ணிப் பார்க்கிறேன்.''

சொன்ன முகுந்தன் விசாலியிடம் இருந்த செல்போனை வாங்கி டயலில் தன் வீட்டு டெலிபோன் எண்களைத் தட்டிவிட்டுக் காதுக்குக் கொடுத்தான்.

ரிங் போயிற்று.

ரிசீவர் எடுக்கப்படவில்லை.

முகுந்தன் லேசாய் முகம் மாறி நித்தியனைப் பார்த்தான்.

''சாந்தா வீட்ல இல்லை போலிருக்கே.''

''வீட்ல இருக்காமே எங்கே போவா முகுந்தன்? போன் ஒருவேளை அவுட் ஆஃப் ஆர்டராய் இருக்குமோ?''

''நிச்சயமா போன் அவுட் ஆஃப் ஆர்டர் கிடையாது. ஒரு மணி நேரத்துக்கு முந்திவரை கூட டெலிபோன் நல்ல முறையில் இயங்கிட்டுத்தான் இருந்தது.''

''கொண்டா! நான் டயல் பண்ணிப் பார்க்கிறேன்.''

நித்தியன் இப்போது செல்போனை வாங்கி ட்ரை செய்ய ரிசீவர் மறுமுனையில் எடுக்கப்படாமல் அடம்பிடித்தது.

முகுந்தனின் முகத்தில் லேசாய் வியர்வையும் ஒரு சின்ன பயமும் அரும்பியது.

''மறுபடியும் போலீஸ் வந்து சாந்தாகிட்ட ஏதாவது பிரச்சனை பண்ணி ஸ்டேஷனுக்கு கூட்டிப்போயிருப்பாங்களோ?''

''வீட்டுக்குப் போய்ப் பார்த்துடலாம். கிளம்பு.''

மூன்றுபேரும் ஹோட்டலினின்றும் வெளிப்பட்டு காரில் கிளம்பினார்கள்.

★ ★ ★

சென்னையின் நெரிசலான போக்குவரத்தில் முப்பது நிமிஷ சிரமப் பயணம்.

முகுந்தனின் வீடு வந்தது.

வேகவேகமாய் இறங்கி உள்ளே போனார்கள். வாசல் கதவு வெறுமனே சாத்தியிருக்க கை வைத்ததுமே அது திறந்து கொண்டது.

ஹாலில் யாருமில்லை.

நித்தியன் ஹாலின் மையத்தில் நின்று கொண்டு குரல் கொடுத்தான்.

''சாந்தா...''

''...''



பதிலில்லை.

முகுந்தன் ஒவ்வொரு அறையாய் எட்டிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

சாந்தாவைக் காணோம்.

மூன்று பேரும் வீட்டை நான்கு திசையிலும் அலசிப் பார்த்துவிட்டு இருண்ட முகங்களோடு ஹாலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

நித்தியன் முகுந்தனைக் கவலையாய் ஏறிட்டான். ''சாந்தா ஒருவேளை தான் தங்கியிருந்த ஹாஸ்டலுக்குப் போயிருப்பாளோ?''

''ஹாஸ்டலுக்கு எதுக்காகப் போகணும்?''

''ஏதாவது காரணம் இருக்கலாம்.''

''சரி, போன் பண்ணிப்பாரு.''

நித்தியன் வியர்த்த முகமாய் டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண் தட்டிவிட்டு மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டதும் கேட்டான்.

''வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்?''

''....''

''மிஸ் சாந்தா ப்ளீஸ்... ரூம் நம்பர் ஃபார்ட்டி ட்ரீ''

''....''

''அப்படியா... சரி'' நித்தியன் ரிசீவரை வைக்க, முகுந்தன் கவலைக் குரலில் கேட்டான்...

''என்ன ரிப்ளை?''

''காலையில் பத்து மணி சுமாருக்கு வெளியே போன சாந்தா இன்னமும் ஹாஸ்டலுக்குத் திரும்பலையாம்.''

''நித்தியன்! சாந்தா இந்த வீட்டை விட்டு ஹாஸ்டலுக்குப் போகக் காரணமே இல்லை.''

''அப்படீன்னா வேற எங்கே போயிருக்க முடியும்? இப்படி வீட்டைத் திறந்து போட்டுட்டு போற அளவுக்கு பொறுப்பில்லாதவளும் கிடையாது''

சொல்லிக் கொண்டே திரும்பிய நித்தியனின் பார்வை டீபாய் பக்கம் போனதும் திடுக்கிட்டது.

டீப்பாய்க்குக் கீழே

மாப்பிள் தரையில் சிவப்பாய் சில தீற்றல்கள்.

''முகுந்தன்! அங்கே பாரு.''

பார்த்தான்.

''என்ன இது?''

''ரத்தக்கறை மாதிரி தெரியுது.''

''ரத்தக்கறையேதான்!'' நித்தியன் குனிந்து இடது கை ஆள்காட்டி விரலால் தொட்டுப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

விசாலியும் குனிந்து பார்த்தாள்.

''ப்ளட் ஸ்டெயின். இன்னும் சரியா ஃப்ரீஸ் கூட ஆகலை... பத்து பதினைஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடிதான் ரத்தம் இங்கே பட்டிருக்கணும்.''

நித்தியன் பதட்டப்பட்டுக் கத்தினான்.

''முகுந்தன்! சாந்தா வீட்ல தனியா இருந்தப்ப அவளுக்கு ஏதோ ஆபத்து உண்டாகியிருக்கு. அந்த ஆபத்து என்னோட அப்பா மூலமாகக்கூட ஏற்பட்டிருக்கலாம். வா... போய் கேட்போம்.''

''எனக்கும் அதே சந்தேகம்தான்! கிளம்பு. இனிமே விஷயத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் இல்லை. வா நேரிடையாவே போய்க் கேட்டுடலாம்.''

விசாலி குறுக்கிட்டாள்.

''நீங்க ரெண்டு பேர் போய் கேட்கிறதைவிட நானே போய்க் கேட்டாத்தான் உண்மை வெளியே வரும். நான் முதல்ல அவர்கிட்ட போறேன். பின்னாடி நீங்க வாங்க.''

முகுந்தன் அதை ஆமோதித்தான்.

''நித்தியன்! விசாலி சொல்றதுதான் சரின்னு என் மனசுக்குப்படுது. விசாலி மொதல்ல போகட்டும். கொஞ்ச நேரம் கழிச்சு நாம போவோம்.''



நித்தியன் ஒரு இயந்திரம் மாதிரி தலையாட்டினான்.

* * *

சிகரெட் பைப்பில் புகையிலையை அடைத்துக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி போர்டிக்கோவில் வந்து நின்ற காரினின்றும் இறங்கிய விசாலியை பார்த்து மலர்ந்தார்.

''வாம்மா...''

விசாலி வரவழைத்துக் கொண்ட ஒரு சிறிய புன்னகையோடு அவருக்கு முன்பாய் போய் உட்கார்ந்தாள்.

ருத்ரமூர்த்தி, கையிலிருந்த சிகரெட் பைப்பை டீபாயின் மேல் வைத்துவிட்டு வியப்பாய் கேட்டார்.

''என்னம்மா... நீ மட்டும் வந்திருக்கே? அப்பா வரலையா?''

''இல்ல அங்கிள்... நான் மட்டும்தான் வந்தேன்.''

''நித்தியனைப் பார்க்கவா...?'' குரலை இறக்கி ஒரு குறும்புச் சிரிப்போடு கேட்டுவிட்டு கண்ணைச் சிமிட்டினார்.

''நான் இங்கே வந்தது உங்களைப் பார்க்கத்தான் அங்கிள்.''

''ஈஸிட்! என்னைப் பார்க்கவா? சொல்லுமா. என்ன விஷயம்?''

''அங்கிள்! நான் இப்போ கேட்கப்போகிற கேள்வி உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கலாம். பட் எனக்கு வேண்டியது உண்மையான பதில்.''

ருத்ரமூர்த்தியின் நெற்றியில் கேள்விக்குறி ஒன்று முளைத்தது. ''என்னம்மா பீடிகை எல்லாம் பலமாயிருக்கு. நீ என்ன கேட்க நினைக்கறியோ அதை தாராளமா கேட்கலாம்.''

விசாலி பட்டென்ற குரலில் கேட்டாள்.

''சாந்தா எங்கே அங்கிள்?''

''சாந்தா?''

''ஆமா.''

''எந்த சாந்தா?''

''உங்க சன் நித்தியன் காதலிக்கிற சாந்தாவைத்தான் கேட்கிறேன்.''

ருத்ரமூர்த்திக்கு விசாலி அப்படிப் பேசியது அதிர்ச்சியாக இருந்தாலும் அதை முகத்தில் கொஞ்சமும் காட்டிக் கொள்ளாமல் கேட்டார்.

''நீ என்னம்மா சொல்றே?''

விசாலி புன்னகைத்தாள். ''அங்கிள்! இந்த அப்பாவித்தனமான முகபாவம் எல்லாம் என்கிட்டே வேண்டாம். எனக்கு எல்லா விஷயமும் தெரியும். நான் உங்க வீட்டுக்கு மருமகளா வரணுங்கற ஒரே ஒரு காரணத்துக்காக உங்க சன்னோட காதலை அழிக்க நினைச்சீங்க... உண்டா... இல்லையா?''

ருத்ரமூர்த்தி தொடர்ந்து முகத்தில் அதே அப்பாவித்தனத்தைக் காட்டினார்.

''அம்மா விசாலி...! உனக்கு யாரோ எதையோ தப்பா சொல்லிவிட்டிருக்காங்க... என்னோட சன் நித்தியன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறதா நீ இப்ப சொல்ற விஷயம் எனக்குப் புதுசாயிருக்கு. என் பையன் அப்படிப்பட்டவன் கிடையாது. அவன் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறான்.''

''இல்ல... அங்கிள்... உங்க சன் நித்தியன் எல்லா விஷயத்தையும் என்கிட்டே சொல்லிட்டார். நீங்க அந்தப் பெண் சாந்தாவை டெலிபோன்ல மிரட்டினது கூட எனக்குத் தெரியும். இனியும் நீங்க எதையும் மறைக்க முயற்சி பண்றது சரியில்லை.''

''நித்தியன் உன்கிட்ட சொன்னானா?''

''ஆமா...''

ருத்ரமூர்த்தி ஒன்றும் பேசாமல் சில விநாடிகளுக்கு மௌனமாய் இருக்க, விசாலி மறுபடியும் கேட்டாள்.

''இப்பவாவது சாந்தா எங்கேன்னு சொல்றீங்களா?''



எங்கோ பார்த்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார் ருத்ரமூர்த்தி.

''எனக்குத் தெரியாது... அவ ஒரு வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல தங்கியிருக்கிறதா கேள்விப்பட்டேன். அங்கே போய் விசாரிக்க வேண்டியதுதானே!''

''சாந்தா அங்கே இல்லை.''

''அங்கே இல்லேன்னா வேற எங்கேயாவது இருப்பா. என்னை எதுக்காக வந்து கேக்கறே?''

''அப்பா!''

தனக்கு பின்பக்கம் குரல் கேட்க ருத்ரமூர்த்தி திரும்பினார். நித்தியன் நின்றிருந்தான். அவனுக்குப் பின்னால் முகுந்தன்.

ருத்ரமூர்த்தி நித்தியனையே வைத்த கண் வாங்காமல் பார்க்க - அவர் பக்கத்தில் வந்து நின்றான். மூச்சுக்காற்று முகத்தில் மோத கேட்டான்.

''சாந்தா உயிரோடு இருக்காளா? இல்லே கொன்னுட்டீங்களாப்பா...?''




கேள்வி கேட்ட நித்தியனையே இமைக்காமல் பார்த்தார் ருத்ரமூர்த்தி.

''என்னப்பா பார்க்கறீங்க. பதில் சொல்லுங்க... சாந்தா இப்போ உயிரோடு இருக்காளா இல்லையா?''

''என்னைக் கேட்டா?''

''உங்களைக் கேட்காமே வேற யாரைக் கேக்கறது? சாந்தாவுக்கு போன் பண்ணி மிரட்டினது நீங்கதானே?''

கையமர்த்தினார் ருத்ரமூர்த்தி.

''இதோ பார்ரா... நான் உன்னோட காதலுக்கு

குறுக்கே நின்னது வாஸ்தவம்தான். சாந்தாவை போன்ல மிரட்டினதும் நானதான். இன்னும் சொல்லப் போனா போலீசை விட்டு அவளுக்குத் தொந்தரவு கொடுத்ததும் நான்தான். ஆனா நீ நினைக்கிற மாதிரி ஒரு பொண்ணைக் கொலை செய்யற அளவுக்கு நான் மோசமானவன் கிடையாது.''

''நீங்க இப்படி சிம்பிளா சொல்லி தப்பிச்சுக்க முடியாதப்பா... சாந்தா எங்கேங்கிற கேள்விக்கு நீங்க பதில் சொல்லியே ஆகணும். இல்லேன்னா...''

''இல்லேன்னா...?''

''நீங்க எனக்கு அப்பா என்கிற உறவையெல்லாம் தள்ளி வெச்சிட்டு போலீஸ் ஸ்டேஷன் படியேறி உங்க மேல புகார் கொடுக்க வேண்டியிருக்கும்.''

''டேய் நித்தியா... நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்லையா...?''

''இல்லை... சாந்தா எங்கே இருக்கான்னு உங்களுக்கு நிச்சயமா தெரியும். உண்மையை இங்கேயே சொல்றீங்களா.. இல்லை போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் சொல்றீங்களா?''

முகம் சிவந்தார் ருத்ரமூர்த்தி. ''நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். அப்புறம் உன்னோட இஷ்டம்.''

நித்தியன் டெலிபோனை நோக்கி வேகமாய் போக விசாலி குறுக்கிட்டாள்.

''நித்தியன்! அவசரப்படாதீங்க... பொறுங்க.. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போறது ரொம்பவும் சுலபம். அதுக்கப்புறம் போலீஸாலே நமக்கு வர்ற டார்ச்சரை தாங்கிக்க முடியாது.''

''அதுக்காக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகாமே இருக்க முடியுமா? முகுந்தன் வீட்ல இருக்கிற ரத்தக்கறைகளைப் பார்க்கிறப்போ அவ உயிர்க்கே ஏதாவது ஆபத்து வந்திருக்குமோன்னு எனக்குப் படுது. இந்த விஷயத்துல போலீஸ் உடனடியாக



இறங்கியாகணும். அவங்க பிரச்சனையைக் கிளற ஆரம்பிச்சாங்கன்னா எல்லா உண்மையும் வெளியே வந்துடும்.''

ருத்ரமூர்த்தி இரண்டு கைகளையும் அலட்சியமாக விரித்தபடி சத்தம் போட்டார்.

''தாராளமா போலீஸுக்குப் போ... புகார் கொடு. அவங்க வந்து என்னை விசாரிக்கட்டும். அவங்க விசாரிக்கும்போது என்ன பதில் சொல்லணுமோ அதைச் சொல்லிக்கறேன். எனக்கென்ன பயம்?''

நித்தியன் விசாலியை ஏறிட்டான்.

''பார்த்தியா விசாலி... சாந்தா காணமா போயிருக்கிற விஷயத்துல நான் எப்படி துடிச்சிட்டிருக்கேன். இவர் எவ்வளவு அலட்சியமா பேசறார்னு பார்த்தியா?''

''ஒருவேளை உண்மையிலேயே சாந்தா காணாம போயிருக்கிற விஷயத்துக்கும் உங்களோட அப்பாவுக்கும் சம்பந்தம் இல்லாமே இருக்கலாம் இல்லையா...?''

''அது போலீஸ் வந்தா தெரிஞ்சுடும்...'' பெரிய குரலில் கத்திய நித்யன் முகுந்தனிடம் திரும்பினான்.

''வா... போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் கம்ப்ளைய்ண்ட் கொடுத்துட்டு வரலாம்... போலீஸ் இந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்சாத்தான் உண்மை வெளியே வரும்.''

நித்தியன் சொல்லிவிட்டு நகர முகுந்தன் பின் தொடர்ந்தான். அடுத்த பத்து விநாடிகளில் கார் வேகமாக புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது.

விசாலி ருத்ரமூர்த்தியை ஏறிட்டாள்.

''அங்கிள்! போலீஸ் இந்த வீட்டுக்குள்ளே வர்றது சரின்னு நீங்க நினைக்கறீங்களா?''

''இதோ பாரம்மா. என்னோட மடியில கனம் இல்லை. உனக்கும் நித்தியனுக்கும் கல்யாணத்தைப்

பண்ணி வைக்க ஆசைப்பட்டேன். அதுக்கு இடைஞ்சலாயிருந்தாங்கிற ஒரே ஒரு காரணத்துக் காகத்தான் அந்த சாந்தாவை டெலிபோன்ல மிரட்டினேன். எனக்குத் தெரிஞ்ச போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் மூலமாகவும் மிரட்டினேன். இந்த ரெண்டு தப்பைத் தவிர வேற எதுவும் நான் பண்ணலை. சாந்தா காணாமே போனதுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. போலீஸ் வரட்டும் சொல்றேன்."

விசாலி பெருமூச்சு விட்டாள்.

"அங்கிள்"

"என்னம்மா?"

"உங்க சன் நித்தியனுக்கு சாந்தான்னு ஒரு காதலி இருக்கான்னு தெரிஞ்சும் எனக்கும் அவர்க்கும் கல்யாணத்தைப் பண்ணி வைக்க எதுக்காக முயற்சி செஞ்சீங்க...? கட்டாயமா ஒரு கல்யாணத்தை பண்ணி வைச்சா அதுல சந்தோஷம் இருக்குமா? காதல்ங்கிறது ஒரு கெட்ட வார்த்தையோ... தப்பான காரியமோ கிடையாது அங்கிள். உங்க சன் நித்தியனோட காதலுக்கு நீங்க பச்சைக்கொடி காட்டியிருக்கலாம். அப்படி காட்டியிருந்தா இவ்வளவு பிரச்சனைகள் முளைவிட்டிருக்காது. போலீஸ் இந்த வீட்டு வாசற்படி ஏறுகிற ஒரு அவசாமும் ஏற்பட்டிருக்காது..."

"நீ சொல்றது வாஸ்தவந்தாம்மா... இந்த விஷயத்துல நான் கொஞ்சம் நிதானம் காட்டி யிருக்கணும். நீ இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்கிற ஆசை காரணமா ஒரு ரௌடி மாதிரி பிகேவ் பண்ணினது தப்புதான். போலீஸ் வந்து என்கொயர் பண்ணட்டும். நான் உள்ளதை சொல்லிடறேன். பட் அந்தப் பொண்ணு சாந்தா காணாமே போனதுக்குக் காரணம் நான் கிடையாது."

ருத்ரமூர்த்தி ஆயாசமாக சொல்லிக் கொண்டிருக் கும்போதே பக்கத்தில் இருந்த டெலிபோன் துடித்து கூப்பிட்டது. விசாலிதான் ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.



"ஹலோ"

மறுமுனையில் விஜயராகவன் குரல்.

"என்னம்மா... மாப்பிள்ளை வீட்ல போய் அப்படியா இருந்துக்கறது? நல்ல பொண்ணும்மா நீ... போய் பார்த்தோமா உடனே புறப்பட்டு வந்தோமான்னு இருக்கணும். அதை விட்டுட்டு அங்கேயே டெண்ட் போட்டுட்டா என்னம்மா அர்த்தம்?"

விசாலியின் குரல் லேசாய் உடைபட்டது.

"அ...அப்பா"

"என்னம்மா போன் ஒரு மாதிரி இருக்கு?"

"அப்பா நானே உங்களுக்கு போன் பண்ண லாம்னு இருந்தேன். உடனே புறப்பட்டு நீங்க அங்கிள் வீட்டுக்கு வர்றீங்களா?"

"என்னம்மா விஷயம்?"

"போன்ல அதையெல்லாம் சொல்லிட்டிருக்க முடியாதப்பா. நீங்க நேர்ல புறப்பட்டு வாங்க."

"என்னம்மா... ஏதாவது பிரச்னையா?"

"பிரச்னைதான்... இல்லேன்னா உங்களை புறப்பட்டு வரச்சொல்வேனா? சீக்கிரமா புறப்பட்டு வாங்கப்பா."

விசாலி ரிசீவரை வைத்துவிட்டு விழியோரம் லேசாய் எட்டிப் பார்த்த கண்ணீரை உள்வாங்கிக் கொண்டு ருத்ரமூர்த்திக்கு எதிரில் இருந்த சோபாவுக்கு தளர்வாய் சாய்ந்து கொண்டாள்.

இனி தனக்கும் நித்தியனுக்கும் திருமணம் என்ற ஒன்று நடக்க வாய்ப்பில்லை என்ற நினைப்பில் இதயம் சற்று பலமாகவே வலித்தது.

★ ★ ★

விஜயராகவன் ரிசீவரை வைத்துவிட்டு ஒரு பெருமூச்சோடு எழ அவருடைய மனைவி புவனேசுவரி டீ.வி.யின் சின்னத்திரையிலிருந்து திரும்பி கணவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்றா உங்க பொண்ணு?''

''புவனேசுவரி! நான் உடனே கிளம்பி சம்பந்தி வீட்டுக்கு போகணும்.''

''சரியாப்போச்சு... பொண்ணுதான் மாப்பிள்ளைப் பைத்தியம் பிடிச்சு அலையறாள்னா... நீங்களுமா?''

''அதில்லை புவனேசுவரி.''

''பின்னே?''

''சம்பந்தி வீட்ல ஏதோ பிரச்னையாம். விசாலி என்னை உடனே புறப்பட்டு வரச்சொல்றா?''

''என்ன பிரச்னை?'' புவனேசுவரி வெகுவாய் முகம் மாறிக்கொண்டே எழுந்தாள்.

''தெரியலை... நான் போய்ட்டு வந்து சொல்றேன்.''

''நானும் வர்றேன்ங்க.''

''வேண்டாம். புடவைக் கடைக்காரங்களும் நகைக்கடைக்காரங்களும் அரைமணி நேரத்துல வர்றதா சொல்லியிருக்காங்க. நீ இருந்து அவங்களை பார்த்துக்க, அவங்க வர்றப்ப நாம ரெண்டு பேருமே வீட்ல இல்லாம இருந்தா நல்லாயிருக்காது.''




போர்ட்டிக்கோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு விசாலியும் ருத்ரமூர்த்தியும் எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரோடு பேசியபடி நித்தியனும் முகுந்தனும் காரினின்றும் இறங்கி, உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

ருத்ரமூர்த்தி உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருக்க,



அந்த இளவயது இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்தபடி பக்கத்தில் வந்து நின்றான்.

''மிஸ்டர் ருத்ரமூர்த்தி...''

''சொல்லுங்க...''

''உங்க சன் நித்தியன் உங்க மேல் ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கார்...''

''என்ன கம்ப்ளைண்ட்?''

''அவர் காதலிச்ச பொண்ணு சாந்தாவுக்கு உங்களால ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கும்னு சொல்றார். இந்தக் குற்றச்சாட்டுக்கு நீங்க என்ன பதில் சொல்றீங்க?''

''இன்ஸ்பெக்டர்! அந்த குற்றச்சாட்டில் துளிகூட உண்மை கிடையாது. என் மகனோட காதலுக்கு குறுக்கே நின்னது வாஸ்தவம்தான். அந்தப் பொண்ணு சாந்தாவுக்கு டெலிபோன் பண்ணி மிரட்டியதும் வாஸ்தவம்தான். ஆனா அந்தப் பொண்ணு இப்போ காணாமே போனதுக்குக் காரணம் நானில்லை.''

''பின்னே யாரு?''

''எனக்குத் தெரியாது. ஒரு பெண்ணைக் கடத்திட்டுப் போற அளவுக்கு நான் கொடுமைக்காரன் கிடையாது. எம் பையனுக்கு நல்ல இடத்துல கல்யாணம் முடியணுங்கறதுக்காக நான் கொஞ்சம் மைல்டா ஸ்டெப்ஸ் எடுத்தது உண்மை.''

நித்தியன் ஆவேசமாய் குறுக்கிட்டான்.

''இன்ஸ்பெக்டர்! நிச்சயமா இவர் மூலமாத்தான் சாந்தாவுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கணும். நீங்க இதுல கொஞ்சம் இன்ட்ரஸ்ட் எடுத்து டீப்பா என்கொயரி பண்ணினா உண்மைகள் வெளியே வரலாம். அப்பா அப்பாவித்தனமா முகத்தை வெச்சிக்கிட்டு பேசறதைப் பார்த்து ஏமாந்துடாதீங்க.''

இன்ஸ்பெக்டர் இப்போது குரலை உயர்த்திக் கொண்டார்.

''மிஸ்டர் ருத்ரமூர்த்தி! உங்க சன் இவ்வளவு ஸ்ட்ராங்கா ஒரு குற்றசாட்டை சொல்லும்போது அதுல உண்மை இல்லாமே இருக்காது. அந்தப் பொண்ணு சாந்தா விஷயத்துல ஏதாவது எமோஷனலா பண்ணியிருந்தா அதை இப்பவே சொல்லிடுங்க... சட்ட ரீதியா உங்களுக்கு எந்தவிதமான பிரச்சனையும் வராம நான் பார்த்துக்கிறேன்.''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த விசாலி இப்போது குறுக்கிட்டாள்.

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர் அங்கிளாலே சாந்தாவுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. இந்த ஒரு கோணத்திலேயே கேஸை நீங்க பார்த்துக் கிட்டிருந்தா அது உண்மையான குற்றவாளிக்கு வசதியா போயிடும். ஸோ நீங்க டிஃபரண்ட் ஆங்கிள்ல யோசிச்சுப் பார்க்கணும்.''

இன்ஸ்பெக்டர் அவளை ஏறிட்டார்.

''நீங்க?''

''என் பேர் விசாலி. நித்தியனுக்கும் எனக்கும் தான் நிச்சயம் பண்ணியிருந்தாங்க. எனக்கு இந்த 'நித்தியன் சாந்தா' காதல் விவகாரம் தெரிஞ்சிருந்தா, இவ்வளவு பிரச்னைகள் வந்திருக்காது. உலகத்திலே மிகக் கொடுமையான காரியம் ரெண்டு காதலர்களை சேர விடாம பிரிக்கிறதுதான்.''

''மிஸ் விசாலி! உங்களுக்கு இந்த காதல் விவகாரம் எப்போ தெரியும்?''

''ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான்.'

''சாந்தா காணாம போனது எந்த இடத்துல?'

''மிஸ்டர் முகுந்தன் வீட்ல...'' விசாலி சொல்லி முகுந்தனைக் கைகாட்ட இன்ஸ்பெக்டரின் பார்வை இப்போது முகுந்தன் மேல் நிலைத்தது.

''உங்க வீட்டுக்கு சாந்தா எதுக்கு வந்தா?''

''ராஜகணேஷ்னு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏதோ ஒரு விபச்சார கேஸ் விஷயமா சாந்தாவை வந்து



மிரட்டியிருக்கார். சாந்தா பயந்துபோய் என் வீட்டுக்கு வந்தா. நான் நித்தியனுக்கு தகவல் கொடுத்து வரச் சொன்னேன். நித்தியனும் வந்தான். சாந்தாவை வீட்ல தனியா விட்டுட்டு ரெண்டு பேருமா அந்த இன்ஸ்பெக்டரைப் போய் பார்த்து பேசிட்டு வந்தோம். சாந்தா வீட்ல இல்லை. தரையில ரத்தக்கறை இருந்தது. உடனடியா நித்தியனுக்கு அவனோட அப்பா மேல சந்தேகம் வந்தது. வந்து அவர்கிட்டேயே நேரிடையா கேட்டோம். அவர் சரியா பதில் சொல்லாததினால உங்ககிட்ட வந்து கம்ப்ளைண்ட் பண்ணினோம்.''

''நீங்க ஸ்டேஷன்ல இவ்வளவு டீடெய்ல்டா சொல்லவேயில்லையே... வாங்க மொதல்ல உங்க வீட்டுக்குப் போவோம். அந்த ரத்தக்கறைகள் இன்னும் தரையிலேயே இருக்கா இல்லை சுத்தம் பண்ணிட்டீங்களா?''

''அப்படியேதான் இருக்கு சார்''

''வாங்க அதைக் கவனிப்போம்.'' நித்தியனையும் முகுந்தனையும் அழைத்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் புறப்பட்டு போய்விட விசாலியும் ருத்ரமூர்த்தியும் கவலைப் பார்வைகளால் ஒருத்தரையொருத்தர் நினைத்துக் கொண்டார்கள்.

''அங்கிள்! நிலைமை இவ்வளவு! மோசமா போனதுக்கு காரணம் நீங்கதான். நித்தியன் விரும்பியது அந்த சாந்தாவை. அவளுக்கு கட்டி வெச்சிருந்தா இவ்வளவு பிரச்சனைகள் முளைச்சிருக்குமா?''

''தப்புதாம்மா...! நீ இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்ங்கிற ஆசை என்னோட கண்ணை மறைச்சிருச்சு. அவ ஒரு அநாதைப் பொண்ணு தானே... மிரட்டினா பயந்துக்குவான்னு நினைச்சேன். ஆனா பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துருச்சு.... இப்படியெல்லாம் ஒரு சூழ்நிலை உண்டாகும்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை.''

''அங்கிள்.''

"என்னம்மா?"

"என்கிட்டேயாவது உண்மையைச் சொல்லுங்க."

"உண்மையா? என்ன உண்மை?"

"சாந்தா இப்போது உயிரோடு இருக்காளா? இல்லையா?"

"என்னம்மா விசாலி! நீ கூட என்னைச் சந்தேகப்படறே... ஒரு பெண்ணைக் கொலை செய்யற அளவுக்கு நான் கல் நெஞ்சுக்காரன் கிடையாது..."

விசாலி, ஏதோ பேச வாயைத் திறப்பதற்குள் போர்ட்டிகோவில் விஜயராகவனின் கார் வந்து நின்றது.

"அப்பா வந்துட்டார்."

ருத்ரமூர்த்தி எழுந்து போய் கலங்கிய விழிகளோடு வரவேற்றார். "வாங்க சம்பந்தி" என்று சொல்ல வந்தவர் "வாங்க" என்கிற வார்த்தையோடு நிறுத்திக் கொண்டார்.

விஜயராகவன் முகத்தைத் திகைத்த மாதிரி வைத்துக் கொண்டு கேட்டார்.

"என்ன பிரச்சை?"

விசாலி குரல் கொடுத்தாள். "அப்பா! நீங்க மொதல்ல வந்து இப்படி உட்காருங்க. கடந்த ரெண்டு மணி நேரத்துல இங்கே நடக்கக்கூடாத சில சம்பவங்கள் எல்லாம் நடந்துருச்சு."

"நீ என்னம்மா சொல்றே?" முகத்தை அப்பாவித்தனமாக வைத்துக் ெண்டு மகளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் விஜயராகவன்.

விசாலி சில நிமிஷங்கள் எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் சொல்லி முடிக்க, அவர் செயற்கையான அதிர்ச்சியோடு ருத்ரமூர்த்தியை ஏறிட்டார்.

"உங்க பையனுக்கு காதல் விவகாரம் இருந்தா அதை முடிச்சு வைக்க வேண்டியதுதானே?



எம்பொண்ணு வாழ்க்கையோட ஏன் விளையாடணும்."

"தப்புதான்! நான் செஞ்சது தப்புதான்."

"வாய்ல சொல்லிட்டா தீர்ந்ததா? இன்னிக்கு விவகாரம் வீட்டுப் படியைத் தாண்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு போயாச்சு. என்னோட ஃபேமிலி ஸ்டேட்டஸுக்கு இது தேவையா?"

"அப்பா!"

"என்னம்மா?"

"அங்கிள் மேல எந்தத் தப்பும் இல்லை. நித்தியன் என்கிட்டேயே நேரிடையா விஷயத்தை சொல்லியிருந்தா பிரச்சனை ஓவர். இவ்வளவு தூரம் வந்திருக்காது."

"நீ சும்மாயிரும்மா... நித்தியனை கல்யாணம் பண்ணிக்க நீ எவ்வளவு ஆசைப்பட்டேன்னு எனக்குத்தான் தெரியும். ஜெயிலுக்குப் போயிருக்காங்கிற காரணத்தையும் தள்ளி வெச்சுட்டு சம்பந்தம் பேச ஒத்துக்கிட்டதே உனக்காகத்தான்... இன்னிக்கு அப்பாவும் மகனும் ரொம்ப சுலபமா ப்ளேட்டை மாத்திப்போட்டு பிரச்சனை பண்றாங்க. நான் இவங்களை சும்மா விடப் போறதில்லை."

"அப்பா."

விஜயராகவன் விசாலி குறுக்கிட்டதையும் பொருட்படுத்தாமல் ருத்ரமூர்த்தியிடம் இரைந்தார்.

"ஹோட்டல்ல பல பேர் அறிய கல்யாணம் நிச்சயம் பண்ணியாச்சு. இன்விடேஷனையும் ப்ரிண்ட் பண்ணியாச்சு. இந்த நிலைமையில் கல்யாணத்தை நிறுத்தினா நான் ஒத்துக்க மாட்டேன். யார் உயிரோட இருந்தாலும் சரி.... காணாமே போனாலும் சரி... கல்யாணம் குறிப்பிட்ட தேதியில் நடக்கணும்... நடந்தாகணும்."

"அப்பா! கொஞ்சம் பொறுமையா இருங்க. உங்க கோபத்தைக் காட்டுற நேரம் இது இல்லை."

''நீ சும்மா இரும்மா... கோபத்தைக் காட்டினாத்தான் காரியம் நடக்கும். பேசி வைச்ச தேதியில் உனக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கும். அது யார் தடுத்தாலும் நிக்கப் போறதில்லை.''

## 19

விஜயராகவன் கோபத்தில் இரைந்து கொண்டிருக்க விசாலி இறுக்கமான முகத்தோடு அவருக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

''அப்பா...''

அவர் நிமிர்ந்தார்.

''கொஞ்ச நேரம் பேசாம இருக்கீங்களா?'' கையமர்த்தியவள் தொடர்ந்தாள்.

''நீங்க அங்கிள் மேல கோபப்படறதுல அர்த்தமே இல்லேப்பா... இப்போதைய பிரச்சனை என்னோட கல்யாணம் இல்லை. சாந்தா எங்கே... சாந்தாவுக்கு யாரால பிரச்சனை ஏற்பட்டிருக்குன்னு யோசிக்க வேண்டியது முக்கியம்.''

''அதைப்பத்தி எனக்கு எந்த அக்கறையும் கிடையாது. இது எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா?''

''அப்பா ப்ளீஸ்... அங்கிள் ஏற்கெனவே டென்ஷன்ல இருககார். நீங்க வேற ஏதேதோ பேசி டார்ச்சர் பண்ணாதீங்க. உங்களை இங்கே வரவழைச்சது அங்கிளை திட்டி பிரச்சனையை பெரிதுபடுத்தறதுக்காக அல்ல. அவருக்கு ஏதாவது ஒரு வ. ¬கயில் ஆறுதல் சொல்லத்தான். இனிமே எனக்கும நித்தியனுக்கும் கல்யாணம்ங்கிற பேச்சுக்கே ¡ ¹டம் கிடையாது.''

விஜயர ¬வன் வியப்பாய் அவளைப் பார்த்தார்.



''அம்மா விசாலி! நீயா இப்படி பேசிட்டிருக்கே... நித்தியனைக் கல்யாணம் பண்ணிக்க நீ எவ்வளவு ஆர்வமாயிருந்தேன்னு எனக்குத்தானே தெரியும்! தூங்கற நேரத்தைத் தவிர மத்த எல்லா நேரமும் நீ நித்தியனைப் பத்தித்தானே பேசிட்டிருப்பே... நான் கூட ஒரு நாள் விளையாட்டுக்கு நித்தியன் உன்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிட்டா என்னம்மா பண்ணுவேன்னு கேட்டதுக்கு நீ என்ன பதில் சொன்ன தெரியுமா?''

''என்ன சொன்னேன்?''

''அவர் என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லமாட்டார். அப்படி ஒரு வேளை அவர் பதில் சொல்லிட்டா ஹாலில் மாட்டியிருக்கிற என்னோட போட்டோவுக்கு தினசரி ஒரு ரோஜா மாலையைப் போட வேண்டியதுதான்'' - இந்த வார்த்தைகளை நீ சொல்லலை?''

விசாலி சிரித்தாள் மெல்ல... ''அய்யோ அப்பா! அதெல்லாம் ஒரு எமோஷனில் சொன்னது! இப்ப அதை நினைச்சுப் பார்த்தா செல்டிஷ்ஷா இருக்கு. என்னை விரும்பாத ஒருத்தரை நான் எப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பத்தை நடத்த முடியும்?''

''அம்மா! நீ இப்படி பேசறது எனக்கு ஆச்சரியமா இருக்கு. இப்ப பேசிட்டிருக்கிறது நீதானான்னு பிரமிப்பாவும் இருக்கு.''

''அப்பா! சாந்தாங்கிற பெண்ணை நித்தியன் காதலிக்கிறதா எந்த நிமிஷம் எனக்கு தெரிஞ்சதோ அதே நிமிஷம் என்னோட மனசு ஒரு எதார்த்தமான நிலைமைக்கு வந்திடுச்சு. இப்படி ஒரு கசப்பான முடிவுக்கு நான் கொஞ்சம் கூட வருத்தப்படலை. இப்போதைக்கு என்னோட வருத்தமெல்லாம் சாந்தா எங்கே? சாந்தாவுக்கு என்னாச்சுங்கிறதுதான்.''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் திக்பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்திருந்த ருத்ரமூர்த்தி மெல்ல எழுந்து விஜயராகவனிடம் வந்தார்.

"மிஸ்டர் விஜயராகவன். இந்தக் கல்யாண விவகாரத்துல என்னோட மகனே எனக்கு எதிரியா மாறுவான்னு நான் கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. சாந்தாங்கிற அந்தப் பொண்ணை நான் ஏதோ பண்ணிட்டதா போலீஸ்ல என் மேலயே கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கான். அந்தப் பெண்ணை டெலிபோன்ல நான் மிரட்டினது உண்மை. மிரட்டினா நித்தியனை விட்டு விலகி அவ போயிடுவான்னு நினைச்சேன்."

விஜயராகவன் அவருக்கு எந்த பதிலையும் சொல்லாமல் விசாலியைப் பார்த்தார்.

"புறப்படம்மா... இனிமே இந்த வீட்ல ஒரு நிமிஷம் கூட நாம நின்னு பேசிட்டிருக்கக் கூடாது. ம்.. கிளம்பு"

"அப்பா! அங்கிளுக்கு ஒரு பிரச்சனைன்னா அது நமக்கும் வந்த மாதிரிதான். போலீஸ் வேற இதுல தலையை நீட்டிட்டாங்க. நாம இருந்து பார்த்து பிரச்சனையை சால்வ் பண்ணிட்டு போறதுதான் சரி."

"விசாலி! உனக்கு ஆசை காட்டி மோசம் பண்ணின இவங்க முகத்தை நீ பார்க்கிறதே பாவம்மா... போய் கார்ல ஏறு."

"அப்பா! நான் என்ன சொல்றேன்னா..."

"நீ ஒண்ணையும் சொல்லிட்டிருக்காதே....! ம்... கிளம்பு" விஜயராகவன் ரௌத்ரமாய் முகம் சிவக்க கத்திவிட்டு போர்டிகோவில் நிறுத்தியிருந்த காரை நோக்கிப் போக விசாலி ருத்ரமூர்த்தியைப் பார்த்தாள்.

"அங்கிள்..."

"உங்கப்பாவோட கோபம் நியாயமானதுதாம்மா! அவருக்கு நான் நிறைய ஃபால்ஸ் ஹோப் கொடுத்துட்டேன். நீ இப்போ அவரோட கிளம்பிப் போம்மா... எனக்கு வந்திருக்கிற இந்த பிரச்சனையை நானே சால்வ் பண்ணிக்கிறேன்."

விஜயராகவன் போர்ட்டிக்கோவிலிருந்து கத்தினார்.



"விசாலி! நீ இன்னுமா வரலை?" சொல்லிவிட்டு கார் ஹாரனை நீளமாய் அடித்தார்.

"நீ போம்மா..." கண்களில் நீரோடு ருத்ரமூர்த்தி தலையசைக்க விசாலி கனத்த இருதயத்தோடு போர்ட்டிக்கோவில் நின்றிருந்த காரை நோக்கிப் போனாள்.

டிரைவிங் சீட்டை ஆக்ரமித்திருந்த விஜயராகவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்ததும் கார் கிளம்பியது. பங்களாவைக் கடந்து ரோட்டுக்கு வந்ததும் மகளிடம் திரும்பினார்.

"ஏம்மா! நித்தியனை இழந்ததுல உனக்குக் கொஞ்சம் கூட வருத்தமே இல்லையா?"

"இல்லை."

"நிஜமாத்தான் சொல்றயாம்மா?"

விசாலி புன்னகைத்தாள். "ஏதாவது ஒரு கோயில் வாசல்ல காரை நிறுத்துங்கப்பா. வேணும்னா சத்தியம் பண்றேன்."

"உனக்குள்ளே ஏற்பட்டிருக்கிற இந்த மனமாற்றத்தை என்னால ஜீரணம் பண்ணிக்க முடியலேம்மா. கடந்த ஒரு வருஷ காலமா உன்னோட பேச்சு மூச்சு எல்லாமே நித்தியனைப் பத்தியதாகத் தானே இருந்தது."

"அப்பா! நீங்க என்னோட உணர்ச்சிகளை மட்டுமே பார்க்கறீங்க... இந்த உலகத்துல இருக்கிற பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் எது தெரியுமாப்பா? காதலர்களைப் பிரிக்கிறதுதான்! நித்தியனும் சாந்தாவும் ஒருத்தரை யொருத்தர் காதலிக்கிறாங்க. அந்தக் காதலை நிறைவேத்தி வைக்க வேண்டியது நம்ம கடமையில்லையா?"

"சரி! அந்த சாந்தா இப்ப என்ன ஆனா?"

"தெரியலை... நித்தியன் அவரோட அப்பா மேல சந்தேகப்பட்டு போலீஸ்ல கம்ப்ளைண்டும் பண்ணிட்டார். எனக்கென்னமோ ருத்ரமூர்த்தி

அங்கிளாலே சாந்தாவுக்கு எந்த ஒரு ஆபத்தும் ஏற்பட்டிருக்காதுன்னு என்னோட மனசுக்குப்படுது."

விசாலி இப்படி சொன்னதும் இருதயத்துக்குள் ஒரு முள் தைத்த மாதிரி நிமிர்ந்தார் விஜயராகவன். அந்த வலியைக் காட்டிக் கொள்ளாமல் கேட்டார். "வேற யாரையாவது நீ சந்தேகப்படறியாம்மா?"

"யாரை சந்தேகப்படறதுன்னே தெரியலை! பட் போலீஸ் சும்மா பின்னிடுவாங்க."

விசாலி தீர்மானமான குரலில் சொல்ல விஜயராகவன் வியர்த்துக் கொண்டே காரை உச்சபட்ச வேகத்தில் விரட்டினார்.

அடிவயிற்றில் அமிலம் சுரந்தது அவஸ்தையாய். மனசுக்குள் எண்ணம் ஓடியது.

* * *

முகுந்தனின் வீடு.

இன்ஸ்பெக்டரின் தலைமையில் ஒரு ஃபாரன்சிக் குழு வீட்டின் எல்லா அறைகளிலும் நுழைந்து பௌடர் ஸ்பிரே செய்து ஃபிங்கர் ப்ரிண்ட்ஸை கலெக்ட் செய்து கொண்டிருந்தார்கள். நித்தியனும் முகுந்தனும் ஹால் ஓரமாய் நின்று இறுகிப் போன முகங்களோடு போலீஸாரின் ஃபார்மாலிட்டீஸ்களை மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு ஃபாரன்ஸிக் அதிகாரியோடு பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்து நித்தியனையும் முகுந்தனையும் கையசைத்துக் கூப்பிட்டார்.

இருவரும் போனார்கள்.

"என்ன ஸார்?"

நித்தியன் வினவ இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"சாந்தாவோட ப்ளட் குருப் என்ன?"

நித்தியன் யோசித்துவிட்டு தலையாட்டினான்.

"தெரியலையே சார்.'



"சாந்தா தங்கியிருந்த ஹாஸ்டல்லே கேட்டா தெரியுமா?"

"கேட்டுப் பார்க்கலாம் ஸார்."

"மிஸ்டர் நித்தியன்! இங்கே தரையில பட்டிருந்த ரத்தக் கறைகளை அம்மோனியாவில் டைலூட் செய்து பார்த்தபோது ரெண்டு வகை குருப் ரத்தம் கிடைச்சிருக்கு. ஒரு குரூப் 'பி' பாஸிட்டிவ். இன்னொரு க்ரூப் 'ஓ' பாஸிட்டிவ். அந்த இரண்டு க்ரூப்லே எது சாந்தாவோட க்ரூப்ன்னு தெரியணும். அது தெரிஞ்சாத்தான் குற்றவாளியை ட்ரேஸ் பண்ண முடியும். சாந்தா தங்கியிருந்த ஹாஸ்டலுக்கு போன் பண்ணி கேட்டுப் பாருங்களேன்.'

தலையசைத்த நித்தியன் டெலிபோனை நோக்கிப் போனான். ரிசீவரைத் தொட்டு எடுப்பதற்கு முன் அது அடித்தது. ரிசீவரை எடுத்து 'ஹலோ' என்று குரல் கொடுக்க மறுமுனையில் போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசினார்கள்.

"அது முகுந்தன் வீடா?"

"எஸ்..."

"இன்ஸ்பெக்டர் குமரன அங்கேதானே இருக்கிறார்?"

"ஆமாம்..."

"அவரோட பேச வேண்டும்...."

நித்தியன் இன்ஸ்பெக்டருக்கு குரல் கொடுத்து கூப்பிட்டு ரிசீவரை அவர் கையில் கொடுத்தான். அவர் வாங்கி "எஸ்.குமரன் ஹியர்."

"ஸார்! திஸ் ஈஸ் கண்ட்ரோல் ரூம்."

"சொல்லுங்கள்.'

"ஆவடி அருகே உள்ள ஒரு எருக்கிடங்குக்கு பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடைத்திருக்கிறது. காணாமல் போன சாந்தா என்கிற பெண்ணின் அடையாளங்களோடு அந்தப் பெண்ணின் உடல் ஒத்துப் போகிறது. உடனே ஸ்பாட்டுக்குப்போய் அது

சாந்தா தானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்...''

''இதோ புறப்பட்டுவிட்டேன்.''

ரிசீவரை சாத்திவிட்டு நித்தியனை ஏறிட்டார் இன்ஸ்பெக்டர் குமரன்.

## 20

இன்ஸ்பெக்டர் குமரனின் முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்த நித்தியன் கேட்டான்.

''ஸார்... எனிதிங் ராங்க்?''

''எஸ்! கண்ட்ரோல் ரூமிலிருந்து தகவல். ஆவடி அருகே உள்ள ஒரு எருக்கிடங்குக்குப் பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடைத்திருக்கிறது... அது சாந்தாவின் அடையாளங்களோடு ஒத்துப்போயிருக் கிறதாக...''

''நோ...'' என்று வீறிட்டான் நித்தியன்.

''இன்ஸ்பெக்டர்... நிச்சயம் அது என் சாந்தாவோடதாய் இருக்க முடியாது.''

''அதை உறுதி பண்ணிக்கத்தான் இப்ப கிளம்பிட்டிருக்கோம். நித்தியன்... பாடியை நீங்கதான் வந்து அடையாளம் காட்டணும். மிஸ்டர் முகுந்தன் ஃபாரன்ஸிக் ஆபீசர்களுக்காக இங்கேயே இருக்கட்டும்.''

இன்ஸ்பெக்டர் குமரன் வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட நித்தியன் கலவர முகத்தோடு அவரைத் தொடர்ந்தான். மனசுக்குள் ஓயாத மழை மாதிரி ஒரே வாக்கியம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'கடவுளே! அது சாந்தாவாய் இருக்கக் கூடாது. கடவுளே! அது சாந்தாவாய் இருக்கக் கூடாது.'



இன்ஸ்பெக்டர் குமாரனும் நித்தியனும் ஜீப்புக்குள் ஏறி உட்கார, அது புறப்பட்டது.

நித்தியனின் கண்களில் நீர் கட்டிக் கொண்டு கன்னங்களில் உருள தருணம் பார்த்தது.

இன்ஸ்பெக்டர் அவனுடைய தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''நித்தியன்! இப்போ நாம பார்க்கப் போகிற பெண்ணோட பாடி சாந்தாவின் அடையாளங்களோடு ஒத்துப் போறதா கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கிடைச்சிருக்கு. ஒருவேளை அது சாந்தாவா இருந்துட்டா நீங்க உங்க ஃபீலிங்க்ஸை கண்ட்ரோல் பண்ணிக்கிட்டு கொலையாளி யாருன்னு கண்டுபிடிக்க உதவணும்.''

''ஸ...ஸார்''

குரல் தழுதழுத்தான் நித்தியன்.

''சொல்லுங்க.''

''இப்ப நாம பார்க்கப் போறது சாந்தாவாய் இருக்காது. என்னோட சாந்தா செத்திருக்கமாட்டா.''

''உங்க சாந்தா உயிரோடு இருக்கணும். அதுதான் என்னோட ஆசையும் கூட! பட் நிலைமை வேறு விதமாயிருந்தா நீங்க போலீஸுக்கு முழு அளவில் ஒத்துழைப்புத் தரணும்.''

''எஸ்... ஸார்...'' கண்ணீரோடு தலையசைத்தான் நித்தியன்...

அரைமணி நேரப் பயணம்.

ஆவடி எல்லைக்குள் நுழைந்தது, ஜீப். இன்ஸ்பெக்டர் குமரன் டிரைவரின் தோளைத் தொட்டுச் சொன்னார்.

''எருக்கிடங்கு எங்கேன்னு அந்த பேக்கரியில் விசாரி''

டிரைவர் இறங்கிப்போய் விசாரித்துவிட்டு வந்து ஜீப்பை எடுத்தார்.

''எங்கே?''

"பைபாஸ் ரோட்டுக்குப் போற வழியில் கார்னர் கட்டிலேயே இருக்கு சார்."

"போ..."

ஜீப் போயிற்று. ஐந்து நிமிஷ ஜீப் ஓட்டத்தில் பைபாஸ் ரோட்டின் வளைவில் ஆஸ்பெஸ்ட்டாஸ் கூரைகளோடு பிரம்மாண்டமாய் பரவியிருந்த எருக்கிடங்கு கட்டிடம் நாசிக்குப் பிடிக்காத வாசனையோடு வந்தது.

டிரைவர் எருக்கிடங்கு கட்டிடத்துக்கு முன்பாய் இருந்த மரத்துக்குக் கீழே ஜீப்பை மௌனமாக்கினார்.

இன்ஸ்பெக்டர் குமரன் கீழே குதித்தார். எல்லா பக்கமும் நிசப்தம்.

ஆச்சரியப்பட்டார்.

"இங்கே ஒரு கொலை நடந்ததுக்கான அறிகுறியோ பரபரப்போ தெரியலையே?"

நித்தியன் ஜீப்பினின்றும் இறங்கிக் கொண்டே கேட்டான்.

"இந்த இடம்தானா... இல்லை வேற ஏதாவது இடமா? கண்ட்ரோல் ரூமிலிருந்து உங்களுக்குக் கிடைத்த அந்த மெஸேஜை கொஞ்சம் ரீகால் பண்ணிப் பாருங்க ஸார்."

குமரன் தன் தாடையைத் தடவிப் பார்வையை ஆகாயத்துக்கு கொண்டு போனார்.

"ஆவடி எருக்கிடங்குக்குப் பக்கத்துல ஒரு பெண்ணோட உடல் கிடைச்சிருக்குன்னுதான் கண்ட்ரோல் ரூம்ல சொன்னாங்க... அப்படியிருந்தா அந்த பீட்போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் வந்து ஃபார்மல் என்கொயரியை ஆரம்பிச்சிருப்பாரே?"

"எதுக்கும் கண்ட்ரோல் ரூமை மறுபடியும் காண்டாக்ட் பண்ணிப் பார்த்துருங்க சார்."

நித்தியன் சொல்ல இன்ஸ்பெக்டர் குமரன் ஜீப்பில் இருந்த வயர்லஸ்ஸை உசுப்பி கண்ட்ரோல் ரூமைக் கூப்பிட்டார்.



"கண்ட்ரோல் ரூம்."

"எஸ்."

"இன்ஸ்பெக்டர் குமரன் ஸ்பீக்கிங்."

"சொல்லுங்க சார்... எனி மெஸேஜ்?"

"அரை மணி நேரத்துக்கு முன்னால் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு தகவல் கொடுத்தீர்கள். ஆவடியில் உள்ள எருக்கிடங்குக்குப் பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடப்பதாகவும் அது காணாமல் போன சாந்தாவின் அடையாளங்களோடு உள்ளது என்றும் சொன்னீர்கள். நீங்கள் சொன்னபடி இங்கே வந்து பார்த்தால் அப்படியொரு சம்பவம் நடந்ததுக்கான அறிகுறியே இங்கு தென்படவில்லை. சரியான தகவல் என்ன என்பதை சொல்ல முடியுமா?"

கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசிய நபர் இப்போது பதட்டமானார்.

"ஸார் நீங்கள் என்ன சொல்றீங்க...? இங்கே இந்த கண்ட்ரோல் ரூமிலிருந்து அப்படியொரு தகவல் உங்களுக்கு கொடுக்கப்படவில்லையே!"

"என்னது? தகவல் கொடுக்கப்படவில்லையா?"

"ஆமாம் சார்! கடந்த இரண்டு மணி நேரமா கண்ட்ரோல் ரூமில் மெஸேஜ் டெல்லராக நான் தான் இருக்கிறேன். உங்களுக்கு அப்படியொரு தகவலை நான் தெரியப்படுத்தவேயில்லையே."

குமரன் லேசாய் கோபப்பட்டார்.

"மை குட்னஸ்! யாரோ விளையாடியிருக்கிறார்கள்."

"ஸார்! டெலிபோனில் பேசிய அந்தக் குரலை மறுபடியும் கேட்டால் உங்களால் அடையாளம் புரிந்து கொள்ள முடியுமா?"

"முடியும்."

"காணாமல் போன சாந்தாவுக்கு நெருக்கமான நபர்கள் யார் யார் என்பதை லிஸ்ட் எடுத்து அவர்களோடு பேசி பார்த்து குரலை இனம்

கண்டுகொள்ள முடிகிறதா என்று பாருங்கள் சார்... சந்தேகப்படுகிற நபரை மட்டும் க்ளோஸ் ஃபாலோ அப் செய்தால் உண்மை தெரிந்துவிடும்.''

''இனி அப்படித்தான் செய்ய வேண்டும்.''

சொன்ன குமரன் வயர்லஸ்ஸை அணைத்து விட்டு வியர்வை ஒழுகும் முகமாய் நின்றிருந்த நித்தியனை ஏறிட்டார்.

''நித்தியன்.''

''ஸார்.''

''சாந்தாவைக் கொண்டு போனவங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டையும் உங்களையும் அலைக் கழிக்க வைக்கிறதுக்காக கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசற மாதிரி பொய்யான தகவலைக் கொடுத் திருக்காங்க.''

''எதுக்காக ஸார் இப்படி ஒரு அலைக்கழிப்பு?''

''இந்த கேஸிலிருந்து போலீஸை டைவர்ட் பண்ணத்தான்! நித்தியன், எனக்கு ஒரு லிஸ்ட் வேணும். சாந்தா கூட ஃப்ரண்ட்லியா பழகுறவங்க யார் யாருங்கிற விபரம் வேணும்.''

''ஸார்! அந்த விபரமெல்லாம் எனக்குத் தெரியாது... அவ தங்கியிருந்த ஹாஸ்ட்டல்ல கேட்டா விபரம் தெரியலாம்.''

''கிளம்புங்க! ஹாஸ்ட்டலுக்கு.''

குமரன் ஜீப்பில் தாவினார்.




விஜயராகவன் யோசனையாய் மோவாயை வழுவிக் கொண்டிருக்கும்போதே டீபாயின் மேலிருந்து டெலிபோன் தன் தொண்டையைக் கனைத்து குரல் கொடுத்தது.



ரிசீவரை எடுத்து காதுக்கு பொருத்தினார்.

''ஹலோ''

மறுமுனையில் நலிந்த குரலைக் கேட்டதும் விஜயராகவனின் முகம் வெருவாய் மாறியது. அந்தக் குளிரான இரவு வேளையிலும் வியர்வை அரும்பி மினுமினுத்தது.

* * *

தூக்கம் வராமல் போர்ட்டிகோ வராந்தாவில் நடை போட்டுக் கொண்டிருந்த ருத்ரமூர்த்தி திறந்திருந்த காம்பவுண்ட் கேட் வழியே ஹெட்லைட்டை பளீரென்று உயிர்ப்பித்துக் கொண்டு போலீஸ் ஜீப் உள்ளே வருவதைப் பார்த்ததும் நடையை நிறுத்தினார்.

போலீஸ் ஜீப் போர்ட்டிகோவுக்கு வந்து மௌனமாகி நிற்க உள்ளேயிருந்து இன்ஸ்பெக்டர் குமரனும் நித்தியனும் இறங்கினார்கள். நித்தியன் சோர்ந்து களைத்துப் போயிருந்தான்.

ருத்ரமூர்த்தி ஆர்வமாய் போர்ட்டிக்கோ படி இறங்கியபடி நித்தியனைக் கேட்டார்.

''என்ன? சாந்தா கிடைச்சாளா?''

நித்தியன் அவரை முறைப்பாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு மௌனமாய் உள்ளே போக, ருத்ரமூர்த்தி இன்ஸ்பெக்டரை தவிப்பாய் ஏறிட்டார்.

''இன்ஸ்பெக்டர்! போன விஷயம் என்னாச்சு? சாந்தா கிடைச்சாளா?''

''கிடைக்கலை. அது சம்பந்தமாய்த்தான் மறுபடியும் உங்ககிட்ட வந்திருக்கேன்.''

''ஃபார்வாட்?''

''மிஸ்டர் ருத்ரமூர்த்தி! கொஞ்ச நேரத்துக்கு முந்தி நானும் உங்க சன்னும் சாந்தா தங்கியிருந்த ஹாஸ்ட்டலுக்குப் போயிருந்தோம். சாந்தாவோட அறையை சோதனை செய்து பார்த்தபோது ஒரு முக்கியமான டைரி கிடைச்சது.''

இன்ஸ்பெக்டர் குமரன் சொல்லிக் கொண்டே தன் கையில் வைத்திருந்த டைரியைக் காட்டிப் பிரித்தார். பிரித்துக் கொண்டே கேட்டார்.

''நீங்க சாந்தாவை இதுவரைக்கும் எத்தனை தடவை பார்த்து பேசியிருக்கீங்க?''

''ஒரு தடவை கூட கிடையாது இன்ஸ்பெக்டர். போன்ல கூப்பிட்டு ஒரு தடவை மிரட்டினதோடு சரி.''

''பொய் சொல்லாதீங்க மிஸ்டர் ருத்ரமூர்த்தி. சாந்தாவை நீங்க ஏழு தடவை நேர்ல பார்த்து மிரட்டியிருக்கீங்க?''

''நானா? நெவர்!''

''இப்படி சிம்பிளா சொல்லி தப்பிச்சுக்க முடியாது. [illegible]ந்தாவுக்கு டைரி எழுதற பழக்கம் இருக்கு. அந்த டைரியில் எல்லாத்தையும் எழுதியிருக்கா. இதோ பாருங்க போன மாசம் ஒன்பதாம் தேதி சாயந்திரம் ஆறு மணியளவில் சாந்தா ஒரு ஹோட்டல்ல டிபன் சாப்பிட்டு வெளியே வரும்போது நீங்க காரைக் கொண்டுபோய் அவளுக்கு முன்னாடி நிறுத்தி மிரட்டினதை அப்படியே எழுதியிருக்கா, படிச்சுப் பாருங்க.''

குமரன் டைரியை நீட்ட ருத்ரமூர்த்தி கைநடுங்க வாங்கி அந்தப் பக்கத்தில் பார்வையைப் போட்டார்.

குண்டு குண்டான கையெழுத்தில் வாக்கியங்கள் ஓடியிருந்தது.

''இன்று காலை கண் விழித்தது முதலே எனக்கு நேரம் சரியில்லை. மாத வாடகையை ஒழுங்காகத் தரவில்லையென்று ஹாஸ்ட்டல் வார்டன் சண்டை போட்டாள். லாண்டரி சலவைக்குப்போன என்னுடைய புது சேலை கிழிசலோடு வந்தது. குழாயில் தண்ணீர் வராததால் இன்றைக்கு குளிக்காமலேயே வேலைக்குக் கிளம்பிவிட்டேன். வழக்கமாய் சரியான நேரத்துக்கு வரும் பஸ் இன்றைக்கு அரை மணி நேரம் லேட். சரியான



கூட்டம். எப்படியே ஏறினேன். சரியான சில்லறை இல்லாததால் கண்டக்டரோடு சண்டை. எல்லாவற்றுக்கும் மேலாக சிகரம் வைத்த மாதிரி இன்றைக்கு சாயந்தரம் ஆறு மணியளவில் லஸ் கார்னரில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு ரோட்டை கிராஸ் பண்ண முயலும்போது பக்கத்தில் கார் வந்து நின்றது. நித்தியனின் அப்பா தலையை நீட்டினார்.

''வணக்கம் சார்...'' என்றேன்.

''உன் வணக்கத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் போடு'' என்றார். தொடர்ந்து அவரே சுட்டு விரலைக்காட்டி எச்சரித்தபடி பேசினார்.

''இதோ பார்... நான் உன்னை இப்படி சந்திச்சு பேசறது ஏழாவது தடவை. நித்தியன் விஷயமா நீ என்ன முடிவு எடுத்து இருக்கே?''

''ஏற்கெனவே எடுத்த முடிவுதான் சார்.''

''அதாவது நித்தியனை விட்டு விலகி நீ போகமாட்டே?''

''ஆமா ஸார்.''

அவர் முறைத்தார். ''என்னோட பலம் என்னான்னு தெரியாம என்கிட்டே மோதாதே... நான் நினைச்சா உன்னை நித்தியனோட வழியிலிருந்து மட்டும் இல்லை. இந்த உலகத்திலிருந்தே ஒழிச்சுக்கட்ட முடியும்.''

''உங்களுக்கு எப்படி பிரியமோ அப்படி செய்யுங்க. எனக்கு எது விதிச்சிருக்கோ அது நடந்துட்டு போகட்டும். நான் எதைப்பத்தியும் கவலைப்படாதவ... உங்க மகன் மும்பை ஜெயில்ல தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக தண்டனை அனுபவிச்சிட்டிருக்கார். ஜெயில்லயிருந்தே எனக்கு லெட்டர்ஸும் போடறார். நானும் அவருக்கு பதில் கடிதம் எழுதிக்கிட்டுத்தான் இருக்கேன். என்னை நீங்க சந்திக்கிறது ஏழாவது தடவைன்னு சொன்னீங்க. நான் இதுவரைக்கும் உங்க மகனுக்கு எழுதின

லெட்டர்கள்ல ஒரு வார்த்தை கூட உங்களைப் பத்தினது இல்லை... இனியும் எழுத மாட்டேன். அதே மாதிரி அவர் ஜெயிலிலிருந்து வந்த பின்னாடி கூட உங்களோட வில்லன் தனத்தை பற்றி சொல்ல மாட்டேன். உங்களை நானே ஃபேஸ் பண்ணி ஜெயிக்கப் போறேன்.''

''என்னை ஜெயிக்க உன்னால் முடியாது. விலகிப் போயிடு.''

''இப்போ... நீங்க விலகிப்போங்க. ட்ராஃபிக் கான்ஸ்டபிள் போக்குவரத்துக்கு இடைஞ்சலா இருக்கிற உங்க காரை பார்த்துட்டு வந்திட்டிருக்கார்.''

என் வருங்கால மாமனார் என்னை ஒரு கோபப் பார்வை பார்த்துக் கொண்டே வண்டியை வேகமாய் விரட்டிக் கொண்டு போய்விட்டார்.

* * *

டைரியில் இருந்த வாசகங்களைப் படித்துப் பார்த்துவிட்டு கலக்கமாய் நிமிர்ந்தார் ருத்ரமூர்த்தி.

குமரன் புன்னகையோடு கேட்டார்.

''இதுக்கு என்ன சொல்றீங்க.''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்.''

''எதுக்கு ஸாரி?''

''நான் சாந்தாவை பார்த்ததே இல்லைன்னு பொய் சொன்னதுக்காக...''

நித்தியன் உள்ளேயிருந்து கோபமாய் வந்தான்.

''இன்னும் இதுமாதிரி எத்தனை பொய்களை உங்க மனசுக்குள்ளே மறைச்சு வெச்சிருக்கீங்க இப்பவே அதையும் சொல்லிடுங்க.''

''இனிமே என்கிட்டே எந்தப் பொய்யும் கிடையாது நித்தியன்...''

''அப்பா! இனிமே நான் உங்களை நம்பமாட்டேன். சாந்தாவை என்ன பண்ணீங்க.. சொல்லிடுங்க... அவ உயிரோடு இருக்காளா



...லையா? உயிரோடு இல்லைன்னா இப்பவே ...ல்லிடுங்க. நானும் போய்ச் சேர்ந்துடறேன்.''

ருத்ரமூர்த்தி குரல் தழுதழுத்தார்.

''நித்தியன்! என்னை நம்பு! நான் சாந்தாவை ...ரட்டினதோடு சரி... மத்தபடி நான் அவளுக்கு ...ந்தக் கஷ்டத்தையும் தரலை.''

''உங்களைத் தவிர வேற யார் அவளுக்கு என்ன ...கடுதலை பண்ணியிருக்க முடியும்?''

ருத்ரமூர்த்தி குமரனிடம் திரும்பினார்.

''இன்ஸ்பெக்டர்! நீங்களாவது என்னைப் ...ரிஞ்சுக்குங்க. நான் அவளை மிரட்டினதோடு சரி... ...வ காணாம போயிருக்கிறதுக்கு நான் காரணம் ...டையாது.''

''நீங்க காரணம் இல்லைன்னா வேற யாரு?''

''அது வந்து... வந்து...''

''சொல்லுங்க...''


''எனக்கு ஒருத்தர் மேல டவுட்''

''யாரு மேல?''

''அது வந்து.... நான்தான் சொன்னேன்னு ...ிஷயம் வெளியே வரக்கூடாது.''

''வராது; யார்ன்னு சொல்லுங்க.''

''விசாலியோட அப்பா விஜயராகவன்.''




இன்ஸ்பெக்டர் குமரன் யோசனையாய் ...நற்றியைக் கீறியபடி ருத்ரமூர்த்தியை ஏறிட்டார்.

''விசாலியோட அப்பா விஜயராகவன் மேல ...ங்களுக்கு சந்தேகமா?''

''ஆமா...''

''அவருக்கு சாந்தா மேல என்ன கோபம்?''

''நித்தியன் - சாந்தா காதல் விவகாரம் அருக்கும் தெரியும். 'சாந்தா நித்தியனை விட்டு விலகிப் போகாத பட்சத்தில் நான் என்ன பண்ணணுமோ அதை பண்ணிக்கிறேன்'னு என்கிட்ட சொல்லி யிருந்தார். நான்கூட சாந்தா விஷயத்தில் ஃபோர்ஸா போயிட வேண்டாம்னு அட்வைஸ் பண்ணி யிருக்கேன்.''

''இந்த விஷயத்தை நீங்க ஏன் முன்னாடியே சொல்லலே?''

''விஜயராகவன் அப்படியெல்லாம் பண்ணி யிருக்க மாட்டார்னு நினைச்சேன். இப்ப நீங்க என்மேல சந்தேகப்படறதனால எந்தக் குற்றமும் செய்யாத நான் அவரைக் கைகாட்ட வேண்டி யிருக்கு... பட் நான் தான் இதைச் சொன்னேன்னு தயவு பண்ணி சொல்லிடாதீங்க...''

இன்ஸ்பெக்டர் குமரன் எழுந்து கொண்டார்.

''நித்தியன்.''

''ஸார்...''

''நான் விஜயராகவன் வீட்டுக்குப் போய் அவரை என்கொயர் பண்ணிப் பார்க்கிறேன்.''

''நானும் உங்க கூட வரட்டுமா ஸார்?''

''வேண்டாம். நான் தனிப்பட்ட முறையில் போய் விசாரணை பண்ணினால்தான் உண்மை வெளியே வரும். ஏதாவது இம்பார்ட்டண்ட் மெஸேஜ் இருந்தா ஐவில் டெலிபோன் யூ... பி... ரிலாக்ஸ். சாந்தா உயிரோடு இருந்தா எப்படியும் கண்டுபிடிச்சுடலாம். டோண்ட் வொரி...''

நித்தியன் கண்களில் நீர் கோர்த்தான்.

''ஸார்... நாளைக்கழிச்சு மறுநாள் பௌர்ணமி தினம். அந்த பௌர்ணமி தினத்துலதான் நானும் சாந்தாவும் கோயிலுக்குப் போய் 'கல்யாணம்' பண்ணிக்க முடிவு செஞ்சிருந்தோம். சாந்தா இப்போ



காணாம போயிட்டா. காணாமே போனது அவ மட்டும் இல்லை. என்னோட வாழ்க்கையும் சேர்ந்துதான். சாந்தா கிடைக்கலைன்னா எனக்கு வாழ்க்கை இல்லை. இந்த பௌர்ணமிக்குள்ளே எனக்கு சாந்தா கிடைக்கணும். இல்லேன்னா நான் தற்கொலை பண்ணிக்குவேன். எஸ்... சாந்தா கிடைக்கலைன்னா இந்த டிசம்பர் பௌர்ணமி தான் என்னோட கடைசிப் பௌர்ணமி.''

''டோண்ட் டாக் லைக் தட்... நித்தியன்... வாழ்க்கையோடு போராடினாத்தான் சில வெற்றிகளை சம்பாதிக்க முடியும். சாந்தாவை இந்த பௌர்ண மிக்குள்ளே கண்டுபிடிச்சுக் கொடுக்க வேண்டியது என்னோட பொறுப்பு...''

இன்ஸ்பெக்டர் குமரன், நித்தியன் தோளை மெல்ல தட்டிக் கொடுத்துவிட்டு போர்டிகோவில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார்.

ஜீப்பில் இருபது நிமிஷ பயணம்.

விஜயராகவனின் வீடு வந்தது. அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க, விசாலி வந்து கதவைத் திறந்தாள். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் திகைத்து பின் கேட்டாள்.

''என்ன இன்ஸ்பெக்டர் இந்த நேரத்துல?''

''தெரியும். இது வரக்கூடாத நேரம்தான். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.'

''என்ன விஷயம்... சாந்தாவைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா ஸார்?''

''இல்லை. அது விஷயமாத்தான் உங்க ஃபாதரை விசாரிக்க வந்தேன்.''

விசாலி நெற்றியை சுருக்கினாள்.

''சாந்தா விஷயமா அப்பாவை பார்க்க வேண்டிய அவசியம் என்ன ஸார்...?''

''அவசியம் வந்திருக்கு மிஸ் விசாலி. உங்க ஃபாதரை கொஞ்சம் கூப்பிட்டு விடறீங்களா?''

''அப்பா வீட்ல இல்லை.''

''எங்கே போயிருக்கார்?''

''படப்பையில் இருக்கிற எங்க பண்ணை வீட்டுக்கு.''

''எப்போ போனார்?''

''ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் கிளம்பிப் போனார்.''

''இந்த ராத்திரி நேரத்துல எதுக்காக பண்ணை வீட்டுக்குப் போயிருக்கார்?''

''இன்கம்டாக்ஸ் பிரச்சனை சம்பந்தமாய் கம்பெனி ஆடிட்டர்கிட்டே தனியா பேசணும்ங்கிற துக்காக போயிருக்கார்.''

''படப்பை பண்ணை வீட்ல டெலிபோன் இருக்கா?''

''இருக்கு.''

''நம்பர் போட்டுக் குடுங்க. நான் பேசணும்.''

விசாலி ஹாலின் குறுக்கே மெல்ல நடை போட்டு டெலிபோனைத் தொட்டு ரிசீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டினாள்.

ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டது. விஜய ராகவன் குரல் கொடுத்தார்.

''ஹலோ...''

''அப்பா... நான் விசாலி பேசறேன். உங்களைப் பார்த்து பேசறதுக்காக இன்ஸ்பெக்டர் நம்ம வீட்டுக்கு வந்திருக்கார். காணாமே போன சாந்தா விஷயமா உங்ககிட்ட ஏதோ என்கொயர் பண்ணணுமாம். ரிசீவரை அவர்கிட்ட தரட்டுமா?''

''கொ...கொடும்மா?''

விசாலி குமரனிடம் ரிசீவரை நீட்ட, அவர் வாங்கி காதுக்குப் பொருத்தி, ''ஸாரி... ஃபார் த டிஸ்டர்பன்ஸ் ஸார்'' என்றார்.

''என்ன விசாரிக்கணும்?''



''சாந்தாவை நீங்க பார்த்திருக்கீங்களா?''

''இல்லை''

''நித்தியன் - சாந்தா காதல் விவகாரம் உங்களுக்கு எப்போ தெரியும்?''

''இன்னிக்குத்தான்... தெரியும்.''

''பொய் சொல்லாதீங்க விஜயராகவன்.''

''பொய்யா?''

''எஸ்.பொய்தான்... நித்தியன் - சாந்தா காதல் விவகாரம் உங்களுக்கு முன்னாடியே தெரியும். இதைப்பத்தி நீங்களும் ருத்ரமூர்த்தியும் பேசி யிருக்கீங்க...''

''அப்படீன்னு யார் சொன்னது?''

''ருத்ரமூர்த்தியே சொன்னார்.''

மறுமுனையில் மௌனம் நிலவ... குமரன் தொடர்ந்தார். ''மிஸ்டர் விஜயராகவன்! நீங்க யார்கிட்ட வேணும்னாலும் பொய் சொல்லி தப்பிச்சுக்கலாம். ஆனால் போலீஸ்கிட்ட பொய் சொல்லி தப்பிக்க முடியாது. 'சாந்தா நித்தியனை விட்டு விலகிப் போகாத பட்சத்தில் நான் என்ன பண்ணணுமோ அதைப் பண்ணிக்கிறேன்'னு நீங்க ருத்ரமூர்த்தி கிட்ட சொல்லியிருக்கீங்க. உண்டா... இல்லையா?...?''

''இன்ஸ்பெக்டர்... அது வந்து...''

''லுக் மிஸ்டர் விஜயராகவன்... சாந்தா விஷயத்துல நீங்க உண்மையைச் சொல்லிடறது பெட்டர். இல்லேன்னா உங்களை ஸ்டேஷனுக்கு கூட்டிப்போய் மோசமான முறையில் விசாரணை நடத்த வேண்டியிருக்கும். நான் இப்போ புறப்பட்ட படப்பைக்கு வரட்டுமா... இல்லை நீங்க இங்கே வர்றீங்களா?''

மறுமுனையில் மௌனம்.

''என்ன பதிலையே காணோம்.''

''நானே வர்றேன் இன்ஸ்பெக்டர். பட் ஒரு விஷயம். சாந்தாவுக்கு என்னால எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடலை.''

''போன்ல எதுவும் வேண்டாம். நேர்ல பேசிக்கலாம் வாங்க.''

குமரன் ரிசீவரை வைத்துவிட்டு பக்கத்தில் நின்றிருந்த விசாலியை ஏறிட்டார்.

''உங்க மதர் எங்கே?''

''அவங்க தூங்கிட்டிருக்காங்க. ஸ்லீப்பிங் டேப்லட்டை சாப்பிட்டு படுத்துடறதுனால யார் வந்து பேசிட்டிருந்தாலும் அம்மா எழுந்திருக்க மாட்டாங்க... டை...த...டை... அப்பா என்ன சொன்னார்?''

''பாதி உண்மையை ஒத்துக்கிட்டார்.''

''பாதி உண்மையா...?''

''ஆமா... சாந்தா நித்தியன் காதல் விவகாரம் தனக்கு முன்னாடியே தெரியும்ங்கிற உண்மையை ஒத்துக்கிட்டார். இனி சாந்தாவை என்ன பண்ணினார்ங்கிற உண்மையை இங்கே வந்து சொல்லுவார்னு நினைக்கிறேன்.''

''நோ... இன்ஸ்பெக்டர்... என்னோட அப்பாவைப் பத்தி எனக்குத் தெரியும். ஹீ ஈஸ் நாட் ஏ கிரிமினல். ஒரு பெண்ணைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு அவர் தரம் தாழ்ந்து போகமாட்டார்.''

குமரன் ஒரு போலீஸ் புன்னகை பூத்தார். ''இந்தக் காலத்துல யாரையுமே நம்ப முடியலை மிஸ் விசாலி. நம்ம நாட்டு சட்டத்துறை மந்திரியே ஒரு கொலைக் குற்றம் தொடர்பாக கைது செய்யப்பட்டு இப்போ ஜாமீன்ல வெளியே வந்திருக்கார். இன்னிக்கு சொஸைட்டியில் இருக்கிற பணக்காரர்களில் பாதிப்பேர் ஏதாவது ஒரு வகையில் கிரிமினில்ஸ்தான். உங்களுக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கணும்கிறதுக்காக விஜயராகவன், சாந்தா விஷயத்துல ஏதாவது ஒரு வகையில் ஃபோர்ஸா இறங்கியிருக்கலாம்.''

வேதனையோடு விசாலி புன்னகைத்தாள்.



''இன்ஸ்பெக்டர்! இந்த கேஸ்ல நீங்க தப்பான திசையை நோக்கி போயிருக்கீங்கன்னு நினைக்கிறேன். கொஞ்சம் ப்ராக்டிக்கலா திங்க் பண்ணிப்பாருங்க ஸார். சாந்தா காணாமே போனது முகுந்தன் வீட்லயிருந்துதான். அங்கே ஏதோ ஒரு தப்பு நடந்திருக்கு. அந்த தப்பு என்னான்னு நீங்க ஸ்மெல் பண்ணி...''

விசாலி சொல்லச் சொல்ல...

டெலிபோன் எலக்ட்ரானிக் முனகலோடு கூப்பிட்டது. விசாலி போய் ரிசீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு குமரனிடம் நீட்டினாள்.

''கால் உங்களுக்குத்தான் ஸார். ஸ்டேஷனிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் கூப்பிடறார்.''

குமரன் ரிசீவரை வாங்கி ''சொல்லுங்க ஜோசப்'' என்றார்.

''ஸார்... சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்துலே ஒரு முக்கியமான க்ளு கிடைச்சிருக்கு.''

''என்ன க்ளு?''

''சாந்தா காணாமே போன இடமான மிஸ்டர் முகுந்தன் வீட்டு ஹால்ல ரெண்டுவிதமான ரத்தக்கறைகள் கிடைச்சது. ஒரு ரத்தக்கறை 'பி' பாஸிட்டிவ். இன்னொரு ரத்தக்கறை 'ஓ' பாஸிட்டிவ். இதுல சாந்தாவோட க்ரூப் 'பி' பாஸிட்டிவ். 'ஓ' பாஸிட்டிவ் க்ரூப் சாந்தாவோடு சம்பந்தப்பட்டவங்கள்ல யாருக்கு இருக்கும்னு ரகசியமா ஒரு சர்வே எடுத்து பார்த்தப்ப அது நித்தியனோட ப்ளட் க்ரூப் ஸார்...'' ஜோசப் சொல்ல குமரன் திடுக்கிட்டார்.

''நித்தியன் கிட்ட சாயந்திரம் கேட்டப்போ தன்னோட ப்ளட் குரூப் ஏபி நெகட்டிவ்னு சொன்னாரே?''

''பொய் சொல்லியிருக்கார் ஸார்.''



# 23

இன்ஸ்பெக்டர் குமரன் மேலும் திடுக்கிட்டவராய் டெலிபோனில் கேட்டார்.

''ஜோசப்! நீங்க என்ன சொல்றீங்க? நித்தியன் எதுக்காக தன்னோட ப்ளட் க்ரூப்பை மாத்தி சொல்லணும்?''

''போலீஸ்ல மாட்டிக்குவோம்ங்கிற பயம்தான் ஸார்... சாந்தா காணாமே போனதுக்கு நித்தியன்தான் முழு காரணமா இருக்க முடியும் சார்.''

''ஜோசப்! சாந்தாவைக் கல்யாணம் பண்ணிக்க நித்தியன் ஆர்வமா இருந்திருக்கார். அவரால எப்படி சாந்தாவுக்கு ஆபத்து வந்திருக்க முடியும்?''

''ஸார்... சாந்தா மாதிரியான ஏழைப் பெண்களைக் காதலிக்கிறது... சந்தோஷமா இருக்கிறது... இதெல்லாம் நித்தியன் மாதிரியான பணக்கார இளைஞர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு மாதிரி. சாந்தாவைக் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி நித்தியன் போலியான ஒரு ஆர்வத்தைக் காட்டியிருக்கலாம்.''

''நீங்க சொல்ற பாயிண்ட்டையும் மனசுக்குள்ளே வெச்சுக்கிட்டு நித்தியன்கிட்ட விசாரணை நடத்திப் பார்க்கலாம். பைதபை... மிஸ்டர் ஜோசப்! நித்தியனின் உண்மையான பிளட் க்ரூப் மேட்டர் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைச்சது?''

''அவரோட ஃபேமிலி டாக்டரோட நர்சிங் ஹோமுக்கு போன் பண்ணி கேட்டேன்.''

''தகவல் சொன்னது யார்? டாக்டரா?''

''இல்லை.''

''பின்னே?''

''ஹாஸ்பிட்டல்ல இருந்த ஒரு ஸ்டாஃப் நர்ஸ்.''



''சரி. நித்தியனை இது சம்பந்தமா நான் விசாரிக்கிறேன். அவர் ப்ளட் க்ரூப் விஷயத்துல பொய் சொல்லியிருந்தா ஸ்டேஷனுக்கு கூட்டிப்போய் லாக்கப்புல வெச்சு விசாரிச்சுட வேண்டியதுதான்.''

''அப்புறம்.. இன்னொரு விஷயம் சார்!''

''என்ன?''

''நித்தியன் மும்பை சிறையில போன வருஷம் ஒரு மாசமாவும் இருந்துட்டு வந்திருக்கார்.''

''ஈஸிட்?''

''எஸ்...ஸார்.''

''நித்தியன் எதுக்காக ஜெயிலுக்குப் போனார்?''

''காரணம் சரியா தெரியலை ஸார்.''

''இதை உங்களுக்கு யார் சொன்னது?''

''சாந்தா காணாம போன விஷயமா அவ தங்கியிருந்த வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்ட்டல்ல சில பேரை விசாரணை பண்ணினபோது ஒரு பொண்ணு சொன்ன தகவல் இது.''

''அந்தப் பொண்ணோட பேர் என்ன?''

''நர்மதா ஸார்.''

''நர்மதாவுக்கு எப்படி தெரியுமாம்?''

''சாந்தா, மும்பை ஜெயில்ல இருந்த நித்தியனுக்கு அடிக்கடி லெட்டர் எழுதறது உண்டாம். போன மாசத்துல ஒருநாள் சாந்தா நித்தியனுக்கு லெட்டர் எழுதிட்டிருக்கும்போது அவளுக்கு வெளியேயிருந்து ஒரு போன்கால் வந்திருக்கு. போனை அட்டெண்ட் பண்றதுக்காக எழுதின லெட்டரை அப்படியே மேஜை மேலே வெச்சுட்டு ஹாஸ்ட்டல் ஆபீஸ் ரூமுக்குப் போயிருக்கா. அந்த நேரத்துல சாந்தாவோடு கொஞ்ச நேரம் பேசிட்டு போகலாம்ங்கிற எண்ணத்துல நர்மதா சாந்தா ரூமுக்கு வந்திருக்கா. மேஜை மேல இருந்த லெட்டர் பார்வைக்கு கிடைச்சிருக்கு.

ஆர்வம் தாங்காமே அந்த லெட்டரை எடுத்து படிச்சிருக்கா. நித்தியன் ஜெயில்ல இருக்கிற விஷயம் தெரிஞ்சிருக்கு. பட் நர்மதா அந்த விஷயத்தை தெரிஞ்சுக்கிட்ட மாதிரி சாந்தாகிட்டே இதுவரைக்கும் காட்டிக்கவே இல்லையாம். இப்போ விசாரணைன்னு வந்த பிறகு அதுவும் சாந்தா காணாமே போயிருக்கிற துனால அந்த உண்மைகளை யெல்லாம் சொல்ல வேண்டியதாயிருச்சுங்கிறது நர்மதாவோட ஸ்டேட் மெண்ட். பிளட் க்ரூப் விஷயத்துல நித்தியன் சொல்லியிருக்கிற பொய்யையும் அவர் ஜெயிலுக்கு போய்ட்டு வந்திருக்கிற விஷயமும் கொஞ்சம் நெருடலாயிருக்கு ஸார்.''

''ஜோசப்! நீங்க இப்ப தந்திருக்கிற விஷயங்களை வெச்சுக்கிட்டு நான் ஃபர்தரா என்கொயரி பண்ணிக்கிறேன். நீங்க மத்த என்கொயரிகளை கவனிங்க.''

''எஸ் ஸார்.''

குமரன் ரிஸீவரை வைத்துவிட்டு அருகில் நின்றிருந்த விசாலியை ஏறிட்டார்.

''மிஸ் விசாலி''

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்.''

''நித்தியன் மும்பை ஜெயில்ல இருந்தது உண்மையா?''

விசாலி சில விநாடிகள் தயங்கிவிட்டு தொடர்ந்தாள். ''உண்மைதான் இன்ஸ்பெக்டர். பட் தான் செய்யாத குற்றத்துக்காக அவருக்கு கிடைச்ச தண்டனை அது. ஹி ஈஸ்... ஹார்ம்லஸ்.

குமரன் புன்னகைத்தார்.

''கோர்ட் தப்பு பண்ணாது மிஸ் விசாலி. நித்தியன் ஒரு குற்றம் பண்ணாமே அவருக்கு அந்த ஒரு வருஷ ஜெயில் தண்டனை கிடைச்சிருக்காது. எதுக்காக தண்டனை கொடுத்திருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''



''சொல்லுங்க.''

''ஒரு வருஷத்துக்கு முந்தி நித்தியன் மும்பை ஏர்போர்ட்ல சென்னை ஃப்ளைட்டுக்காக காத்திட்டிருந்தபோது அறிமுகம் இல்லாத பெண்ணொருத்தி தன்னோட சூட்கேஸை அவர் பக்கத்துல வெச்சுட்டு பார்த்துக்கும்படி சொல்லிட்டு டாய்லட் பக்கம் போயிருக்கா... அந்த நேரத்துல ஏர்போர்ட் போலீஸ் வந்து பயணிகளின் லக்கேஜ்களை சோதனை போட்டிருக்காங்க... அப்படி சோதனை போட்டதில் அந்தப் பெண்ணோட சூட்கேஸுக்குள்ளே போதை பொருள் இருந்திருக்கு. போலீஸ் அந்த சூட்கேஸ் நித்தியனோடதுதான்னு நினைச்சு ஸ்டேஷனுக்கு கொண்டு போயிட்டாங்க.''

''அந்தப் பொண்ணு?''

''போலீஸ் சோதனை போட வந்ததுமே அவ தலைமறைவாயிட்டாளாம்.''

''நித்தியன் உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே?''

''சொல்லியும் மும்பை போலீஸ் கேட்கலை. விவகாரத்தை கோர்ட்டுக்கு கொண்டுபோய் ஸ்பாட் விட்னஸை ஏற்பாடு பண்ணி போதை மருந்து கடத்தலில் நித்தியனுக்கும் பங்கு உண்டுன்னு கோர்ட்ல ஃப்ரூவ் பண்ணிட்டாங்க. விளைவு ஒரு வருஷ சிறை தண்டனை. ஒரு நிரபராதியை மும்பை கோர்ட் அநியாயமா தண்டிச்சிருச்சு.''

''நித்தியன் நிரபாரதியா இல்லையாங்கிறது அந்த கேஸ் ஹிஸ்டரியைப் படிச்சுப் பார்த்தாத்தான் தெரியும். மும்பை போலீஸுக்கு தகவல் கொடுத்தா போதும். அடுத்த தபாலிலேயே நித்தியனோட கேஸ் ஹிஸ்டரி காப்பி என் மேஜைக்கு வந்துடும்.''

''இன்ஸ்பெக்டர்! நித்தியனைப் பார்த்தா உங்களுக்கு குற்றம் பண்ணுகிற நபர் மாதிரியா தோணுது?''

''இந்தக் காலத்துல யாரையுமே நம்ப முடியலை. நீங்க சர்டிபிகேட் தர்ற அளவுக்கு இருக்கிற நித்தியன் சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்துல என்கிட்டயே பொய் சொல்லியிருக்கிறார்.''

''என்ன பொய்?''

''சாந்தா காணாமல் போன இடமான முகுந்தன் வீட்ல ரெண்டு விதமான ரத்தக்கறைகள் இருந்தது. ஒரு ரத்தக்கறை 'பி' பாஸிட்டிவ். இன்னொரு ரத்தக்கறை 'ஓ' பாஸிட்டிவ். இதுல சாந்தாவோட பிளட் க்ரூப் 'பி' பாஸிட்டிவ். இன்னொரு க்ரூப்பான 'ஓ' பாஸிட்டிவ் ரத்தம் சாந்தாவோடு சம்பந்தப்பட்டவங்கள்ல யாருக்கு இருக்குன்னு ரகசியமா ஒரு சர்வே எடுத்து பார்த்தப்ப, அது நித்தியனோட ப்ளட் க்ரூப். ஆனா இன்னிக்கு சாயந்தரம் நித்தியன்கிட்ட உங்க ப்ளட் என்ன க்ரூப்ன்னு கேட்டப்ப 'ஏ.பி.நெகட்டிவ்'ன்னு சொன்னார். எதுக்காக அவர் பொய் சொல்லணும்?''

விசாலி முகம் சிவந்தாள். ''ஸார்! சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்தில் நித்தியன் ரொம்பவும் நொந்து போயிருக்கார். இந்த நிலைமையில் நீங்க அவர் மேலேயே சந்தேகப்படறது கொஞ்சம்கூட சரியில்லை.''

''ப்ளட் க்ரூப் விஷயத்துல நித்தியன் எதுக்காக பொய் சொல்லணும்?''

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! கண்ணால் பார்ப்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. ஸோ... நீங்க மறுபடியும் இந்த ப்ளட் க்ரூப் விஷயமா நித்தியன்கிட்டே விசாரிச்சு பாருங்க. உண்மையான தகவல் கிடைக்கும்.''

குமரன் எழுந்தார்.

''உங்க ஃபாதரை நாளைக்குக் காலையில் வந்து என்கொயரி பண்ணிக்கிறேன். இப்போ என்னோட உடனடித் தேவை நித்தியன். நித்தியன்கிட்டே



என்னவோ தப்பு இருக்கு. அந்த தப்பு என்னான்னு தெரிஞ்சா சாந்தா காணாமே போனதுக்கு விடை கிடைச்சுடும்.''

குமரன் விசாலியிடம் விடைபெற்றுக்கொண்டு ஜீப்புக்கு வந்தார். வேகமாக இருபது நிமிடப் பயணம்.

* * *

ஜீப் போர்ட்டிக்கோவில் போய் நிற்க, தூக்கக் கலக்கத்தோடு வேலையாள் ஓடி வந்தான். இன்ஸ்பெக்டர் குமரனைப் பார்த்ததும் கும்பிட்டான்.

''அய்யா...''

''போய் நித்தியனை எழுப்பு.''

''சின்னய்யாங்களா?''

''ம்...''

''அவர் வீட்ல இல்லீங்களே...''

''இல்லையா? எங்கே போயிருக்கார்?''

''தெரியலீங்கய்யா... பத்து நிமிஷத்துக்கு முன்னாடி தான் காரை எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பிப் போனார்.''

''எங்கே போறேன்னு சொல்லலையா?''

''ஒண்ணுமே சொல்லலீங்கய்யா... ஆனா ரொம்பவும் அவசர அவசரமா புறப்பட்டுப் போனார். அவரோட இடுப்புல...''

வேலையாள் குரலை இழுக்க... குமரன் நெற்றி சுருங்கினார்.

''ம்... சொல்லு... அவரோட இடுப்புல என்ன?''

''துப்பாக்கி சொருகி வெச்சுருந்தாங்க.''




'நித்தியன் இந்த இரவு நேரத்தில் காரை எடுத்துக் கொண்டு எங்கே போயிருப்பான்? அதுவும் ரிவால்வரை எடுத்துக்கொண்டு?'

இன்ஸ்பெக்டர் குமரன் தன் கன்னப் பரப்பை இடது கைவிரல்களால் தேய்த்துக் கொண்டே அந்த வேலைக்காரனைப் பார்த்தார்.

"பெரியவர் வீட்டுக்குள்ளே இருக்காரா?"

"இருக்காங்க."

"கூப்பிடு"

வேலையாள் உள்ளே போன இரண்டாவது நிமிஷம் ருத்ரமூர்த்தி லேசான தூக்கக் கலக்கத்தோடு வெளியே வந்தார். வியப்பாய் வரவேற்றார்.

"வாங்க... இன்ஸ்பெக்டர் என்ன இந்த நேரத்துல...?"

"உங்க சன் நித்தியனைப் பார்க்க வந்தேன். ஆனா அவர் இப்பதான் கார்ல கிளம்பிப் போறதா வேலைக்காரன் சொல்றான். நித்தியன் வெளியே போனது உங்களுக்கு தெரியாதா?"

"தெரியாது இன்ஸ்பெக்டர்... நித்தியன் வெளியே போன விஷயம் இப்போ வேலைக்காரன் சொல்லித்தான் எனக்கே தெரியும்."

"நித்தியன் இடுப்புப் பகுதியில் ரிவால்வர் இருந்ததாய் வேலைக்காரன் சொல்கிறான். நித்தியன்கிட்ட ரிவால்வர் வெச்சுக்கிறதுக்கான லைசென்ஸ் இருக்கா?"

"இருக்கு இன்ஸ்பெக்டர். பாதுகாப்புக் கருதி, அஞ்சாறு வருஷங்களுக்கு முன்னாடியே நானும் நித்தியனும் ரிவால்வர்க்கான லைசென்ஸ் வாங்கிக்கிட்டோம்."

"நித்தியன் இந்த ராத்திரி நேரத்துல ரிவால்வரோட எங்கே கிளம்பிப் போயிருப்பார்னு உங்களால சொல்ல முடியுமா?"

"எனக்குத் தெரியலை இன்ஸ்பெக்டர். பட் சாதாரணமா ராத்திரி நேரங்களில் அவன் வெளியே கிளம்பும்போது ரிவால்வர் எடுத்துக்கிட்டுத்தான் கிளம்புவான். வேலைக்காரன் இன்னிக்கு புதுசா பார்த்ததினால அதை ஒரு ஆச்சரியமான விஷயமா சொல்லியிருக்கான்."



இன்ஸ்பெக்டர் குமரன் ருத்ரமூர்த்தியை வெகுவாய் நெருங்கி மெல்லிய குரலில் சொன்னார்.

"உங்க சன் நித்தியன்கிட்ட ஏதோ ஒரு தப்பு இருக்கு மிஸ்டர் ருத்ரமூர்த்தி."

"தப்பா...! என்ன தப்பு?"

"நித்தியன் ஒரு ஜெயில் பேர்ட்டா இல்லையா? மும்பை ஜெயில்ல ஒரு வருஷம் கம்பி எண்ணிட்டு வந்திருக்கார். உண்டா இல்லையா?"

"இ...இ...இன்ஸ்பெக்டர்...?"

"எல்லா விஷயமும் வெளியே வந்தாச்சு. இனிமே நீங்க எந்த ஒரு விஷயத்தை மறைக்க முயற்சி பண்ணினாலும் அது உங்களுக்கு பாதகமாகவே முடியும்."

ருத்ரமூர்த்தி குரல் தழுதழுத்தார். "இன்ஸ்பெக்டர் நித்தியன் ஜெயிலுக்குப் போனது உண்மைதான். பட் ஹீ ஈஸ் ஹார்ம்லஸ். கோர்ட் சந்தேகத்தின் அடிப்படையில் அவனுக்கு தண்டனை வழங்கியிருக்கு. அவன் எந்தக் குற்றமும் செய்யாதவன்."

"இருக்கலாம்... ஆனா சாந்தா காணாமல் போன விஷயத்தில் பொய் சொல்லியிருக்கார்."

"பொய்யா? என்ன பொய்?"

"சாந்தா காணாமே போன இடமான முகுந்தன் வீட்ல ரெண்டுவிதமான ப்ளட் க்ரூப் ஸ்டெய்ன் இருந்தது. ஒரு பிளட் குரூப் 'பி'பாஸிட்டிவ். இன்னொரு பிளட் க்ரூப் 'ஓ' பாஸிட்டிவ். இந்த ரெண்டில் சாந்தாவோட ப்ளட் க்ரூப் 'பி' பாஸிட்டிவ். சாந்தா விவகாரத்துல சம்பந்தப்பட்டவங்க நபர்களில் யாருக்கு 'ஓ' பாஸிட்டிவ் க்ரூப் இருக்குன்னு ரகசியமா கம்பேர் பண்ணிப் பார்த்தபோது அது நித்தியனோட ப்ளட் க்ரூப்ன்னு தெரிஞ்சுது. பட் நித்தியன் தனக்கு ப்ளட் க்ரூப் 'ஏ.பி.நெகட்டிவ்'னு சொல்லியிருக்கார்."

ருத்ரமூர்த்தி வியப்பில் நெற்றியைச் சுருக்கினார். "இன்ஸ்பெக்டர்! நித்தியன் சொன்னது சரிதான். அவனோட ப்ளட் க்ரூப் 'ஏ.பி.நெகட்டிவ்'தான். 'ஓ' பாஸிட்டிவ் கிடையாது."

''ஆர் யூ... ஷ்யூர்?''

''ஷ்யூர் இன்ஸ்பெக்டர்! நான் அதை இவ்வளவு உறுதியாச் சொல்றதுக்குக் காரணம் எனக்கும் நித்தியனுக்கும் ஒரே ப்ளட் க்ரூப். நான் ஒரு தடவை ஜாண்டீஸ் வந்து கஷ்டப்பட்டபோது எனக்கு ப்ளட் கொடுத்ததே நித்தியன்தான். இதை நீங்க என்னோட ஃபேமலி டாக்டர் ராவ்கிட்டேயே கேட்டு கன்ஃபார்ம் பண்ணிக்கலாம்.''

இன்ஸ்பெக்டர் குமரன் இப்போது குழப்பமானார். ''மிஸ்டர் ருத்ரமூர்த்தி! கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப் உங்க ஃபேமிலி டாக்டரோட நர்சிங்ஹோமுக்கு போன் பண்ணி நித்தியனோட ப்ளட் க்ரூப் எதுன்னு டிருக்கார். கிடைச்ச பதில் 'ஓ' பாஸிட்டிவ்.''

''இருக்காது இன்ஸ்பெக்டர்.''

''சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப் பொய் சொல்லமாட்டாரே?''

''அவருக்கு டெலிபோன்ல பதில் சொன்னது யார்? டாக்டர் ராவா?''

''இல்லை... ஒரு நர்ஸ்.''

''அந்த நர்ஸுக்கு உண்மையிலேயே நித்தியனோட ப்ளட் க்ரூப் எதுன்னு தெரியாம இருக்கலாம்.''

''உங்க டாக்டர் வீட்டு போன் நம்பர் என்ன?''

ருத்ரமூர்த்தி போன் நம்பர் சொல்ல குமரன் அதை மனதில் வாங்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த டெலிபோனைத் தொட்டு ரிசீவரை எடுத்துக் கொண்டார். டயலில் எண்களைத் தட்ட மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டது.

''டாக்டர் ராவ்?''

''எஸ்.... ஸ்பீக்கிங்''

''டாக்டர் ராவ்! நான் இன்ஸ்பெக்டர் குமரன். இப்ப ருத்ரமூர்த்தி வீட்லயிருந்து பேசிட்டிருக்கேன்...'' என்று விஷயத்தைச் சொன்னார். மறுமுனையில் டாக்டர் அதை செவிமடுத்துவிட்டு தீர்மானமான குரலில் சொன்னார்.

''மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! நித்தியன் ப்ளட் க்ரூப் 'ஏ.பி.'நெகட்டிவ் தான். நோ டவுட். உங்க சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப்புக்கு டெலிபோனில் பதில் சொன்ன நர்ஸ் பேர் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''நோ... ப்ராப்ளம்... நீங்க இன்னும் ஒரு பத்து நிமிஷத்துக்கு ருத்ராமூர்த்தி வீட்டிலேயே இருங்க... நான் ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்ணி உண்மை நிலவரம் என்னன்னு கேட்டு தெரிஞ்சு, உங்களுக்கு ரிங் பண்றேன்.''

''ப்ளீஸ்...''

இன்ஸ்பெக்டர் குமரன் ரிசீவரை வைத்துவிட்டு காத்திருந்தார். சரியாய் பத்து நிமிஷம்.

டெலிபோன் கூப்பிட்டது. குமரன் ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுக்க, டாக்டர் ராவ் பேசினார்.

''இன்ஸ்பெக்டர்! பெயர் குழப்பத்தால்தான் இந்த தப்பு நேர்ந்திருக்கு. சப்-இன்ஸ்பெக்டர் நித்தியனின் ப்ளட்க்ரூப் சம்பந்தமாய் போன் செய்தபோது அந்த டெலிபோனை அட்டெண்ட் பண்ணியது உண்ணிமேரி என்கிற புதிய நர்ஸ். நித்தியனின் ப்ளட் க்ரூப் எது என்று ஜோசப் கேட்டதும் நர்ஸ் உண்ணிமேரி பேஷண்ட்ஸ் ப்ளட் க்ரூப் ஃபைலை எடுத்துப் புரட்டிப் பார்த்திருக்கா... போலீஸோட என்கொயரிங்கிற பதட்டத்துல நித்தியனோட ப்ளட் க்ரூப் கார்டை எடுத்துப் பார்க்கிறதுக்குப் பதிலா சத்தியன் என்கிற பேஷண்ட்டோட கார்டை எடுத்துப் பார்த்துட்டு 'ஓ' பாஸிட்டிவ்ன்னு சொல்லியிருக்கா. நடந்த குழப்பம் இதுதான். நான் இப்ப சொன்னதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னா இப்பவே இந்த நிமிஷமே நீங்க என்னோட நர்ஸிங்ஹோமுக்கு புறப்பட்டு வரலாம்.''

''நோ... டாக்டர்... ஐ பிலீவ் யூ... இந்த ராத்திரி நேரத்துல உங்களை தொந்தரவு படுத்தியதற்காக மன்னிக்கணும்.''

''வாட் ஈஸ் தேர்! உங்க ட்யூட்டி என்கொயர் பண்ண வேண்டியது. என்னோட ட்யூட்டி சரியான பதிலைச் சொல்ல வேண்டியது. ரெண்டு பேருமே அவங்கஅவங்க கடமையைத்தான் பண்ணியிருக்கோம். பை...த...பை...இப்போ நித்தியன் எங்கே?''

''அதை ட்ரேஸ் பண்றதுதான் அடுத்த வேலை...'' இன்ஸ்பெக்டர் குமரன் ரிசீவரை வைத்துவிட்டு வியர்வை மின்னும் முகமாய் ருத்ரமூர்த்தியிடம் திரும்பினார்.

* * *

சோடியம் வேப்பர் விளக்குகளின் மாம்பழ வண்ண வெளிச்சத்தில் நனைந்து கிடந்த போக்குவரத்தற்ற ரோடுகளில் காரை விரட்டிக் கொண்டிருந்தான் நித்தியன்.

கார் வளைவுகளில் சீறி பூந்தமல்லி ஹைரோடைத் தொட்டு வானவில் ரெஸ்டா ரெண்டுக்குப் பக்கத்தில் வந்ததுமே வேகம் குறைந்து ஊர்ந்தது.

ஒரு டெலிபோன் பூத்துக்கு அருகில் நின்றிருந்த முகுந்தன் காருக்குப் பக்கத்தில் ஓடி வந்தான்.

''நித்தியன்''

''மொதல்ல கார்ல ஏறு.''

அவன் காரைச் சுற்றி வந்து ஏறிக்கொண்டான். கார் சூறாவளியாய் கிளம்பியது.

''முகுந்தன்! நீ போன்ல சொன்னது உண்மையா?''

''இதுல பொய் சொல்ல என்ன இருக்கு? நான் கண்ணால பார்த்ததைத்தான் உனக்கு அந்த நிமிஷமே போன் பண்ணிச் சொன்னேன்.''

''வழி உனக்குத் தெரியுமா?''

''தெரியும்! நேரா விடு.''

''காரின் ஆக்ஸிலேட்டரை பலங்கொண்ட மட்டும் மிதித்தான் நித்தியன்.



## 25

நித்தியன் காரை வேகமாய் விரட்டிக் கொண்டே பக்கத்தில் உட்கார்ந்திருந்த முகுந்தனைப் பார்த்தான்.

''நீ டெலிபோனில் சொன்ன தகவலை என்னால் நம்பவே முடியலை முகுந்தன்...''

''எனக்குத் தகவல் வந்த போதும் அதே உணர்வுதான்.''

''கார்ல போனது விசாலிதானா?''

''விசாலிதான் நித்தியன்... சாந்தா காணாம போன நிமிஷத்திலிருந்தே எனக்கு விசாலி மேல் லேசா சந்தேகம் இருந்தது. அதை உன்கிட்டே சொன்னா நீ ஒத்துக்கமாட்டே... அதனாலதான் நானே எனக்குத் தெரிஞ்ச ஒரு தனியார் டிடெக்டிவ் ஏஜென்ஸியை காண்டாக்ட் பண்ணி விசாலியை க்ளோஸ் அப்ஸர்வ் அண்ட் ஃபாலோ அப் செய்யச் சொன்னேன். அவர்களும் ஒரு நிமிஷம்கூட விடாமே விசாலி யோட நடவடிக்கைகளை கண்காணிச்சுக்கிட்டு வந்திருக்காங்க. ஒரு பதினைஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி விசாலி, வீட்டை விட்டு வெளியே வந்திருக்கா. வேகமான கார் பயணம். ஏஜென்ஸி ஆட்களும் ஃபாலோ பண்ணிப் போயிருக்காங்க. விசாலியோட கார் பூந்தமல்லி ஹைரோட்டில் இருந்து உள்ளே தள்ளியிருக்கிற மஹாராணி அவென்யூவுக் குள்ளே போயிருக்கு. ஒரு பழைய கட்டிடத்துக்கு முன்னாடி நின்னிருக்கு. விசாலி சுற்றும் முற்றும் பார்த்துட்டு உள்ளே போய் வாசல் பூட்டைத் திறந்திருக்கா. அந்த விஷயம் எனக்கு உடனே செல்போனில் தகவலா வந்தது. உனக்கும் அதைப்பற்றி தகவல் கொடுத்துட்டு நான் வானவில் ரெஸ்டாரெண்டுக்கு வந்து வெயிட் பண்ணிட்டிருந்தேன்.'' முகுந்தன் நீளமாய் பேசி முடிக்க நித்தியன் ஏறிட்டான் அவனை.

"சாந்தா காணாமே போனதுக்கு விசாலி காரணமாயிருப்பாளா முகுந்தன்?"

"ஏன் காரணமாய் இருக்கக் கூடாது? விசாலி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிற ஆசையோடு இருந்தாள். அவளோட ஆசை நிராசையாகக் காரணம் சாந்தா. சாந்தா போல நேரடியா வெறுப்ப காட்ட முடியாது. ஸோ இது மாதிரியான ஒரு அண்டர்கிரௌண்ட் வேலை பண்ணியிருக்கலாம். இல்லேன்னா இந்த நேரங்கெட்ட ராத்திரி வேளையில் வீட்டை விட்டு கிளம்பி ஒதுக்குப்புறமா இருக்கிற ஒரு வீட்டுக்குப் போவானேன்?"

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு முகுந்தன்."

"இன்னும் கொஞ்ச நேரத்துல அந்தக் குழப்பம் காணமே போயிடும். விசாலி யார்ங்கிற உண்மையும் தெரிஞ்சிடும்... காரை ரைட்ல கட் பண்ணிக்கோ. மஹாராணி அவென்யூவுக்குப் போற வழி இதுதான்."

நித்தியன் காரை வலது பக்கமாய் ஒடித்து அந்த கப்பிக்கல் சாலைக்குள் வளைத்தான்.

இரண்டு பக்கமும் மரங்கள் மண்டிய சாலை அது. இருட்டின் கறுப்புப் படுதா பின்னணியில் ஆங்காங்கே சொற்பமாய் மின் விளக்குகள் கண் சிமிட்டின. வெட்ட வெளியில் கட்டிடங்கள் தள்ளித்தள்ளி தெரிந்தன.

"முகுந்தன்"

"ம்..."

"விசாலி போயிருக்கிற அந்த வீட்டுக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"இதோ வந்தாச்சு... அடுத்த கட்ல காரைத் திருப்பிக்கோ..."

கார் திரும்பியது. குண்டும் குழியுமாய் இருந்த சாலையில் தத்தித் தத்தி பயணித்துப் பின் முகுந்தன் காட்டிய ஒரு பழைய பங்களாவுக்கு முன்பாய் வந்து நின்றது.

சுற்றிலும் மரங்கள் அசைந்து கொண்டிருந்த அந்த பங்களாவுக்குள் இருட்டு ஈஷிக் கிடந்தது.



முகுந்தன் காரை விட்டு முதல் ஆளாய் இறங்கி காம்பௌண்ட் கேட்டை நெருங்கி அதன் தலையின் மேல் கை வைத்துத் தள்ளினான்.

அது சத்தம் காட்டாமல் பின்வாங்கிக் கொண்டு வழிகாட்ட இருவரும் உள்ளே போனார்கள். போர்டிகோவில் ஒரு அம்பாசிடர் கார் இருட்டில் கரைந்து தெரிந்தது.

காரைச் சுற்றிக் கொண்டு போர்டிகோ படிகளுக்கு வந்தார்கள். முகுந்தன் படிகளில் உயர்ந்து கதவின்மேல் கையை வைத்து மெல்லத் தள்ளிப் பார்த்தான்.

கதவு எதிர்ப்பைக் காட்டாமல் திறந்து கொண்டது.

உள்ளே பார்வை போக... ஹால் முழுவதும் இருட்டு. அந்த இருட்டைக் கழுவும் முயற்சியில் ஹாலின் மூலைச் சுவரில் அப்பியிருந்த ஒரு ஜீரோ வாட் பல்பு மினுக்கிக் கொண்டிருந்தது.

நித்தியன் கிசுகிசுத்தான்.

"என்ன முகுந்தன்... வீடு இப்படி திறந்து போட்டு கிடக்கு. வீட்ல யாரும் இருக்கிற மாதிரியும் தெரியலை. விசாலி இந்த வீட்டுக்குள்ளதான் நுழைஞ்சாளா?"

"ஆமா..."

"அப்படீன்னா அவ எங்கே?"

"ஒவ்வொரு ரூமா புகுந்து பார்க்கலாம்."

சொன்ன முகுந்தன் ஹாலை ஒட்டியிருந்த முதல் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

அறையில் யாரும் இல்லை.

இரண்டாவது அறை.

வெறுமை.

மூன்றாவது அறை தட்டுமுட்டுச் சாமான்களால் மூச்சை அடைக்கிற அளவுக்கு நிரம்பியிருந்தது.

ஹாலின் கோடியில் இருந்த கடைசி அறைக்கு வந்தார்கள். வெளிப்பக்கம் தாழ் போட்டிருந்த கதவைத் திறக்க உள்ளே நீல நிற ஜீரோ வாட்ஸ்

வெளிச்சத்தில் ஒரு கட்டிலும் கட்டிலின் மேல் யாரோ படுத்து இருப்பதும் தெரிந்தது.

நித்தியன் திகைப்பாய் முகுந்தனைப் பார்த்தான்.

''யார் அது?''

''தெரியலை... பக்கத்தில் போய் பார்ப்போம்.''

மெதுவாய் நடைபோட்டு பக்கத்தில் போனார்கள். போர்வையால் போர்த்தப்பட்ட உருவம் பெண் என்று தெரிய நித்தியன் ஆர்வம் தாங்காமல் குனிந்து அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான்.

மூளைக்குள் நியூரான்கள் சந்தோஷம் கொண்டிருந்தது.

''சாந்தா''

பரவசமாய் அவளுடைய தலையைத் தொட்டான் நித்தியன். குரல் நடுங்க மறுபடியும் கூப்பிட்டான்.

''சா...ந்...தா''

முகுந்தன் நித்தியனின் தோளைத் தொட்டான்.

''நித்தியன்! சாந்தா மயக்கத்துல இருக்கான்னு நினைக்கிறேன். நீ அவளை எழுப்பி சுயநினைவுக்கு கொண்டு வர முயற்சி பண்ணு. நான் இந்த பங்களாவை ஒரு அலசல் அலசி விசாலி எங்கே இருக்கான்னு பார்த்துட்டு வந்துடறேன்.''

''முகுந்தன்! பத்திரம்''

''கவலைப்படாதே! உன்கிட்ட ரிவால்வர் இருக்கா?''

''இருக்கு''

''அதைக் கொண்டா.''

நித்தியன் தன் இடுப்பைத் தொட்டு அங்கே மறைவாய் இருந்த பிஸ்டலை எடுத்துக் கொடுத்தான்.

முகுந்தன் அதை வாங்கிக் கொண்டு வெளியேற நித்தியன் மறுபடியும் பதட்டமாய் சாந்தாவின் முகம் அருகே குனிந்தான். கன்னத்தை மெல்லத் தட்டியபடி குரல் கொடுத்தான்.

''சாந்தா''



''....''

''சா...ந்...தா...''

''....''

எவ்வளவு உசுப்பியும் சாந்தா எழாமல் போகவே அவளுடைய நாசிக்குப் பக்கத்தில புறங்கையை வைத்துப் பார்த்தான்.

லேசாய் மூச்சு வந்து கொண்டிருந்தது. மார்புகள் ஸ்லோமோஷனில் ஏறித் தாழ்ந்து கொண்டிருக்க சாந்தாவின் கண்ணிமைகளில் மெலிதான நடுக்கம்.

எத்தனை முறை கூப்பிட்டும் சாந்தா கண் விழிக்காமல் போகவே முகுந்தனைப் பார்ப்பதற்காக அறையை விட்டு வெளியே வந்து ஹாலை எட்டிப் பார்த்தான் நித்தியன்.

முகம் மாறி லேசான அதிர்ச்சிக்கு உட்பட்டான்.

முகுந்தன் ஹாலின் நடுவே போடப்பட்டிருந்த சோபாவுக்கு மையமாய் சாய்ந்து கால் மேல் கால் போட்டபடி சிகரெட் ஒன்றை சாவதானமாய் புகைத்துக் கொண்டிருந்தான்.

மடியில் பிஸ்டர்.

ஹாலின் வாசல் பக்கக் கதவு இப்போது இறுக்கமாய் சாத்தப்பட்டிருந்தது.

நித்தியனைப் பார்த்ததும் முகுந்தன் புகை கசியும் வாயோடு புன்னகைத்தான்.

சன்னமான குரலில் கேட்டான்.

''என்ன நித்தியன்... சாந்தா கண் முழிச்சுப் பார்க்கலையா? அவ கண் முழிச்சுப் பார்க்க இன்னும் நாலு மணி நேரம் இருக்கு. இப்போ அவ உடம்பை நெருப்பே சுட்டாலும் சரி வலி தெரியாது. செடட்டிவ் மருந்து நாலஞ்சு டோஸ் உள்ளே போயிருக்கு.''

முகுந்தன் பேசிக்கொண்டே போக அவனை பயமாய்ப் பார்த்தான் நித்தியன்.

* * *

**போ**லீஸ் ஸ்டேஷன். இன்ஸ்பெக்டர் குமரன் நிலை கொள்ளாமல் நடைபோட்டுக் கொண்டிருக்க

எதிரே சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப் குமரன் புலம்பினார்.

''இந்த ராத்திரி நேரத்துல நித்தியன் யாரை பார்க்கிறதுக்காக காரை எடுத்துக்கிட்டுப் போனான்னு தெரியலையே! கையில துப்பாக்கியை வேற எடுத்துக்கிட்டு போயிருக்கான். நாளைக்கு பொழுது விடியும்போது என்ன ஷாக் நியூஸ் கிடைக்குமோ தெரியலை.''

''ஸார்... நித்தியன் பயணம் பண்ணினது மாருதி கார்தானே?''

''ஆமா.''

''ட்ராஃபிக் கண்ட்ரோல்ஸுக்கு தகவல் கொடுத்தீங்களா சார்?''

''தகவல் கொடுத்தேன். பட் அவங்களால ட்ரேஸ் பண்ண முடியலை. கார் அதுக்குள்ள போக வேண்டிய இடம் போய் சேர்ந்து இருக்கணும்.''

''இப்ப என்ன சார் பண்றது?''

''புரியலை... பட்... ஒரு விஷயம் நிச்சயம். ளைக்குக் காலையில் ஸ்டேஷனுக்கு வரும்போது நமக்காக ஒரு மோசமான செய்தி டெலிபோன்ல காத்திட்டிருக்கும்.''

## 26

நித்தியன் முகுந்தனை பயமாய் பார்த்தபடி கேட்டான்.

''முகுந்தன்! உன்னோட பேச்சும் சரி நடத்தையும் சரி எல்லாமே வித்தியாசமா இருக்கு. விசாலி எங்கே..? இது யாரோட பங்களா...? சாந்தாவை எதுக்காக இங்கே கொண்டு வந்து...?''

முகுந்தன் கையமர்த்தினான். ''இப்படி ஒட்டு மொத்தமா கேள்விகளைக் கேட்டா... எப்படி பதில் சொல்ல முடியும் நித்தியன்? உன்னோட முதல் கேள்வி



என்ன விசாலி எங்கே. விசாலிக்கும் இப்போ நடந்துட்டிருக்கிற சம்பவங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவ இந்நேரம் அவளோட வீட்ல படுத்து நிம்மதியாய் தூங்கிட்டிருப்பா. ரெண்டாவது கேள்வி. இது யாரோட பங்களா?

இது பிரபல தொழில் அதிபர் கமலசேகரோட பங்களா. அவர் எனக்கு தொழில் முறையில் நெருங்கின ஃப்ரண்ட் எங்கிற விஷயம் உனக்குத் தெரியும். உன்னோட மூணாவது கேள்வி சாந்தாவை எதுக்காக இங்கே கொண்டு வந்து இப்படி மயக்கமா படுக்கப் போட்டிருக்க? இந்த கேள்விக்கு கொஞ்சம் நீளமா பதில் சொல்லணும். கேட்க உனக்கு பொறுமை இருக்கா நித்தியன்?''

நித்தியன் மனதில் இப்போது புதிதாய் ஒரு பயம் முளைத்திருக்க முகுந்தனையே விழிகள் விரியப் பார்த்தபடி நின்றிருந்தான். அவன் தொடர்ந்தான்.

''நித்தியன்! என்னோட தொழில் ரீதியான ஃப்ரண்ட் கமலசேகருக்கு எந்த ஒரு அழகான பெண்ணும் கண்ணுல பட்டுடக்கூடாது. பட்டுட்டா தொட்டுப் பார்க்கிற வரை அவர் விடமாட்டார். நல்லி சில்க்ஸுக்கு நாம சாந்தாவுக்காக கல்யாணப் புடவை எடுக்கப் போனபோது அந்தப் பக்கமா கார்ல வந்த கமலசேகரோட பார்வையில் சாந்தா பட்டிருக்கா. அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே அவர் கிட்டயிருந்து எனக்கு அவசர அழைப்பு. போனேன்.

சாந்தாவைப் பத்தி விசாரிச்சார். நான் விபரம் சொன்னேன். அவர் அதையெல்லாம் காதிலேயே போட்டுக்கலை. சாந்தாவை நான் தொட்டுப் பார்க்கணும்னு சொன்னார்.

அது முடியாத காரியம் ஸார்ன்னு சொன்னேன்.

அந்த பெண்ணோட வாழ்க்கை பாழாயிடும்னு நினைச்சு பயப்படறியா... உனக்கு அந்த பயமே வேண்டாம். சாந்தாவை நான் தொட்ட விஷயம் அவளுக்கே தெரியாதபடி செய்ய இந்த செடட்டிவ் மாத்திரைகளால் முடியும். அவ உன்னோட வீட்டுக்கு

வரும்போது இந்த மாத்திரையை ஏதாவது 'ட்ரிங்க்'ஸில் போட்டுக் கொடுத்துட்டு எனக்கு போன் பண்ணு. நான் வந்து சத்தம் இல்லாமே காரியத்தை முடிச்சுடறேன்னு சொன்னார். நான் அதுக்கு வேண்டாம் ஸார். இது பாவம்னு சொன்னேன்.

கமலசேகர் சிரிச்சார். அந்த பாவத்துக்கு ஏதாவது ரேட் போட்டுக்கலாமான்னு கேட்டார். நித்தியன்! உனக்கு தெரியுமோ தெரியாதோ கமலசேகர் என்னோட பிஸினஸுக்கு ரெண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் கடன் கொடுத்திருக்கார். அதுதவிர, நான் மேனுபாக்ஸர் பண்ற டெக்ஸ்டைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸுக்கு லட்சக்கணக்கில் ஆர்டர் தர்றதும் அவர்தான். சாந்தாவைத் தொடறதுக்காக நான் அவரை அனுமதிச்சா கடன் ரெண்டு லட்ச ரூபாய் தள்ளுபடி செய்யப்படுமென்று சொன்னார்.

அது மட்டுமில்லை. அவர் மில்ஸ் சம்பந்தப்பட்ட எல்லா ஆர்டர்களையும் எனக்கே தர்றதா ப்ராமிஸ் பண்ணினார். நித்தியன்! நீ ஒரு நிமிஷம் நினைச்சுப்பாரு... ரெண்டு லட்ச ரூபாய் கடன் தள்ளுபடி. மாசத்துக்கு பத்து லட்ச ரூபாய் ஆர்டர். இந்த வாய்ப்பை இழக்க எனக்கு மனசு வருமா? இந்த மாபெரும் பம்பர் பரிசுக்கு நான் பண்ண வேண்டிய ஒரே ஒரு காரியம் சாந்தாவை ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு அவளுக்கே தெரியாம அவ உடம்பை வாடகைக்கு விடணும். இந்த சுலபமான வேலைக்கு சரின்னு தலையாட்டி வெச்சேன்.

என்னோட அதிர்ஷ்டம் சாந்தா போலீஸுக்கு பயந்து என்னோட வீட்டிலேயே தங்கும்படியாச்சு. செடட்டிவ் மாத்திரைகளை கூல்ட்ரிங்க்ஸ்ல கலந்து குடுத்து சாந்தாவை குடிக்க வெச்சு மயக்கத்துக்குப் போனதும் கமலசேகருக்கு போன் பண்ணி வரவழைச்சேன். அவரும் வந்தார். மயக்கத்துல கிடந்த சாந்தாவை தொட்டார்.

தொட்டதுமே ஒரு பிரளயம் நடந்தது. கூல் ட்ரிங்க்ஸில் கலந்து கொடுத்த மயக்க மருந்து



மாத்திரைகள் சரியாய் வேலை செய்யாததால் சுயநினைவோடு இருந்த சாந்தா கமலசேகரை எதிர்த்துப் போராட ஆரம்பிச்சுட்டா. போராட்டத்தோட விளைவு சாந்தா தன் கைக்கு கிடைச்ச பித்தளை ஃப்ளவர்வாஷினாலே கமலசேகரின் பின்னந் தலையில் ஒரு போடு போட ரத்தசேதம் அதிகமாகி - ஆள் இப்போ தலையில் பாண்டேஜ் கட்டோட வீட்ல ரெஸ்டில் இருக்கார். கொஞ்சம் உடம்பு தேறினதும் சாந்தாவை தொட்டுப் பார்க்கிறதுக்காக இங்கே வந்துடுவார்."

"அடப்பாவி" நித்தியன் பெரிய குரலெடுத்து கத்த, முகுந்தன் கையமர்த்தி புன்னகைத்தான்.

"சாந்தாவும் இதே மாதிரிதான் என்னைத் திட்ட ஆரம்பிச்சா. அவளை வெளியே விட்டா... எல்லா உண்மைகளும் வெளியே வந்து நாங்க போலீஸ் லாக்கப்புக்குள்ளே போக வேண்டி வரும்ங்கிறதுக்காகத்தான் சாந்தாவை இங்கே கொண்டு வந்து வெச்சிருக்கோம். கமலசேகர் உடம்பு தேறி அவளை ஆசைதீர தொட்டுப் பார்த்ததும் சாந்தா இந்த உலகத்துல உயிரோடு இருக்கமாட்டா. இப்படி எல்லாம் திட்டம் போட்டுப் பண்ணினாலும் போலீஸை நினைக்கும்போது கொஞ்சம் பக்னுதான் இருக்கு. போலீஸ் என்னை மோப்பம் பிடிச்சுடக் கூடாதேங்கிறதுக்காக ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் ஒரு புது நடவடிக்கையைத் திட்டத்துல சேர்த்தேன். சாந்தாவைப் பத்தி கவலைப்படற, மிகமிக அதிகமா கவலைப்படற ஜீவன் நீதான். நீ உயிரோடு இருந்தா தினசரி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் 'சாந்தா என்ன ஆனாள்'னு நச்சரிச்சுக்கிட்டே இருப்ப. அந்த நச்சரிப்பை தாங்கிக்க முடியாமே சாந்தாவோட கேஸை தீவிரமான விசாரணைக்கு உட்படுத்துவாங்க. அதனால சாந்தாவோடு சேர்த்து உன்னையும் இல்லாமே பண்ணிட்டா விவகாரம் வேற திசைக்குத் திரும்பிடும். நீயும் சாந்தாவும் ஊரைவிட்டே ஓடிப் போய் விட்டதாகக் கூட என்னால கதை கட்டிப்பேச

முடியும். அது உண்மைதான்னு எல்லாரையும் நம்ப வைக்க முடியும்.''

முகுந்தன் சொல்லிக் கொண்டே நித்தியனை நோக்கி பிஸ்டலை உயர்த்தினான்.

நித்தியன் பயம் உறைந்து போன விழிகளோடு பின்வாங்கி பின்பக்க சுவருக்கு முட்டிக்கொண்டு நின்றான்.

''ஸாரி நித்தியன்! உயிர் காப்பான் தோழன்னு பொதுவா சொல்லவாங்க. நம்ம விஷயத்துல உயிர் எடுப்பான் தோழன்னு ஆயிடுச்சு. எனக்கு வேற வழியில்லை நித்தியன்! போலீஸ்கிட்டேயிருந்து நான் தப்பிக்கணும்னா உன்னையும் சாந்தாவையும் இந்த உலகத்தைவிட்டே துரத்தியாகணும்.

உன்னை இன்னிக்கு அனுப்பி வெச்சுடறேன். ரெண்டு நாள் கழிச்சு கமலசேகர் சாந்தாவைத் தொட்டு முடிச்சதும் அவளையும் உன்னோட இடத்துக்கே அனுப்பி வைக்கிறேன். உங்க ரெண்டு பேர் உடம்பையும் கச்சிதமா டிஸ்போஸ் பண்ணி சாம்பலாக்க கமலசேகரோட உரக்கம்பெனி ரெடியாவே இருக்கு! மறுபடியும் ஸாரி நித்தியன்... உன்னை இப்போ சுடப்போறேன். பயமாயிருந்தா கண்ணை மூடிக்க.''

முகுந்தன் பிஸ்டலை உயர்த்தி நித்தியனைக் குறி பார்த்த விநாடி... மணிக்கட்டில் பலமாய் ஒரு அடி விழ பிஸ்டல் தெறித்து பக்கத்து சோபாவில் விழுந்தது. முகுந்தன் அதிர்ச்சியோடு திரும்பிப் பார்க்க அந்த இரண்டு பேர் தெரிந்தார்கள். சம்மர் கிராப்பில் உயரமாய் சிவப்பாய் தாட்டியாய் இருந்தார்கள். இளைஞர்கள். ஒருவனின் கையில் ஸ்டீல்ராடும் இன்னொருவனின் கையில் ரிவால்வரும் தெரிந்தது.

ரிவால்வர் பேர்வழி முகுந்தனைக் கோழிக் குஞ்சாய் அமுத்திக் கொள்ள ஸ்டீல்ராட் பேர்வழி நித்தியனை நோக்கிப் போனான். ஒரு புன்னகை யோடு தோளில் கையை வைத்தான். நல்ல ஆங்கிலத்தில் பேசினான்.



''மிஸ்டர் நித்தியன்! நானும் என்னோடு வந்த அந்த நபரும் போலீஸ் டிபார்ட்மெண்ட் ஆசாமிகள். இன்னும் குறிப்பாய் சொல்லப் போனால் போதை மருந்து ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள். போதை மருந்து விவகாரத்தில் ஏர்போர்ட்டில் கைது செய்யப்பட்ட நீங்கள் கோர்ட்டில் தண்டனை பெற்று ஒரு வருஷம் மும்பை சிறையில் இருந்துவிட்டு சில நாட்களுக்கு முன் விடுதலையாகி சென்னை வந்தீர்கள். எங்கள் டிபார்ட்மெண்ட் சட்டதிட்டப்படி போதை மருந்து கேஸில் 'தண்டினையடைந்து விடுதலையாகும் எந்த ஒரு நபரையும் ஒரு ஆறு மாத காலத்துக்கு க்ளோஸ் ஃபாலோ அப்' செய்து அந்த நபர்களைக் கண்காணிப்பது வழக்கம். மும்பை சிறையிலிருந்து விடுதலையான உங்களையும் கடந்த சில தினங்களாக நானும் இவரும் மாறி மாறி இருபத்திநாலு மணி நேரமும் கண்காணித்து வந்தோம். இன்றைக்கு நள்ளிரவில் நீங்கள் கார் எடுத்துக் கொண்டு வேகமாய் கிளம்பியதும் நாங்களும் உங்களைப் பின் தொடர்ந்தோம். இந்த பங்களாவுக்கு வந்தோம். தமிழ்மொழி எங்களுக்குப் புரியாவிட்டாலும் நீங்கள் ஏதோ ஒரு ஆபத்தில் மாட்டியிருப்பது புரிந்தது. அதனால்தான் உங்களை சுட முயன்ற உங்கள் நண்பரை மடக்கினோம்.''

நித்தியன் கண்களில் நன்றி பளபளத்தது. ''தேங்க்யூ வெரிமச் ஸார். இந்த இக்கட்டான நிலைமையில் வந்து காப்பாற்றிய உங்களுக்கு என்னுடைய நன்றி. உங்களிடம் எல்லா விஷயத்தையும் சொல்வதற்கு முன்பாக இன்ஸ்பெக்டர் குமரனுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.''

''இதோ செல்போன். நீங்களே தகவல் கொடுத்துவிடுங்கள்.''

அந்த அதிகாரி செல்போனை நீட்ட, நித்தியன் வாங்கி டயலில் எண்களைத் தட்ட ஆரம்பித்தான்.

* * *

இணமான ரோஜா மாலைகளில் நிரம்பியிருந்தார்கள் நித்தியனும் சாந்தாவும். காலையில் கோயிலில் எளிமையாகக் கல்யாணத்தை முடித்துக் கொண்டபின் ஹோட்டல் ரெஸிடென்ஸி ரூஃப் கார்டனில் ரிசப்ஷன்.

ஆர்க்கெஸ்ட்ரா மூலையில் வாசித்துக் கொண்டிருக்க... நண்பர்களும் உறவினர்களுமாய் சுமார் நூறு பேர் சந்தோஷ முகங்களோடு வளைய வளைய வந்தார்கள். ருத்ரமூர்த்தி வாசலில் நின்று ரிசப்ஷனுக்கு வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். விசாலி வாய்கொள்ளாச் சிரிப்போடு வந்து ஒரு பெரிய பொக்கேயை இரண்டு பேர் கைகளிலும் திணித்துவிட்டு சொன்னாள்.

''நித்தியன்... ஒரு சின்ன கோரிக்கை.''

''என்ன?''

''இது டிசம்பர் மாசம் பௌர்ணமி நாள். அடுத்த வருஷம் டிசம்பர் மாசம் பௌர்ணமி நாள் அன்னிக்கு உங்களைப் பார்க்கும்போது கையில் ஒரு ஜூனியர் நித்தியனோ ஜூனியர் சாந்தாவோ இருக்கணும்.''

நித்தியன் புன்னகைத்தான்.

''கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு இன்று இரவு முதலே நடைமுறைக்கு வரும்.''

சாந்தா வெட்கத்தோடு நித்தியனின் விலாவில் குத்திவிட்டு ''என்னங்க நீங்க'' என்று சிணுங்க விசாலி வாய்விட்டு சிரித்தாள். விசாலியின் அந்த சிரிப்பில் மெல்லிய சோகம் புதைந்து இருந்தது என்பது அங்கிருந்த யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை. நித்தியன் உட்பட.

(முற்றும்)

Owned & Published by **R.M.KUMARAVEL** on behalf of **RAAJ SRI PUBLICATIONS**, 20, Murugappa Achari Street, Chepauk, Chennai-600 005.Printed by R.M.Kumaravel at Wonder Prints, Chennai-5. Editor: **R.M.KUMARAVEL**.



# காலச் சிறை

காயமில்லை காயமில்லை
வலி எதற்கு!
காயப்பட்ட கனவினை
புதைப்பதற்கா?

காணவில்லை காணவில்லை
சுகம் எதற்கு?
கண்டுவிட்ட பின்பு நம்மை
வதைப்பதற்கா?

வாழ்க்கை என்பதே
வழக்கா! - இது
கால தேவனின் கணக்கா?
வாழும் காலமே இழப்பா - இந்த
வதையின் பெயருதான் பிழைப்பா!

ஆயுள் போகுதே பொறுப்பா(ய்)! - துயர்
ஆட்டிவைக்குதோ நெருப்பாய்!
தேயும் பிறையைபோல் இருப்பார் - சுகம்
தேடும் வாழ்வையே வெறுப்பார்!

வேட்கை வந்த பின் எதையோ
வேண்டி கேட்கும் மனம் சிதையோ!
ஆற்றுப்படுத்தும் ஒரு காற்றாய்
ஆசை தேடி அதில் தோற்றாய்!

நாட்கள் என்ற சிறை
நமக்கு இருக்கும் வரை
உயிரின் விடுதலைக்கு தடையா?
உண்மை கூறடா மடையா!

- **வெ. தமிழழகன்**, சேலம்